Computer Today

ஏப்ரல் 2011

# கம்ப்யூட்டர் டுடே

கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

தகவல் தொழில்நுட்ப மாத இதழ்

விலை: 50/-




இலங்கையின் முதலாவது தேசிய தமிழ் கணினிச் சஞ்சிகை

# Towards Achieving Your Career Dreams

## Globally Recognized Qualifications Delivered in Sri Lanka




### Faculty of ICT

- Degree/ Top Up Degree Programes
- Bachelor of Computer Science – BCS(Hons)
- B.Sc. (Hons) Computer Science (Software Engineering)
- B.Sc. (Hons) Computer Systems Engineering (Computer Networks)
- B.Sc. (Hons) Computing Digital Media Development
- Higher Diploma Programmes
- IDM Higher Diploma in ICT Specialized in
- Software Development | Networking | Multimedia
- Foundation Diploma Programmes
- IDM Diploma in ICT Specialized in
- Software Development | Networking | Multimedia

### Faculty of Management

- Degree/ Top Up Degree Programes
- B.A. (Hons) Business Management
- B.A. (Hons) Marketing
- Higher Diploma Programmes
- IDM Higher Diploma in Management Specialized in
- Management | Marketing | Finance
- Foundation Diploma Programmes
- IDM Diploma in Management Specialized in
- Management | Marketing | Finance


### We are located in the capital city of Colombo, in a peaceful learning environment




Welcoming Faculty, where your Higher Education Begins...




CCTV Managed, State of the art ICT facility, with WiFi Access.




The Student Learning Center, providing Library & Study Room





Our Air Conditioned, Multimedia Lecture Theaters,
where you get to share the expert knowledge & Experiences...

IDM
City Campus # 3



**IDM City Campus #3**
#16, 42nd Lane, Colombo 06, Sri Lanka
Tel : +94 11 2 361 801 Fax : +94 11 2 361 807
www.idmcc3.lk info@idmcc3.lk

705507





# USB 3.0




**USB**, தனி நபர் கணினிப் பாவனை வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான ஒரு ஊடக இணைப்பியாக இருந்து வருகி றது. 6 பில்லியனுக்கும் மேற்பட்ட பொருட்கள் சந்தையில் உள்ளன, 2 பில்லியன் அளவு வரவுள்ளது.

தற்போது USB 3.0 புதிய இணைப்பு ஊடகமானது அதி வேகத்திறனுடன் வெளிவந்துள்ளது. இந்தப் புதிய இணைப்பு ஊடகத்கின் சிறப்பு என்னவெனில் முன்னைய USB 2.0 இணைப்புக்கு பொருத்தமாகவும், கூடிய வேகத்துடனும், குறைந்த மின்சக்தி கையாளுகையையும் ஆகும்.

இவற்றின் செயற்திறன் கவனிக்கத்தக்கது. ஆராய்ச்சிகளின்படி USB 2.0இல் தகவல் பறிமாற்றத்திற்கு 1நிமிட-1..5நிமிடம் வரை காத்திருக்கவேண்டியுள்ளது. எனவே வேகத்தை அதிகரிக்க செய்யவேண்டியுள்ளது. அது தான் USB SuperSpeed3.0 இன் வேகம் 5Gbps Data rate (Hi-Speed USB 2.0 - 480Mbps). நிச்சயமாக தற்போதைய தேவைகளுக்கு உதவியாக இருக்கும் உதாரணமாக USB 2.0 வை பயன்படுத்தி ஒரு 25GB HD திரைப்படத்தைத் தகவல் பரிமாற்றம் செய்ய எடுக்கும் நேரம்13.9 நிமிடம், இதையே USB 3.0 ஐ பயன்படுத்தி 70 செக்கனில் செய்யமுடியும். கணினியில் அதிகளவு தரவு பரிமாற்றத்திற்கு, எவ்வளவு உகந்தது என்று சிந்தித்துப் பாருங்கள்.

மேலும், மின்சக்தியானது இன்றைய காவிசெல்லக்கூடிய இலத்திரனியல் சாதகங்களுக்கு முக்கியமான ஒன்றாக இருக்கிறது. உதாரணமாக Laptop ஆனது Battery இல் இயங்கும்போது USB 2.0 சாதனங்களை இணைத்து பாவத்தால் அதிக battery மின்சக்தி விரையமாகின்றது ஆனால் USB 3.0 அவ்வாறு இல்லை. அதுமட்டுமல்லாமல் நேரம் மிகுதி.

இவையெல்லாவற்றையும் பார்க்கும்போது USB 3.0யின் பங்கு அடுத்த சில வருடங்களுக்கு முக்கியமானதாக இருக்கும்.

வாசகர்களே!
புதுவருட சிறப்பு இதழாக வெளிவந்துள்ள எமது இந்த இதழ் 64 பக்கங்களுடன் ஆனால் அதே 50 ரூபாய் விலையிலேயே உங்களின் கைகளில் தந்திருக்கிறோம்.
உங்களது எண்ணங்களையும் கருத்துக்களையும் எழுதி அனுப்புங்கள்!


## கம்ப்யூட்டர் ருடே

கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

அச்சிட்டு வெளியிடுபவர்கள் :

**'Uthayan IT Island'**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 021 5677600**

ஆசிரியர் பீடம்
ஆசிரியர் : சி.அனுராஜ்
ஆசிரியர் குழு : ம.அருள்குமரன்
த.தவரூபன்
சி.கிஷோகுமார்
சு.பிரதீப்


## கம்ப்யூட்டர் ருடேயில் உங்கள் ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா?

தெளிவான கையெழுத்தில்
**கம்ப்யூட்டர் ருடே**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**




**அல்லது**

info@computertoday.lk or
ComToday@uthayan.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.

**கம்ப்யூட்டர் ருடே**யில் பிரசுரமாகும் ஆக்கங்களை ஆசிரியரின் அனுமதியின்றி பகுதியாகவோ முழுமையாகவோ மறுபிரசுரம் செய்ய இயலாது.

# கம்ப்யூட்டர் ருடே

ஏப்ரல் 2011

வாசகர்களுக்கு வணக்கம்!

அன்பு வாசகர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள். கூடிய பக்கங்களுடன் இந்த இதழில் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.

தமிழ்மொழி மூலமான தகவல் தொழில்நுட்பச் செயற்பாடானது எமது மக்கள் மத்தியில் இன்னமும் ஒரு கற்பனை வடிவமாகவே இருக்கிறது. ஆனாலும் இன்றைய காலகட்டத்தில் அவற்றின் பெரும் பகுதி நனவாகி வருகிறது என்பதே உண்மை.

இருந்தாலும் அவை மக்களை சரியாக சென்றடைகின்றதா என்றால் அது இல்லை என்றே கூறவேண்டும். அது மட்டுமல்லாமல் அவற்றின் பாவனை முறை தொடர்பான சரியான விளக்கம் இன்மையும் தமிழில் தகவல் தொழில்நுட்பம் என்ற விடயத்தில் மக்கள் பெரிதாக நாட்டம் கொள்ளாமைக்கான காரணங்களாக கூறமுடியும்.

நிற்க, தமிழ் தகவல் தொழிநுட்பம் என்றாலே இந்தியாதான் என்கிற ஒரு நிலை இன்றுவரை நிலவிவருவதும் அதுதொடர்பான எமது மக்களினிடையே ஆர்வமின்மையை ஏற்படுத்த ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. அத்துடன் 'உத்தமம்' என்று அழைக்கப்படும் 'உலகத் தமிழ் தகவல் தொழிநுட்ப மன்றம்' பெரும்பாலும் தமிழ்நாட்டு தமிழர்களை சார்ந்தே இயங்குவதால் ஈழத்தமிழர்களாகிய எமக்கான தரப்படுத்தல்கள், எமது எதிர்பார்ப்புக்களை நிவர்த்திசெய்தல் என்பன இல்லாமலேயே போயுள்ளன.

இந்த மாதிரியான பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமெனில் எம்மவர்களினால் ஆளப்படுகின்ற தமிழ் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஒரு அமைப்பு கட்டாயம் தேவை. இந்தத் துறையில் உள்ள புத்திஜீவிகள் அனைவரும் சிந்திக்க வேண்டிய ஒன்றாக இது உள்ளது. எமக்கிடையேயான கருத்து முரண்பாடுகளை மறந்து மொழிக்காக இணைவோம்.

மீண்டும் இன்னும் ஒரு **"கம்ப்யூட்டர் ருடே"** இதழின் ஊடாக சந்திக்கும் உறுதியுடன்...

அன்புடன்

ஆசிரியர்.

# உள்ளே...


- இணையத்தள வடிவமைப்புப் போட்டி: பரிசளிப்பு நிகழ்வு 3
- AutoCAD தொடர் 5
- Huawei E156 / E156B / E156C / E156G Broadband Dongleஐ எல்லா வலையமைப்பிலும் பாவிக்க என்ன வழி ? 8
- எந்த மென்பொருளும் பயன்படுத்தாமல் வைரஸ் பிரச்சனைகளுக்கு வைப்பமா ஆப்பு! 9
- ஐ பொட் 12
- ICT தொடர் 16
- கணினிக் கவிதை 18
- PHP MySQL 19
- கணினித்திரைகள் வாங்கும்போது கவனிக்கப்பட வேண்டியவை 21
- கணினி பற்றிய ஒரு நோக்கு. 22
- கைகோர்க்கும் ஜாம்பவான்கள் 25
- சிறுவயதிலேயே கணினிக் கல்வி எதிர்காலத்துக்கு அவசியம் 26
- Photoshop CS4 32
- Excel 35
- GNU Linux 39
- Java 41
- பெரிய கோப்புகளை வெட்டவும் ஒட்டவும் 43
- சட்டைப் பையில் அன்ரி வைரஸ் 44
- Mr மெமறி பதில்கள் 46
- Joomla 50
- மின்வணிகம் [e-commerce] 52
- கணினிக் கற்கை நெறிகளும் வேலைவாய்ப்புகளும் 54
- கணினி அகராதி 56
- கணினியைத் தூசு தட்டும் முறை 57
- KEY WORDS 4 KIDZ 58
- Word 59
- கட்டற்ற இணையப்பாவனைக்கு அகலப்பட்டை இணைப்பு 62


வாசகர்களே!

உங்களது ஆக்கங்கள், கருத்துகள் அனைத்தையும் நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

அடுத்த இதழ் ஆரோக்கியமாக வெளிவர உங்களது பங்களிப்பு மிக அவசியம்.


தொடர்புகளுக்கு:

**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி: 021 5 677 600**
info@computertoday.lk

# இணையத்தள வடிவமைப்பு போட்டி பரிசளிப்பு நிகழ்வு

LAKapps
*Localizing the Internet*

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் உள்ளூர் மயமாக்கப்பட்ட செயலிகளிற்கான சிறப்புமையம் (The Centre of Excellence in Localised Applications) ஆனது யாழ் மாவட்டத்தில் "உள்ளூர்மொழிகளில் கணினி" என்ற செயற்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான இணையத்தள வடிவமைப்பு போட்டி ஒன்றினை கடந்த ஆண்டு நடாத்தியது. அதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் இம்மாதம் 5ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகண கல்விப் பணிப்பாளர் திரு. பி. விக்னேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டார். இப்பரிசளிப்பு விழாவிற்கு யாழ். கல்வி வலய பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலய பணிப்பாளர், புலோலி கணினி வள நிலையத்தின் முகாமையாளர், வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர், புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர், யாழ் இந்து மகளீர் கல்லூரி அதிபர், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர் மற்றும் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய பிரதிஅதிபர் ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பிரதம விருந்தினர் உரையாற்றுகையில் இப்போட்டிகளின் மூலம் மாணவர்களின் திறமைகள் வெளிப்படுத்தப் படுவதாகவும் மற்றும் அவர்கள் ஊக்கம் பெறுவதாகவும் குறிப்பிட்டார். மேலும் இவ்வாறான போட்டிகளினால் மாணவர் களின் கல்வி நடவடிக்கை எந்தவகையிலும் பாதிக்கப்பட மாட்டாது எனவும் இவ்வாறான போட்டிகளை எதிர்வரும் காலங்களில் நடாத்த அதிபர்களும், ஆசிரியர்களும் மற்றும் மாணவர்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் தனது உரையில் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பரிசில்கள் வழங்கும் நிகழ்வில், 1ம், 2ம் மற்றும் மூன்றாம் இடம்பெற்ற பாடசாலை களினிடைய அதிபர்களுக்கு பிரதம விருந்தினர்கள் அவர்கள் கேடயங்களை வழங்கினார். அதனைத்தொடந்து அதில் பங்கெடுத்த மாணவர்களுக்கும் கேடயங்களும் சான்றி தழ்களும் வழங்கப்பட்டன.



மங்கள விளக்கேற்றும் பிரதம விருந்தினர்



நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள்

இதில் பரிசில்பெற்ற மாணவர் விபரம் வருமாறு.

1ம் இடம் - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

மாணவர் குழு - அனோஷா இக்நேசியஸ், சேயாள் வேல்முருகன், றொஷானி அன்ரன் ராஜகுமார், சரண்யா உதயகுமார்

2ம் இடம் - யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை

மாணவர் குழு - சுவஸ்த்திகா கிருஸ்ணகாந்தன், சிவதர்சினி சிவயோகநாதன், துஷியா சண்முகநாதன்

3ம் இடம் - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

மாணவர் குழு - நதியா இராஜேஸ்வரன், திலக்சி சந்திரசேகர், துவாரகா செல்வராஜா

வலய மட்ட சிறப்புப் பரிசில் பெற்றவர்கள்

யாழ் கல்வி வலயம்

யா/இந்துக் கல்லூரி - கயிலாயபதி சுதாகர்

வடமராட்சி கல்வி வலயம்

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை - ஜனனி பாலசுப்ரமணியம், பிரவீனா பத்மநாதன், காயத்ரி சிவம், சாதனா பரமநாதன், தீபிகா சண்முகராஜா

தென்மராட்சி கல்வி வலயம்

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் -மகேஸ்வரன் சர்வேசன், கௌசிகா கணேஷ், இந்திகா சிவநேசன், ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ரூபகாணன், சித்திராங்கி சற்குணநாதன்,

சாவகச்சேரி இந்துக்கல்லூரி - சந்திரசேகர் தனுஜன், சிவபாலன் கெங்கா, செல்வராசா தர்சிகன், ஜெயசீலன் ஜனந்தன், ஜெயகணேசன் ஜெயதீபன்

வலிகாம கல்வி வலயம்

மகாஜனக் கல்லூரி - சௌந்தர்ராஜன் சிறிஹர்ஷன்


மகாஜனக் கல்லூரி - இராசேந்திரம் ஜனார்த்தனன்



1ஆம் இடத்திற்கான கிண்ணத்தைப் பெறும் வேம்படி அதிபர்



வெற்றிக் கிண்ணத்தைப் பெறும் மாணவிகளில் ஒருவர்



நன்றியுரை நிகழ்த்தும் மாணவி





AutoCAD ஆனது கணினி உதவியுடன் வரைபுகளை வரையும் ஒரு தொகுப்பாகும். இது **Autodesk** நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இதனைப் போலவே வேறுபல **CAD** தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இருப்பினும் **AutoCAD** பலராலும் பயன்படுத்தப்படும் ஒரு மென்பொருள் தொகுப்பாகும்.

பொறியியல், கட்டடபொறியியல், மின் பொறியியல், விமானபொறியியல் போன்ற தொழில்சார் துறைகளில் அதிகளவில் பாவிக்கப் பட்டு வருகிறது. ஒவ்வொருமுறையும் பல புதிய வசதிகளுடன் புதிய பதிப்பாக வெளிவந்தும் கொண்டிருக்கிறது.

**AutoCAD** இந்தத் தொடரில் நீங்கள் **AutoCAD** இன் அடிப்படையை கற்றுக்கொள்ளுவீர்கள். கற்றுக்கொள்ளப்போகும் **AutoCAD** கட்டளைகள், விளக்கங்கள் யாவும் எந்த ஒரு **AutoCAD** பதிப்புக்கும் பொறுத்தமானதாக இருக்கும். நாங்கள் **AutoCAD** பதிப்பு 2010 பற்றி பார்க்கப் போகின்றோம். இதன் முதல்பகுதி முடிவில் நீங்கள் இருபரிமான படங்களை வரைவதற்கு தேர்ச்சி பெற்று இருப்பீர்கள்.

படம் **AutoCAD Main window**




**AutoCAD ஐ open செய்யும் முறைகள்**




* Desktop இல் உள்ள icon ஐ Click செய்து AutoCAD ஐ open செய்யலாம்


* Click Start menu (Windows) ->(All) Programs -> Autodesk -> AutoCAD 2010 -> AutoCAD 2010 - English.

*{இவ்வாறு open செய்தால் மேலே காட்டப்பட்ட window தோன்றும். இதன் போது Workspace pop-up யில் click செய்து AutoCAD Classic ஐ தெரிவு செய்துகொள்ளவும். இதன் போது சற்றே menu க்களில் மாற்றங்கள் ஏற்பட்டு கீழே காட்டப்பட்வாறு window தோன்றும். AutoCAD Classic ,Tools களைக் கையாள்வதற்கு இலகுவாக இருக்கும். }*




மேலே உள்ள படம் Autocad தொகுப்பின் செயல்பாட்டு நிலைக்குரிய பகுதியாகும்

AutoCAD இல் வரையும் எந்த படமாக இருப்பினும் அது மிகத்துல்லியமாக இருக்கும். வரையப்படும் எல்லா வரைபுகளும் X,Y ஆள்கூறுகளை அடிப்படையாக கொண்டவை. AutoCADஇல் இது World Co-ordinate System(WCD)என கொள்ளப்படும். X,Y ஆள்கூறுகளை அறிந்து படவரைபுகளை வரையும் போது எமக்கு இலகுவாக இருக்கும். அருகே உள்ள படம் (உங்களுக்கு விளக்கும்). தடித்த கோடு இணைந்துள்ள புள்ளிகளின் பெறுமானங்களையும் அவதானிக்க.





படம் X,Y co-ordinate

உற்பத்தி புள்ளி (0,0) இதை சார்ந்தே வரைபு வரையப்படும். படத்தில் உள்ளதின்படி (9,6) என்பது ஒன்பது பகுதி X அச்சியிலும், ஆறு பகுதி Y அச்சிலும் உள்ளது. அடுத்ததாக உள்ள (-10,-4) என்பது பத்து பகுதி மறை X அச்சிலும், நான்கு பகுதி மறை Y அச்சிலும் உள்ளது.

(-10.-4) புள்ளியையும் (9.6) புள்ளியையும் இனைத்து கோடு வரையப்படும். எப்போதும் Xயின் பெறுமானம் முதலிலும் அதனை தொடர்ந்து yயின் பொறுமானமும் கொடுக்கப்படவேண்டும்.

* கோடு ஒன்று வரைவதற்கு ஒரு அரம்பப்புள்ளி Start point, இறுதிபுள்ளி End point என இரு புள்ளிகள் உண்டு





படத்தில் Aயில் இருந்து Bக்கு ஒரு கோடும் Bயில் இருந்து Cக்கு ஒரு கோடும் வரையப்பட்டுள்ளது. start point A க்கு B End point பின்பு Cக்கு Start point B இறுதியாக C Endpoint

AutoCAD இல் படங்களை வாரைவதற்கு கட்டளைகளை உள்வாங்கும் பகுதியில் (command line)மூன்று முறைகளால் தரவுகளை உள்ளீடுசெய்யாளம். முதலில் எமது வரைபுக்கு எற்ற வகையில் எந்தமுறையை பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை தெரிவு செய்துக்கொள்ளவேண்டும்.


**Absolute Co-ordinate system:- (Syntax: x,y)**

இம்முறையானது வரைபு படத்தாளில் புள்ளிகளைக் குறித்து வரைவது போன்றதாகும். மையப் புள்ளியை சார்ந்து(0,0) படம் வரையப்படும். ஒரு படத்தை வரையும் போது புள்ளி மையத்திலிருந்து எங்குள்ளது என்பதை உள்ளீடு செய்யவேண்டும்.





**Relative Co-ordinate system (Syntax: @x,y) (@ சார்பு என்பதை குறிக்கும்)**

முதலாவது புள்ளியில் இருந்து அதனை சார்ந்து மற்றைய புள்ளிகள் வரையப்படும். ஒரு கோட்டினை வரையும் போது முதல் புள்ளியை x,yஇல் குறித்தபின்னர், இரண்டாம் புள்ளி முதல் புள்ளியை சார்ந்து x,yஇல் குறிக்கப்படும். படத்தில் உள்ளபடி Aயை சார்ந்து B யும், Bயை சார்ந்து Cயும் வரையப்பட்டுள்ளது




**Polar Co-ordinates system (Syntax @D< A) D = Distance (தூரம்) , A= Angle (கோணம்).**

இம் முறையை நாம் பயன்படுத்தும் போது தூரம், கோணம் தெரிந்திருக்கவேண்டும். ஒரு கோடு வரைய வேண்டுமாயின் முதல் புள்ளியில் இருந்து இரண்டாம் புள்ளிக்கு@D<A யினை கொடுத்தால் கோடு வரையப்படும்.




மேலே வரையப்பட்டுள்ள படங்கள் ஓரே மாதிரியானவை ஆனால் 3 முறைகளில் வரையப்பட்டுள்ளது.

(தொடரும்...)


உங்கள் ஆக்கங்கள் **கம்ப்யூட்டர் ருடே** சஞ்சிகையில் வெளிவர வேண்டுமா?
எழுதி அனுப்புங்கள்

**info@computertoday.lk OR**

**கம்ப்யூட்டர் ருடே**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# Huawei E156 / E156B / E156C / E156G Broadband Dongle ஐ
# எல்லா வலையமைப்பிலும் பாவிக்க என்ன வழி ?


HUAWEI

தற்போது அதிகரித்து வரும் இணையப்பாவனையில் USB Dongle இன் பங்கு முக்கியமானது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ADSL இணைப்பைப் பெற முடியாத இடங்களில் இந்த HSDPA/ UMTS தொழில்நுட்பத்தில் அமைந்த USB மொடங்களே பயன்படுத்தப்படுகின்றன.

இவை இலகுவாக எடுத்துச் செல்லக்கூடியதாக இருப்பதோடு, 3G, EDGE, WCDMA, HSDPA அல்லது GPRS உடன் கூடிய கைத்தொலைபேசி அலைவரிசைகளில் ஏதாவதொன்றைப் பயன்படுத்தி மிக இலகுவாக, அதி வேக இன்ரநெற் இணைப்பை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதனால் இவற்றின் பாவனை அதிகரித்து வருகின்றது.

டயலொக், மொபிரெல், எயார்ரெல் போன்ற நிறுவனங்களினூடாக இந்த வகையான இணைப்புக்களுடன் கூடிய HSDPA USB Dongle களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இவற்றில் உள்ள ஒரு பிரதிகூலம் யாதெனில் HSDPA Modem த்தை வழங்கும் இணையச் சேவை வழங்குநரின் SIM ஐ தவிர வேறெந்த வலையமைப்பினதும் SIM களை பயன்படுத்த முடியாத நிலையாகும். இந் நிலையில் வெவ்வேறு வலையமைப்புக்களுக்காக தனித்தனியே மொடம்களை வாங்குவதென்பது இயலாத காரியம்.

ஆனால் அதற்குத் தீர்வாக எந்த வலையமைப்பினதும் இணைப்பைப் பயன்படுத்தக் கூடிய வகையில் HSDPA Modem களும் சந்தையில் கிடைக்கின்றன ஆயினும் ஒப்பீட்டளவில் அவை கூடிய விலையிலேயே காணப்படுகின்றன.




எனவே HSDPA Modem த்தை வழங்கும் இணையச் சேவை வழங்குநரின் SIM ஐ தவிர வேறெந்த வலையமைப்பினதும் SIM களை பயன்படுத்த வேறென்ன வழி?

இதோ உங்கள் வினாவுக்கு ஒரு விடை

http://www.bb5.at/huawei.php?imei=****************

என்ற இணைய முகவரியை உங்கள் இணைய உலவியில் (Internet Browser) ரைப் செய்து முடிவில் ***** மாகக் குறிக்கப்பட்டுள்ள பகுதியில் உங்களிடமுள்ள HSDPA Modem த்தின் 15 இலக்கங்களைக் கொண்ட IMEI இலக்கத்தை ரைப் செய்து இணைய உலவியினை இயக்குங்கள்.

HSDPA Modem த்தின் Unlocking key திரையில் காட்சிப்படுத்தப்படும்.

அதன்பின் உங்களிடமுள்ள HSDPA Modem தில் வேறு வலையமைப்புக்குரிய SIM ஐ பயன்படுத்தும் போது உடனடியாகத் திரையில் HSDPA Modem தின் Unlocking key ஐ கோரும் திரை தென்படும். அத்திரையில் நீங்கள் பெற்றுக்கொண்ட Unlocking key ஐ வழங்கியதும் உங்கள் மொடம் தடை விலக்கப்பட்டு விடும். அதன் பின் எந்தவொரு வலையமைப்பினது இணைப்பையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

Enjoy!!!!




குறிப்பு : இதற்கென உள்ள Unlocking மென்பொருளை www.ruchirablog.com/tools/huawei-code-writer.rar என்ற முகவரியிலிருந்து Dowload செய்து பெற்றுக்கொண்டு அதனை இயக்கியும் Unlock செய்யலாம். இது சற்று கடினமான முறையாகும்.

# எந்த மென்பொருளும் பயன்படுத்தாமல் வைரஸ் பிரச்சனைகளுக்கு வைப்பமா ஆப்பு!







வி. ஐங்கரன்
**Software Developer**
சுதுமலை


கணினி வைரஸ்கள் கூர்மையான அறிவுடனும் தப்பான நோக்கத்துடனும் செயற்படுகின்ற சில மென்பொருள் வடிவமைப்பாளர்களால் உருவாக்கப்படுகின்றன. வைரஸை உருவாக்குபவர்கள் தப்பான எண்ணமுடையவர்கள் என்றாலும் அறிவுத்திறன் மிக்கவர்கள் என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

வைரஸ்கள் இரண்டு வேலைகளை செய்கின்றன. முதலாவது தன்னைப்போல புதிய வைரஸ்களை உருவாக்குவது. இரண்டாவது உங்கள் கணினிக்கு பாதிப்புகளை ஏற்படுத்துவது - தன்னை உருவாக்கியவரால் கொடுக்கப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றுவது. *(எந்திரன் படத்தில் Red Chip பொருந்தப்பட்ட ரேபோவை போல் நீங்கள் கற்பனை செய்து கொள்ளலாம்.)*



Flash அல்லது Memory Card ஐ கணினியுடன் இணைக்கும்போது Flash அல்லது Memory Card இல் வைரஸ் இருந்தால் Autorun மூலம் உடனடியாகவே உங்களுக்கு தெரியாமல் வைரஸ் செயற்பட்டு உங்கள் கணினியிலுள்ள முக்கியமான இடங்களில் பல வைரஸ்களை பரவச் செய்துவிடும். அனேகமான வைரஸ்கள் உங்கள் கணினியில் இருக்கும் மென்பொருட்களையும் (exe File களையும்) வைரஸாக மாற்றிவிடும். சில Antivirusகளை கூட செயலிழக்க செய்துவிடும். சில வைரஸ்கள் ஒவ்வொரு Folder களின் பெயரிலும் வைரஸ்களை உருவாக்கிவிடும். இதேபோல் ஒவ்வொரு Drive இற்குள்ளும் Autorun File களையும் வைரஸ்களையும் உருவாக்குகின்றன. இந்த Autorun File கள்தான் வைரஸ்களை பரப்புகின்றன. சில Autorun File களை அழிக்க முடியாமல் இருக்கும். நீங்கள் ஒரு Drive ஐ பல தடவை Open பண்ணினால் அந்த Drive இல் இருக்கும் பிரதான வைரஸ் நீங்கள் Open பண்ணிய எண்ணிக்கையளவு வைரஸ்களாக இயங்கி கொண்டிருக்கும். இதேபோல் சில வைரஸ்கள் இயங்குவதை Task Manager மூலம் End Process கொடுத்து நிறுத்து முயற்சித்தால் அவை பல வைரஸாக இயங்கும் இவற்றால் உங்கள் கணினியின் வேகம் குறைந்துவிடும்.

வைரஸை உருவாக்குபவர்கள் நீங்கள் எதிர்பார்க்காத அளவுக்கு (அவர்களின் தீய எண்ணங்களுக்கும், மூளை வளத்துக்கும் ஏற்ப) பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய வைரஸ்களை கூட உருவாக்கலாம். எனவே வைரஸ் வரமுன்னரே தடுத்துவிட்டடால் எமது கணினியை வைரஸ் பிரச்சனையில் இருந்து பாதுகாக்கலாம்.

### Flash, Memory Card இலிருந்து கணினிக்கு வைரஸ் பரவுவதை தடுத்தல்




Flash இலிருந்து இரண்டு விதமாக வைரஸ்கள் கணினிக்கு பரவுகின்றன. *(இங்கு Flash இற்கு குறிப்பிடப்படும் விடயங்கள் Memory Card இற்கும் பொருந்தும்.)*

முதலாவது Flashஐ கணினியுடன் இணைக்கும் போது உங்களுக்கு தெரியாமலே Autorun மூலம் கணினிக்கு வைரஸ் பரவுதல். அடுத்தது உங்கள் Flash இல் இருக்கும் வைரஸை அல்லது வைரஸாக மாறிய ஒரு file (exe file) ஐ நீங்கள் வைரஸ் என்று தெரியாமல் open பண்ணுவதால் கணினிக்கு வைரஸ் பரவுதல்.

வைரஸ் உங்களால் பரவுவதை தடுப்பதற்கு உங்கள் கணினியில் புதிதாக ஏதாவது Fileகள் இருந்தால் அவற்றை Open பண்ண கூடாது. வைரஸாக மாறிய exe file ஐ நீங்கள் வைரஸ் என்று தெரியாமல் open பண்ணுவதால் கணினிக்கு வைரஸ் பரவுவதை தடுக்க நீங்கள் Flash ஐ Update பண்ணிய Antivirus ஆல் Scan பண்ணி பயன்படுத்த வேண்டும். உங்களுக்கு தேவையான exe file ல் வைரஸ் இருந்தால் அதை நீங்கள் clean பண்ணி பயன்படுத்த வேண்டும். Clean பண்ண முடியாவிட்டால் delete பண்ணிவிடுங்கள்.

இப்போது Flash லிருந்து கணினிக்கு உங்களுக்கு தெரியாமல் Autorun மூலம் வைரஸ் பரவுவதை தடுக்கும் அவசியமான, இலகுவான முறையை பார்ப்போம். Autorun ஐ செயற்படாமல் நிறுத்துவதன் மூலம் Flash இலிருந்து கணினிக்கு வைரஸ் பரவுவதை தடுக்கலாம். நீங்கள் Shift key அழுத்திக் கொண்டு Flashஐ கணினியில் இணைக்க





வேண்டும். இப்படி செய்தால் Auto run செயற்படாது. இதன் மூலம் Flashஐ இணைத்தவுடன் வைரஸ பரவுவது தடுக்கப்படும். நீங்கள் Shit keyஐ அழுத்தும் போது உங்கள் கையை அசைப்பசைப் பதை தவிர்க்க வேண்டும். அதன் பின் நீங்கள் Flashஐ Double Click பண்ணி Open பண்ணக் கூடாது. இவ்வாறு செய்தாலும் Autorun இயங்கிவிடும். பாதுகாப்பாக Open பண்ணுவதற்கு Windows key + Eஐ Press பண்ணுங்கள் *(அல்லது My Computerஐ open பண்ணி பின் Standard tool bar இல் Folder ஐ Click பண்ணுங்கள்).* அதில் வரும் Folder Window இல் உங்கள் Flash இருக்கும். அதில் Right Click செய்து Expand ஐ Select பண்ணி உங்கள் Flash ஐ Open பண்ணுங்கள். இதன் மூலம் வைரஸ் உங்களுக்கு தெரியாமல் பரவுவதை தடுக்கலாம்.

*[நான்கு தடவைக்கு மேல் Shit key ஐ விட்டு விட்டு அழுத்தினால் ஒரு Message Box ஒன்று வரும். அதன்பின் கணினியில் Setting(Keyboard, Mouse) குழம்பிவிடும். நீங்கள் ஒரு இடையில் இருக்கும் ஒரு Desktop icon ஐ Select பண்ணினால் அதற்கு மேல் உள்ள Desktop icon எல்லாம் Select ஆகிவிடும். இதேபோல் Mouse Setting ம் குழம்பிவிடும். இதை சீர் செய்வதற்கு மீண்டும் Shit key ஐ விட்டு விட்டு ஐந்து தடைவைக்கு மேல் அழுத்தினால் முதல் வந்த Message Box வரும். நீங்கள் Cancel ஐ Click பண்ணினால் இந்தப்பிரச்சனை நீங்கிவிடும். இதை தவிர்க்க Shit key ஐ அழுத்தும் போது உங்கள் கையை அசைப்பசைப்பதை தவிர்க்க வேண்டும்.]*

### கணினியிலிருந்து Flash ற்கு வைரஸ் பரவுவதை தடுத்தல்



இப்போது கணினியிலிருந்து Flash ற்கு வைரஸ் பரவுவதை தடுப்பதை பற்றி பார்ப்போம். உங்கள் கணினியில் வைரஸ் வந்தால் C:\Documents and Settings\All Users\Start Menu\Programs\Startup ற்குள்ளும் ஏனைய User களின் Startup ற்குள்ளும் வைரஸ் இருக்கும். இதனால் உங்கள் கணினி இயங்க ஆரம்பிக்கும்போது இந்த வைரஸும் இயங்க ஆரம்பிக்கும். இயங்கிக்கொண்டிருக்கும் அந்த வைரஸானது, நீங்கள் Flash ஐ கணினியுடன் இணைக்கும்போது தன்னைப்போன்ற புதிய வைரஸை உங்கள் Flash ல் உருவாக்கும்.

இதை தடுப்பதற்கு நீங்கள் Ctrl + Alt + Delete ஐ Press பண்ணி Task Manager ஐ வரச்செய்து அதில் Processes எனும் Tab ஐ தெரிவு செய்து உங்கள் User Name இல் Run பண்ணிக்கொண்டிருக்கும் மென்பொருட்களில் Explorer, taskmgr இவற்றையும் உங்களுக்கு தேவையானது என நீங்கள் கருதுவதை தவிர ஏனையவற்றை Select செய்து End Process கொடுத்து விடுங்கள். இதனால் உங்களுக்கு தேவையில்லாத மென்பொருட்களும், வைரஸ் களும் இயங்குவது நிறுத்தப்படும். அதன் பின் உங்கள் Flashஐ இணைத்தீர்களாயின் உங்கள் Flash இற்கு வைரஸ் பரவுவதை தடுக்கலாம்.

*உங்கள் Flashஐ கணினியுடனே வைத்திருக்காமல் Data Transfer ஆகும்போது மட்டும் பாவித்தால் உங்கள் Flash கூடுதல் பாதுகாப்பாக இருக்கும்.*


### வைரஸிற்கு ஆப்பு வைப்பது எப்படி?



இப்போது Flash இலிருந்து கணினிக்கும், கணினியிலிருந்து Flash இற்கும் வைரஸ் பரவுவதற்கு எப்படி ஆப்பு வைப்பது என்று பார்ப்போம். முதலில் உங்கள் கணினியின் Desktop இல் Flash எனும் பெயரில் அல்லது உங்கள் பெயரில் Folder ஒன்றை உருவாக்குங்கள். அதன்பின் நீங்கள் Shift key அழுத்திக் கொண்டு Flash அல்லது Momory Card ஐ கணினியில் இணைக்க வேண்டும்.

My Computer இல் Right Click செய்யவரும் Window இல் Manage இல் Click செய்ய Computer Management வரும். அதில் Disk Managementஐ தெரிவுசெய்தால் உங்கள் கணினியில் இருக்கும் Driveகள் தோன்றும். அதில் உங்கள் Flash ஐ Right Click செய்ய வரும் Windowஇல் Change Drive Letter and Paths இல் Click செய்யவும். அதன் பின்னர்வரும் Windowஇல் Remove எனும் Buttonஐ Click பண்ணியபின்னர் வரும் Confirm Message Boxஇல் Yesஐ தெரிவு செய்யுங்கள்.

அதன் பின்னர் மீண்டும் உங்கள் Flash ஐ Right Click செய்து Change Drive Letter and Paths ல் Click செய்து பின் Add எனும் Button ஐ Click பண்ணுங்கள். பின் Mount in the following empty NTFS folder ஐ தெரிவு செய்தபின் Browse ஐ Click பண்ணுங்கள். அதன்பின் தோன்றும் Window ல் நீங்கள் Desktop ல் உருவாக்கிய Folder ஐ தெரிவு செய்யுங்கள். பின் OK ஐ click பண்ணுங்கள். இப்போது உங்கள் கணினியின் My Computer இல் இருந்து உங்கள் Flash மறைந்துவிடும்.





Desktop இல் நீங்கள் உருவாக்கிய Folder உங்கள் Flash ஆக மாறிவிடும்.

உங்கள் Flash இல் வைரஸ் இருந்தால் உங்கள் Flash ஐ உங்கள் கணியுடன் இணைக்கும் போது Auto வாக உங்கள் கணினிக்கு வைரஸ் வராது தடுக்கப்படும். அதே போல் உங்கள் கணினியில் வைரஸ் இருந்தால் கணினியின் My Computer இல் Flash இல்லாததால் Flash இற்கு வைரஸ் வராது தடுக்கப்படும். இதனால் Flash மூலம் வைரஸ் பரவுவது தடுக்கப்படும். உங்களுக்கும் Open செய்யவும் இலகுவாக இருக்கும். Open with பிரச்சனையும் வராது.

வேறு ஒரு Flash ஐயும் நீங்கள் அடிக்கடி உபயோகித்தால் அதற்கும் இவ்வாறே செய்ய வேண்டும்.

**Desktopஇல் இருக்கும் My Computer மறைந்தால்**



இதேபோல் Desktop இல் இருக்கும் My Computer ஐ Delete செய்துவிட்டு My Computer எனும் Folder ஐ உருவாக்கி அதற்குள் Operating System இருக்கும் Drive தவிர ஏனைய Drive களின் பெயரில் Folder களை உருவாக்கி அவற்றிற்கும் இவ்வாறு செய்தால் உங்கள் கணினியில் இருக்கும் Data களும் கூடுதல் பாதுகாப்பாக இருக்கும். தற்போது சில வைரஸ்கள் Desktop இல் இருக்கும் My Computer ஐ மறைத்து விடுகின்றன. நீங்கள் இங்வாறு செய்வதால் My Computer மறைந்தாலும் நீங்கள் உருவாக்கிய My Computer இருக்கும். அதை உண்மையான My Computer ஆக பார்ப்பதற்கு அதன் icon ஐ My Computer இன் icon ஆக மாற்றிவிடுங்கள். (Right Click → Properties → Customize → Change Icon…) நீண்ட கலத்திற்கு பின்னர் குறிப்பிட்ட Drive ல் இருக்கும் Data கள் உங்களுக்கு தேவையாயின் அதையும் My Computer இல் இருந்து Flash ஐ மறைத்தது போல் அந்த Drive ஐயும் மறைத்து விட்டீர்களாயின் அந்த Drive வைரஸிலிருந்து கூடுதல் பாதுகாப்பாக இருக்கும்.

**Flash Drive, Computer Drive களில் இருக்கும் பிரதான வைரஸ்களை கண்டுபிடித்தல்.**

Flash, Drive இற்கு வைரஸ் வந்தால் Autorun.inf எனும் File ம் வைரஸ்களை பரப்பும் பிரதான வைரஸும் வந்திருக்கும். Autorun.inf என்பது வைரஸ் இல்லை. அது Auto வாக Software களை run பண்ணவைப்பதற்கு உருவாக்கப்படுகின்றது. நீங்கள் Driver CD, Software CD களை பயன்படுத்தும்போது நீங்கள் CD ஐ Open பண்ணாமலே அந்த Software கள் Open ஆகி வருவதை பார்த்திருப்பீர்கள். அவ்வாறு Open ஆவதற்குதான் Autorun.inf fileகள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறு தான் Flash, Drive களில் இருக்கும் பிரதான வைரஸ் களை Autorun ஆனது இயங்கவைக்கிறது. பிராதான வைரஸ்கள் இயங்கியவுடன் பல வைரஸ்களை உருவாக்குகின்றது.

Autorun.inf ஐ Open பண்ணினால் முதலாவது வரி [autorun] என இருக்கும். Open= என தொடங்கும் வரி இரண்டாவதாக அல்லது வேறு எங்காவது இருக்கும். அந்த வரி Open=kkk.exe என இருந்தால், பிரதான வைரஸின் பெயர் kkk ஆகும்.

அந்த வைரஸ் மறைந்து இருந்தால் நீங்கள் open பண்ணியிருக்கும் window வில் (My Computer / Drive / Flash / Folder) இருக்கும் Menu Bar ல் இருக்கும் Tools Menu ல் Folder Options ஐ Click செய்து, அதில் View ஐ தெரிவு செய்து அதில் Hide extensions for known file types இலிருக்கும் Tick ஐ எடுத்து Apply பண்ணி OK பண்ணிவிடுங்கள். இப்போது உங்கள் Flash, Drive களில் இருக்கும் பிரதான வைரஸ்களை கண்டுபிடித்து அழித்துவிடலாம்.

- *அழிக்க முடியாத Autorunகளை அழிப்பது எப்படி?*
- *Folder களின் பெயரில் இருக்கும் வைரஸ்களை கண்டுபிடித்தல்.*
- *Flash, கணினியில் வைரஸால் நிரந்தரமாக*
- *மறைந்த Folder தெரிய வைத்தல் போன்ற இன்னும்பல*

*அடுத்த இதழில்........*




*தொடரும்..*

# பல்லூடகப் பயன்பாடு!

## 'ஐபொட்'

இனிக்க இனிக்க இசையை ரசிக்கலாம்!







இனிக்க இனிக்க இசையை ரசிக்க சரியான சாதனம் எது என்று கேளுங்கள் - உடனே 'ஐபொட்' என்றுதான் விடை வரும். 'ஐபொட்' இன்று இசை உலகின் ஓர் அடையாளம். அறிமுகமான முதல் எட்டு ஆண்டுகளில் 22 கோடிக்கும் அதிகமான அளவில் விற்பனையான சாதனம் 'ஐபொட்'தான். அதிகமான எண்ணிக்கையில் விற்பனையான மியூசிக் பிளேயர் என்று மட்டும் இது பெயர் பெறவில்லை. அதிகமான அளவில் விற்பனையான டிஜிட்டல் சாதனம் என்ற பெயரையும் பெற்றது.

இதனைப் பயன்படுத்தும் ரசிகர்கள், கண்களை மூடிக் கொண்டு உரத்த குரலில் இதுதான் உலகிலேயே உயர்ந்த சாதனம் என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு அனைத்து நாடுகளிலும், மக்களின் ஏகோபித்த இசை தரும் சாதனமாக 'ஐபொட்' வளர்ந்து வந்துள்ளது.

எப்படி 'ஐபொட்' இந்த அளவிற்குப் புகழைப் பெற்றது? புதிய வழி ஒன்றின் மூலம் இசையைத் தரும் சாதனமாக அறிமுகமான இந்த டிஜிட்டல் தோழன், தனி ஒரு அந்தஸ்தை அடைந்தது எப்படி?

ஒக்டோபர் 21, 2001இல் முதல் 'ஐபொட்' அறிமுகமானது. கிட்டத்தட்ட இப்போது இருக்கும் இதே வடிவத்தினையே அப்போதும் பெற்றிருந்தது; 5 ஜிபி கொள்ளளவையும்




கொண்டிருந்தது. ஏறத்தாழ 1000 பாடல்களைப் பதிவு செய்திடவும் அதனால் முடிந்தது. க்ளிக் செய்வதற்கு சிறிய பொத்தானும், பாடல்களை இயக்கவும் நிறுத்தவும் பொத்தான்களும் இருந்தன. அதனுடைய திரை 160 x 128 பிக்ஸெல் கொண்ட கறுப்பு வெள்ளைத் திரையாக இருந்தது.

கணினியுடன் இணைத்துப் பயன்படுத்த Firewire தொழில்நுட்பத்தினையே பயன்படுத்தியது. அப்போதிருந்த யு.எஸ்.பி.1.1 நுட்பத்தைக் காட்டிலும் இது வேகமாக இயங்கியது. ஆனால் முதலில் வந்த 'ஐபொட்', அப்பிள் நிறுவனத்தின் Mac கணினியுடன் மட்டுமே இணைந்து இயங்கியது. விண்டோஸ் பயன்படுத்தியவர்கள் 'ஐபொட்'ஐப் பயன்படுத்த சில நாட்கள் காத்திருக்கவேண்டியிருந்தது. அப்போது அதனது அறிமுக விலை $399.

2002 மார்ச்சில் இரண்டாவது தலைமுறை 'ஐபொட்' அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் கொள்ளளவு 20 GB. இதில் கட்டுப்பாட்டுப் பொத்தான்களின் தொழில்நுட்பமும் மேம்படுத்தப்பட்டிருந்தது. பாடல்களை வகைப்படுத்தவும், தேடுதல் வசதிகளுக்கும் சிறப்பான மென்பொருள் இணைக்கப்பட்டது. இதனது அறிமுக விலை $499 ஆக இருந்தது.

மிக விரைவில் - 2003இல் மூன்றாவது தலைமுறை 'ஐபொட்' சந்தைக்கு வந்தது. இதன் கொள்ளளவுத் திறன் 10GB, 15GB மற்றும் 30GB என்ற அளவில் இருந்தது. அவற்றின் விலைகள் முறையே $299, $399, $499 என்றவாறு அமைந்தது. முந்தைய 'ஐபொட்'களைக் காட்டிலும் இவை தடிப்பு மற்றும் எடை குறைவாக இருந்தன. சுற்றி வந்த இயக்குச் சக்கர அமைப்புக்குப் பதிலாக, நிலையான இயக்குச் சக்கர அமைப்பு பொருத்தப்பட்டிருந்தது.

இப்போது இருக்கும் 'ஐபொட்' கிளாசிக் மற்றும் 'நனோ' மொடல்களில் உள்ளது போன்ற சக்கர அமைப்புத்தான் அப்போது அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் முதலாக 'யு.எஸ்.பி. போர்ட் 2' உடன் இணைந்து செயல்படத் தேவையான வசதிகள் இந்த 'ஐபொட்'களில் இருந்தன.

2003 ஆம் வருடத்தின் செப்டெம்பர் மாதப் பகுதியில் மேற்சொன்ன 'ஐபொட்'களின் மேம்படுத்தப்பட்ட வடிவங்கள் சந்தைக்கு வந்தன. அவற்றின் விலைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 30GB சேமிப்பகம் கொண்டது $399 இற்கும் 40GB சேமிப்பகம் கொண்டது $.499இற்கும் விற்பனை செய்யப்பட்டன.

2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், அப்பிள் நிறுவனம் 'ஐபொட்' சாதனத்திற்கு மாற்றாக 'ஐபொட் - மினி' என்ற ஒன்றைக் கொண்டுவந்தது. இதில் 4GB கொள்ளளவு கொண்ட மைக்ரோ டிரைவ் இருந்தது. அந்த Hard Drive இன் அளவு ஓர் அங்குலம் மட்டுமே. முழு வெளிப்பாகமும் அலுமினியம் கொண்டு அழகாக வடிவமைக்கப்பட்டு ஐந்து வர்ணங்களில்

பளபளக்கும் கவர்ச்சியோடு அவை வாங்குவோரைக் கவர்ந்தன. இதனால் தங்கள் விருப்ப வர்ணங்களில் மக்கள் 'ஐபொட்' சாதனத்தை வாங்கிப் பயன்படுத்தினார்கள். இந்த 'ஐபொட்' களில்தான் முதல் முதலாக உள்ளார்ந்து ஒன்றாக அமைந்த இயக்கு பொத்தான்கள் அமைக்கப்பட்டன. இவற்றின் விலை $249 ஆக நிர்ணயிக்கப்பட்டது. அளவோடு ஒப்பிடுகையில் விலை அதிகம் என்ற தோற்றப்பாடு இருந்தாலும் இந்தத் தலைமுறை 'ஐபொட்'களின் கவர்ச்சியான தோற்றமும் மேம் படுத்தப்பட்ட தொழில்நுட்பமும் அவற்றை விற்றுத் தீர்க்கச்செய்துவிட்டன.

ஜுலை 2004இல், அப்பிள் தனது நான் காவது தலைமுறை 'ஐபொட்'ஐ விற் பனைக்குக் கொண்டு வந்தது. 20 மற்றும் 40 GB அளவில் இவை இருந்தன. அவற்றின் விலை முறையே $299, $399 ஆக இருந் தது.


இதன் பின்னர் மூன்று மாதங்கள் கழித்து ஒக்டோபரில் 'ஐபொட் - போட்டோ' என்ற சாதனத்தை அப்பிள் வெளியிட்டது. இது 40GB மற்றும் 60GB அளவில் இருந்தன. கறுப்பு வர்ணத்தில் சிவப்பு நிற இயக்குச் சக்கரத்துடன் இது இருந்தது. இதுவரை வெள்ளையாக இருந்த 'ஐபொட்'டைக் கண்டு சலித்துப் போன ரசிகர்கள் இதனை அமோகமாக வரவேற்றனர்.

2005 ஜனவரியில் தனது ஐந்தாவது



தலைமுறை மொடலைக் கொண்டு வந்தது அப்பிள். iPod Shuffle என அழைக்கப்பட்ட இந்தச் சாதனம் மிகச் சிறிய அளவில், கேபிள் இணைப்பின்றி நேரடியாகக் கணினியோடு இணைத்துப் பயன்படுத்தும் அளவில் இருந்தது. 512 MB மற்றும் 1GB அளவில் இவை இருந்தன. பெப்ரவரியில் மேலும் சில மாற்றங்களை இதில் அப்பிள் ஏற்படுத்தியது. தங்க நிற 'ஐபொட்'டை எடுத்துவிட்டு, அதன் இடத்தில் வேறு வர்ணங்களைத் தந்தது.

அடுத்து 'ஐபொட்' மற்றும் 'ஐபொட் - போட்டோ'



சாதனங்களில் 40 GB மொடலை நீக்கி, 'ஐபொட் - போட்டோ' இடத்தில் 30GBயையும், 'ஐபொட்'டில் 20 GBயையும் கொண்டு வந்தது. பின்னர் இரண்டு மொடலையும் ஒன்றாக்கியது. கறுப்பு - வெள்ளைத் திரையையும் மாற்றி வர்ணத்திரையைக் கொண்டுவந்தது.

இதே ஆண்டில் அப்பிளின் மிகப் பிரபலமான 'ஐபொட் - நனோ' வெளியானது. ஆனால் அதே நேரத்தில் நன்றாக விற்பனை செய்யப்பட்டு, மக்கள் மனதில் இடம் பிடித்திருந்த 'ஐபொட் - மினி' முடக்கப்பட்டது. 'ஐபொட் - நனோ' 2GB மற்றும் 4GB திறனுடனும் கிடைத்தது.


2005 ஆம் ஆண்டிலேயே இன்னொரு 'ஐபொட் - மொடலும் வெளியானது. இதில் புதுமையாக வீடியோ இயக்கும் திறன் அளிக்கப்பட்டது. 'ஐபொட்' சாதனத்தில் இது முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பம்சமா கும். இதனை பாவனையாளர்கள் 'ஐபொட் - வீடியோ' என அழைத்தனர். 2.5 அங்குல திரை 320x420 வர்ணத்திரையுடன் அது இருந்தது. வீடியோ கோப்புகள் இதில் செக்கனுக்கு 30 பிரேம்கள் என்ற வேகத்தில் இயக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 'ஐ ட்யூன்ஸ் மியூசிக் ஸ்டோர்' ஆரம்பிக்கப்பட்டு ஓடியோ மற்றும் வீடியோ கோப்புக்களைக் கட்டணம் செலுத்தி பதிவிறக்கம் செய்து இயக்கும் வசதி தரப்பட்டது. இந்த வகை 'ஐபொட்' ஸ்லிம்மாகவும் அளவில் சிறியதாகவும் அமைந்திருந்தது. இப்போது இது 30GB மற்றும் 60GB அளவுகளில் கிடைக்கிறது.

2006 ஆம் ஆண்டில் iPod Shuffleஇன் விலை குறைக்கப்பட்டது. முந்தைய 2GB மற்றும் 4 GB மொடல்களோடு, 1 GB மொடலும் அறிமுகமானது.

இதே ஆண்டின் செப்டெம்பர் மாதத்தில், 'ஐபொட்'

சாதனங்கள் அனைத்தின் வடிவமைப்பிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. iPod Shuffle முன்னையதைக் காட்டிலும் பாதி அளவில் வடிவமைக்கப்பட்டது. 'ஐபொட்'டினை ஆடைகளில் இணைத்துக்கொண்டு கேட்பதற்கு வசதியாக க்ளிப் ஒன்று பொருத்தப்பட்டது.



புதிய 'ஐபொட் - நனோ' பலவகை வர்ணங்களிலும், கொள்ளளவுத் திறனுடனும் விற்பனைக்கு வந்தது. ஒக்டோபர் மாதத்தில் 'ஐபொட் - நனோ'வின் சிவப்பு வடிவம் அறிமுகமானது. இதன் விற்பனையில் ஒரு பகுதிப் பணம் ஆபிரிக்காவில் எய்ட்ஸ் நோய்க்கான சிகிச்சைக்கு நன்கொடை யாக அளிக்கப்பட்டது.



2007 ஆம் ஆண்டில் 'ஐபொட்'டுக்குப் புதிய வர்ணங்கள் அளிக்கப்பட்டன. செம்மஞ்சள், பிங்க், நீலம் மற்றும் பச்சை




வர்ணங்களில் கண்ணைக்கவரும் விதத்தில் 'ஐபொட்'கள் வெளிவந்தன.

இந்த நேரத்தில்தான் 'ஐபொட்' என தொடர்ந்து மைய வடிவமாக இருந்த இந்தச்சாதனம் 'ஐபொட் - கிளாசிக்' என அழைக்கப்படத் தொடங்கியது. இதில் பெரிய அளவில் மாற்றம் இல்லை என்றாலும், இதன் கொள்ளளவு 160GB வரை கொண்ட மொடலும் வெளிவந்தது. இன்றைக்கும் இதுவே 'ஐபொட்' ஒன்றின் அதிக பட்ச கொள்ளளவினதாக உள்ளது. 30 GB வடிவம் கைவிடப்பட்டது.

ஜனவரி 2008இல் 'ஐபொட் - நனோ 8' வடிவம் பிங்க் வர்ணத்தில் வெளியானது. இந்த ஆண்டிலும் செப்டெம்பர்





மாதத்தில், அனைத்து வடிவங்களிலும் சிறிய அளவிலான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அப்பிள் கிளாசிக் வடிவத்தில் 160GB வடிவம் நீக்கப்பட்டது. 80GB மற்றும் 120GB வடிவங்கள் அதிகம் வரத் தொடங்கின. இதே போல 'ஐபொட் டச் பிளேயரி'லும் சிறிய அளவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஸ்பீக்கர் உட்புறமாக அமைக்கப்பட்டது. ஒலிக்கட்டுப்படுத்தியும் 'ஐபோனி'ல் உள்ளது போலத் தரப்பட்டது.

2009இல் அப்பிள் உலகின் மிகச் சிறிய மியூசிக் பிளேயரை அறிமுகப்படுத்தியது. இது iPod Shuffle வடிவத்தின் மூன்றாவது வகையாகும். இதுவரை வந்ததைக் காட்டிலும் சிறியதாகவும், ஸ்லிம்மாகவும், எடை மிகக் குறைவாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது. Voice Over என்னும் புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பார்வைப்புலன் அற்றவர்கள் பாடல் குறித்த தகவல்களைப் பெற்று இயக்க முடிந்தது. இந்த ஆண்டில் 'ஐபொட் - நனோ'வில் புதிய வசதிகள் கொண்டுவரப்பட்டன. இதில் வீடியோ கமரா இணைக்கப்பட்டு ஒளிப்பதிவு வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. FM ரேடியோவும் மேதிக வசதியாக இணைந்திருந்தது.




இந்த ஆண்டில் 'ஐபொட் - கிளாசிக்' அப்பிள் நிறுவனத்தால் கைவிடப்படும் என்று எதிர்பார்த்த நேரத்தில், அதன் நினைவகத்தினை 120GB யிலிருந்து 160 GBயாக உயர்த்தி, விலையை அதிகரிக்காமல் அப்படியே வைத்து அப்பிள் புதிய வடிவத்தை அறிமுகப்படுத்தியது. 'ஐபொட்' 32GB மற்றும் 64 GB வடிவங்களுடன் தரப்பட்ட இயர்போனில் மைக் மற்றும் Playback கட்டுப்படுத்தி வசதிகளும் இணைக் கப்பட்டன.



2010 செப்டெம்பரில் சந்தைக்கு வந்த 'ஐபொட் - நனோ', முதல் தடவையாக தொடு உணர் திரையைக் கொண்ட 'ஐபொட்' ஆக அமைந்தது. கமெராவும் Playback கட்டுப்படுத் தியும் நீக்கப்பட்டு 8GB மற்றும் 16GB நினைவகத்தோடு இது இருந்தது.

இதே காலப் பகுதியில் 2GB நினைவகத்தோடு அறிமுக மான 'ஐபொட்', Voice Over வசதியைக் கொண்டிருந்ததோடு இயக்க விசைகள் யாவும் அதன் உள்ளமைந்த வடிவத்தை யும் கொண்டிருந்தது. ஐந்து வெவ்வேறு வர்ணங்களில் வாங்கு பவர்களை ஈர்க்கும் விதத்தில் இதன் சிறிய அளவிலான தோற்றம் அமைந்திருக்கிறது.

அதன் பின்னர் மெல்லியதான வடிவத்தில் இரண்டு கமெராக்களுடன் HD தரத்திலான ஒளிப்பதிவுக்கு FaceTime மென்பொருளையும் கொண்டுவந்த நான்காம் தலைமுறைத் 'தொடு உணர் - ஐபொட்' பரவலான வரவேற்பைப் பெற்றது. Apple A4 Chipஐக் கொண்ட உயர் தொழில்நுட்பப் படைப் பான இது, 8GB, 32GB, 64GBக்கள் கொண்ட நினைவகத்தை உள்ளடக்கிய தயாரிப்பாகும்.

'ஐபொட்'டின் அளவைச் சிறியதாக்கி, உள்ளே ஹார்ட் டிரைவின் அளவைப் பெரியதாக்கி, புதிய வசதிகளை இணைத்துத்தரும் பணியில் தொடர்ந்தும் அப்பிள் நிறுவனம் ஈடுபட்டுவருகிறது. எனவே எதிர்காலத்தில் இன்னும் பல சிறப்பம்சங்களை 'ஐபொட்'டில் எதிர்பார்க்கலாம்.

இசையை ரசிப்பது இயல்பு. அதனையே உயர் தொழில் நுட்பத்தின் ஊடாக பல்வேறு நவீன வசதிகளுடன் ரசிப்ப தென்பது சுவாரஸ்யமான அனுபவம்தான்!







தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறார் மிஸ்டர் மெமறி!

கம்ப்யூட்டர் ருடே
359, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல்

தொடர் - 03 **தரம் - 10/11** **ICT**

இத் தொடரானது இலங்கை அரசாங்கத்தினால் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட ICT பாடத்திட்டத்தினை முற்றுமுழுதாகத் தழுவி எழுதப்படுகிறது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இத்தொடர் மிகப் பயனுள்ளதாக அமையும் என எதிர் பார்க்கிறேன்.




ஆக்கம் : இ.குமரன்
ஆசிரியர்
யாழ். இந்துக்கல்லூரி


சென்ற இதழில் கணினியின் வரலாற்றினைப் பார்த்தோம். இவ்விதழிலும் அது தொடர்கின்றது.




* 1949- EDSAC கணினி – முதலாவது இலத்திரனியல் சேமிப்பு – செய்நிரலினைக் (Stored – Program) கொண்ட கணினியாகும். Maurice Wilkes இனால் வடிவமைக்கப் பட்டதாகும்.




* 1952 – UNIVAC- 1 முதலாவது வர்த்தக ரீதியிலான கணினியாகும்.






* 1955 – பெல் ஆய்வுகூடம் TRADIC கணினியை வெளியிட்டது. இது முதலாவதாக முற்றுமுழுதாக திரான் சிஸ்ரர் மூலம் வடிவமைக்கப்பட்ட கணினியாகும்.

* 1958 - Jack Kilby இனால் முதலாவது தொகையடுஞ் சுற்று (Integrated Circuit –IC) உருவாக்கப்பட்டது.






* 1969 – ARPANET எனும் கணினி வலையமைப்பு அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது. பிற்காலத்தில் இணையத்திற்கு இது அடிப்படையாக அமைந்நது.


ARPA – Advanced Research Project Agency;

* 1971 - 8 " நெகிழ்வட்டு (Floppy disk) IBM நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது.



* 1971 – Intel நிறுவனத்தினால் முதலாவது நுண் முறைவழியாக்கி (Microprocessor) கண்டுபிடிக்கப்பட்டது. இது Intel 4004 என அழைக்கப்பட்டது.










Ted Hoff இன் எண்ணக் கருவிலிருந்து Federico Faggin என்பவரினால் முதலாவது Intel 4004 நுண் முறைவழியாக்கி அபிவிருத்தி செய்யப்பட்டதாகும்.

* 1977 – Apple II கணினி Apple நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது. இது Steve Wozniak இனால் அடிப் படையில் வடிவமைக்கப்பட்டதாகும்.





* 1981 – Xerox ஆனது Star கணினியை அறிமுகப் படுத்தியது. இது முதலாவது GUI அடிப்படை யில் அமைந்த PC ஆகக் கருதப்படுகிறது.




* 1984 – Apple நிறுவனம் Macintosh கணினியை அறிமுகப்படுத்தியது.



இதன் மிகுதியை அடுத்த அதழில் பார்ப்போம்.

தொடரும்...


webster networks
MAKING DREAMS REALITY
jQuery
write less, do more.
cPanel
MySQL
php
HTML 5
Domain Name & Web Hosting
.com, .net, .org ஒரு வருடத்திற்கு பதிவு செய்ய ரூபா 1000 மட்டுமே.
உங்கள் தேவைக்கு ஏற்ப இணைய இடவசதி- களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
500 MB Space Rs.1000 / Year
1000 MB Space Rs.2000 / Year
2000 MB Space Rs.3000 / Year
5000 MB Space Rs.6000 / Year
பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், ஆலயங்கள் மற்றும் மாணவர்களுக்கும் விசேட கட்டணச் சலுகை வழங்கப்படும்.
Web development Personal Classes
♦ Professional Web Designing
♦ Professional Web Development
♦ Web-Based System Development
♦ Facebook Platform Development
எம்மிடம் மேலுள்ள பாடநெறிகளை பயிலும் அனைவருக்கும் விசேட சலுகை!
Free Domain Name (.com/ .net/ .org)
1 Year Web Hosting - cPanel
www.websternetworks.lk
021 222 0261 0779 471 771
வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில், மானிப்பாய் வீதி


Wanted
Marketing
Executive
எமது நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதிகள் உடனடியாகத் தேவை.
தகுதியுடையவர்கள் சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
இத்துறையில் ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
கம்ப்யூட்டர் ருடே
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 5 677 600
info@computertoday.lk





**கணினிக் கவிதை - 03**

**மானிடர்க்கு மகத்தான தோழன்.**

சுழன்றோடும் பூமியிலே
எதைச் செய்வது எதை விடுவதென
நிற்கவும் நேரமின்றி: இருக்கவும் நேரமின்றி:
ஓடித் தலையை உடைத்திடும் மானிடற்கு!
இதோ! இருக்கிறேன் எனும்
நம்பிக்கையூட்டித் தோழோடு தோழ்கொடுக்கும்
உற்றநண்பன் கணினியாவான்.

- சி.சோலைப்பிரியன்,
யா/கொழும்புத்துறை துரையப்பா
வித்தியாலையம்.




# தீட்டிய மரத்தில்...

*ஏ...*
*இயந்திரமே!*
*தீட்டிய மரத்திலேயே*
*பதம்பார்க்கப் பார்க்கிறாயா?*
*நீ இன்னமும் முழுமையடையாதவன்*
*எம்மால் மட்டுமே முடியும் உன்னை முழுமையாக்க!*
*சுயமாய் சிந்திக்கத் தெரியாத உனக்கு எம்முடன் பலப்பரீட்சையா...*
*வேண்டாம் இந்த விஷப்பரீட்சை உனக்கு! விளையாடு எம்மோடு இணைந்து!*

[illegible]

இது உங்கள் கவிதை வரிகளுக்கான பக்கம். அருகில் பிரசுரிக்கப்பட்டுள்ள படத்தைப் பார்க் கையில் உங்கள் உணர்வுகள் சொல்லும் சேதியை வரி வடிவங்களாக்கி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வரிகள் தகவல் தொழில்நுட்பம் சார்ந்து இருக்கவேண்டியது மிக மிக அவசியம். கணினிப் பயன்பாட்டினால் மனங் கள் மரத்துப்போகின்றன எற்றொரு கருத்து ஆய்வாளர்களிடையே உண்டு. இங்கு பிரசுரமா கும் வரிகள் மரத்துப்போன இதயங்களைக் கொஞ்சம் இளகச் செய்யட்டுமே!

கவிதைகளை அனுப்பவேண்டிய
முகவரி:
**கம்ப்யூட்டர் டுடே**
359, கஸ்தூரியார் வீதி,



**பாகம் 3**





த.தவருபன்-
CEO
Speed IT Net, Jaffna.



சென்ற இதழில் PHP பற்றி அறிமுகம் செய்து உதாரணம் ஒன்றும் தந்திருந்தேன். உதாரணமாக எழுதப்பட்ட PHP பக்கத்தினை சேவரில் இட்டு பரிசோதிக்கலாம் என்றும் அதனது வெளியீடு எப்படி இருக்கும் என்றும் கூறியிருந்தேன்.


உங்களில் பலர், சேவர் நம்மிடம் இல்லை எவ்வாறு பரிசோதித்துப் பார்ப்பது என கடிதம் எழுதி இருந்தீர்கள். சாதாரணமாக HTML இல் எழுதப்பட்ட பக்கமாயின் அதனை எமது கணினியில் இரட்டைக்கிளிக் செய்து திறந்தால் கணினியிலுள்ள உலாவி (Browser) மென்பொருளில் பார்க்க முடியும். ஆனால் இந்த Server Side Script பயன்படுத்தப்பட்ட பக்கங்களினை அப்படி நேரடியாகத் திறந்து பார்க்க முடியாது.


இதற்கு தான் Web server அவசியம் என முன்னரே கூறியிருந்தேன். ஆயினும் அந்த Web server ஆனது சேவர் கணினியில் தானே நிறுவப் பட்டிருக்கும்? இல்லை. உங்கள் கணினி யிலும் வெப் சேவரை நிறுவி Server Side Script பக்கங்களைப் பரி சோதிக்கலாம். அது விண்டோஸ் இயங்கு தளமாயிருந்தால் என்ன, வேறு இயங்கு தளமாயிருந்தால் என்ன இது சாத்தியமே!


ஆரம்ப காலத்தில் எமது கணினியில் தனித்தனியே Web Server, PHP ,My SQL போன்றவற்றினை குறித்த இணையத்தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து நிறுவி வந்தோம். அவ்வேளைகளில் அதற்கான (Configuration) அமைப்புகளை நாமே செய்யவேண்டி இருந்தது. தற்போது அதற்கான வேலை இல்லாமற் போய்விட்டது. Web server களில் ஒன்றானதும் பிரபல்யமானதுமான Apache Web server மற்றும் Server Side Script ஆன PHP மற்றும் தரவுத்தளமான MySQL ஆகியவற்றை ஒன்றாக இணைத்த மென்பொருட்கள் (Bundle Software) இணை யத்தில் நிறையவே காணப்படுகின்றன. அவை இலவச மானதும் கூட. அவற்றில் விண்டோஸ் இயங்குதளத்திற்குரிய பதிப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வகையான மென் பொருட்களுக்கு உதாரணமாக AppServ, WAMP, XAMP போன்றவற்றினைக் குறிப்பிடலாம். எதையாவது ஒன்றினை











நாம் கணினியில் நிறுவினால் எமக்கு Apache, PHP, My SQL , phpmyAdmin (MySQL இனை கட்டுப்பாடு செய்வதற்கானது) ஆகியன கிடைக்கும்.

கீழ்வரும் முகவரிகளில் இவற்றினை பதிவிறக்கம் செய்யலாம்.

**AppServ:** http://www.appservnetwork.com

**WAMP :** http://www.wampserver.com/en

**XAMP:** http://www.apachefriends.org/en/xampp .html

அதைவிட Apache, PHP, My SQL ஆகியவற்றினை அவற்றின் விண்டோஸ்களிற்கான பதிப்பினை கீழ்வரும் முகவரிகளிலிருந்து தனித்தனியாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ளலாம். எனினும் இலகுவான முறை மேற் சொன்ன மூன்றும் ஒன்றாக உள்ள மென்பொருள்களில் ஒன்றை கணினியில் நிறுவுவதே ஆகும்.

http://www.apache.org

http://www.php.net

http://www.mysql.com


மேலே Appserv மென்பொருளை எவ்வாறு நிறுவிக் கொள்வது? என்ற படிமுறை விளக்கம் படங்களின் ஊடாக தரப்பட்டிருக்கிறது.


இதை நிறுவியதும் உங்கள் கணினி உள்ளக சேவராக இயங்குவதற்குரிய தகுதியைப் பெற்று விடும். அதன்பின் அதனுடைய Root Directory பான C:/ AppServ/ www இனுள் உங்கள் பக்கங்களைச் சேமிக்க முடியும். அதற்காக இதற்குள் சேமிக்கப்பட்ட பக்கங்களை இரட்டைக் கிளிக் செய்வதன் மூலம் திறந்து பார்க்க முடியாது. விளைவுகளை / வெளியீடுகளை பார்க்க வேண்டுமாயின் குறித்த Root Directory யிலுள்ள பக்கங்களை பிரத்தியேக முறையில்தான் அழைக்க வேண்டும்.


இதற்கு உங்கள் கணினியிலுள்ள உலாவி ஒன்றைப் பயன்படுத்தலாம். அல்லது Run பகுதியைப் பயன் படுத்தலாம். கணினியிலுள்ள உலாவி (Browser) இனை Open செய்து அதன் URL ரைப் செய்யும் பகுதியான முகவரிப்பட்டையில் (Address Bar) http:// localhost/test.php என அழைக்கலாம். இவ்வாறு அழைப்பதற்கு முதல் www root Directory இல் test.php பக்கம் சேமிக்கப்பட்டிருக்க வேண்டும். www root Directory இனுள் Folder களினை உருவாக்கி அதற்குள்ளும் உங்கள் PHP பக்கங்களையும் ஏனைய HTML பக்கங்களையும் சேமிக்கலாம். அப்படிச் சேமிக்கப்பட்டிருந்தால் http://localhost/foldername/ yourphpfile.php என அழைக்க வேண்டும்.


இங்கு foldername நீங்கள் உருவாக்கிய Folder இனது பெயராகும். yourphpfile என்பது நீங்கள் உரு வாக்கிய பக்கத்தின் பெயராகும். மேலும் நீங்கள் ஒரு இணையப்பக்கத்தினை உருவாக்கும் போது அதனுடைய முகப்புப் பக்கம் index.php என்ற பெயரில் www root directory இனுள் web எனும் Folder உருவாக்கி அதனுள் சேமித்தால் http://localhost/web என மட்டும் அழைத்தால் போதும். அந்த முகப்புப்பக்கம் தோன்றும். அதில் மற்றைய பக்கங்களை தொடுப்பு கொடுத்திருக்கலாம். இப்போது உங்களுக்கு PHP பக்கங்களை உங்கள் கணினியில் எவ்வாறு Run செய்து பார்ப்பது என்பது தெளிவாயிருக்கும். நான் ஏற்கனவே தந்த PHP Coding இனை கொண்ட பக்கத்தினை உங்கள் கணினியில் உருவாக்கிப் பரிசோதித்துப் பாருங்கள். மேலும் PHP பக்கம் உருவாக்கம் தொடர்பான விடயங்கள் அடுத்த இதழில்.....

# கணினித்திரைகள் வாங்கும்போது கவனிக்கப்பட வேண்டியவை







1. திரை அளவு

திரை அளவு என்பது எவ்வாறு? அளக்கப்படும்.

பல்வேறு Screen Size-களில் வரும் கணினித்திரைகள் அங்குல அளவுகளில் குறிப்பிடப்படுகின்றன. வீட்டப் பாவனைக்கு 15" முதல் 19" அளவு வரையான கணினித்திரைகள் பிரபலம். இந்த அங்குல அளவுகள் விட்ட அளவுகளாகும். அதாவது வலது மேல் மூலையிலிருந்து இடது கீழ் மூலைவரையான அங்குல அளவாகும் (படம்). விலையில் உங்களுக்கு தகுதியானதை தேர்வு செய்து கொள்ளலாம்.

2. Resolution

பெரும்பாலும் LCD கணினித்திரைகள் தான் தற்போது சந்தையில் உள்ளன. அதில் Dead pixels எதுவும் இல்லாமல் இருந்தால் அது நம் அதிஷ்டம். 1080 pixels இன்றைய காலத்தில் சராசரியாக விரும்பலாம். Resolution 1920x1080 அளவை உச்சமாக இருக்குமாறு பார்த்துக் கொள்வது நல்லது. சாதாரண பயன்பாட்டிற்கு Squar Monitor சிறந்தது. வீடியோ Edit பண்ண அகல திரையாக அதாவது wide screen ஆக இருக்குமாறு பார்த்துக்கொள்வது நல்லது.

3. Port

உங்கள் System பழையதுவெனில் VGA Port ஐ பயன் படுத்துவீர்கள். தற்போது HDMI (High definition multimedia interface ) வகை Portகளும் பயன்பாட்டுக்கு வந்துவிட்டன.

4. Speaker மற்றும் TV tuner

பெரும்பாலான கணினித்திரைகளுடன் Speaker வருவதில்லை. சில கணினித்திரைகள் Speaker ஐ இணைக்க வழி கொண்டிருக்கும். அப்படியெனில் ஒலியையும் ஒளியையும் ஒரே Cable ல் கடத்தும் HDMI Port கண்டிப்பாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். ஒரு வேளை உங்கள் கணினித்திரையை TV ஆகவும் பயன்படுத்த யோசனை இருந்தால் TV tuner உள்ள கணினித்திரையாக வாங்கவும். கொஞ்சம் விலை அதிகமாயிருக்கும்.

5. படத்தின் தெளிவு (Image Contrast)

Image Contrast என்பது படங்களின் தெளிவுடன் தொடர்பானது. இது நிறங்களின் தெளிவில் (The contrast between colors) தங்கியுள்ளது.

6. படத்தின் பிரகாசம் (Image brightness)

படத்தின் பிரகாசமும் கணினித்திரையின் பிரகாசத்தில் தங்கியுள்ளது.

7. மின் பாவனை

மின் நுகர்வு குறைந்தவை உங்கள் மின்சாரப் பட்டியலை மீதப்படுத்தும்.

8. Refresh rate

Refresh rate உயர்வாக இருப்பவையே சிறந்தவை

9.மேலதிகமாக

கணினித்திரையின் Style, நிறை ஆகியவற்றையும் கருத்தில் கொள்ளவது சிறந்தது. மொனிட்டரின் Stand மற்றும் திசை மாற்றும், உயர்த்தும் வசதிகளும் உங்களுக்கு பொருத்தமாக இருக்குமாறு பார்த்துக் கொள்வது சிறந்தது.


இவை எல்லாவற்றையும்விட உங்கள் கையில் உள்ள பணத்திற்கேற்ப சிறந்ததை தெரிவு செய்யுங்கள்.

ஆக்கம்: சு.குணசாந்தன்
BIT மாணவன்
கொழும்பு பல்கலைக்கழகம்

# கணினி பற்றிய ஒரு நோக்கு.

செல்வி பா.லக்ஷிப்பிரியா,
யா / நெல்லியடி ம.ம.வி,
A / L (2013) கணிதப் பிரிவு.

கணினி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அதன் அற்புதம், அது உலகத்திற்கு ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் மற்றும் அதனுடைய இருப்புப்பற்றி அறிந்திருக்கவேண்டியது அவசியமாகும். இந்த உலகத்தையே தனது உயிருக்குள் அடக்கியுள்ள சக்தி பெற்ற ஓர் இலத்திரனியல் படைப்பு கணினி என்பது மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாத உண்மையாகும். கணினி இல்லையென்றால் இவ்வுலகமே செயலிழந்து விடும் ஒருநிலை இப்பொழுது காணப்படுகிறது. கணினி இவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெற அதனுடைய வேகம், நுணுக்கம் அதன் அளவையியல் (Logical) மற்றும் கணிதவியல் (Arithmatic) கணிப்புச் செயல் முறையுமே காரணமாகும்.



கணினியின் முந்தைய படைப்பாக விளங்குவது கணிப்பானாகும் (Calculater). கணிப்பானை அடிப்படையாகக் கொண்டு மனிதனால் மனிதனுக்காக உருவாக்கப்பட்ட சாதனம் கணினியாகும். 1828ஆம் ஆண்டு சாள்ஸ் பபேஜ் (Charles Babbage) என்பவர் உலகின் பொறிமுறைக் கணினிக்கான ஒரு பகுப்பாய்வைச் செய்து அதன் அடிப்படையில் ஒரு இயந்திரத்தைச் செய்தார். இதுவே கணினியை முழுமையான வீச்சோடும், மூச்சோடும் இவ்வுலகத்தையே ஆளும் பேரரசனாக உருவெடுக்க வைத்திருக்கிறது. எனவே இவர் கணினியின் தந்தையெனப் போற்றப்படுகின்றார். கணினி அமைப்புக்கான துவித எண்ணை (Binary) அளித்தவர் ஒரு பெண்மணி யாவார். அவருடைய பெயர் லேடி அடாலவ்லேஸ் (Lady Ada lovelace) உலகின் மிகப் பிரபலமானதும், சிக்கலானதுமான தொழிலான மென்பொருள் (Software) துறை அவருடைய அடிப்படையிலேயே உருவானது. அகவே இவரே உலகின் முதலாவது மென்பொருள் நிகழ்ச்சி வடிவமைப்பாளர் (The First Programmer in the world) என்ற பெருமையை பெறுகிறார்.

1930ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஹவார்ட் ஐகன் (Haward Aikan), கிரேஸ் ஹோப்பர் (Grace Hopper) ஆகிய இருவரும் இணைந்து மார்க்-1 (Mark-1) என்ற கணினியைத் தயாரித்தனர். இதன் பின்பு பல வகையான கணினிகள் போரியல் ரீதியான காரணங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டன. கொசார்ட் ஜீசி (Kozzard Zuse) என்ற ஜேர்மனியர் Z1, Z2, Z3, Z4 போன்ற கணினிகளை உருவாக்கினார். Z தொடர் கணினிகளே முதல் எண்மானம் (Digital) கொண்ட கணினிகளாகும். இங்கே குறிப்பிட்டுக் காட்டப்படவேண்டிய துன்பியல்கரமான சம்பவம் என்னவெனில் இவையாவும் கொடூர யுத்தத்தின் தாக்கத்தில் அழிக்கப்பட்டுவிட்டன. இதன் பின்பு Engima என்ற இரகசியக் குறியீடுகளைச் சங்கேத மொழியில் தயாரிக்கக்கூடிய




கணினியை ஜேர்மனியைச் சேர்ந்தவர்கள் தயாரித்தனர். இதற்கு எதிராக இரகசியக் குறியீடுகளை தகர்க்கப் பிரித்தானியா சொலாசஸ் என்ற கணினியை அறிமுகப்படுத்தியது. இதுவே Dedicated Computer என அழைக்கப்பட்டிருந்தது.

கணினிகள் பல தலைமுறைகளாக அழியாத ஒரு இடத்தோடும் வடியாத உயிர்த்தன்மையுடனும் மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கின்றது. இது மனிதனையே மேன்மைப் படுத்தியிருக்கிறது. முதலாம் தலைமுறைக் கணினிகளில் (The First Generation Computers) வெற்றிடக் குழாய்களை (Vacum tubes) அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டன. ஆனால் இவை அளவில் பெரியனவாகவும் ஏறத்தாழ ஒரு அறையைப்போன்ற இடப்பரப்பை பிடிக்கக்கூடியதாகவும் வேகத்தில் குறைந்தவையாகவும் வினைத்திறன் குறைந்ததாகவும் அத்துடன் அதிகளவான மின்சக்தியும் விரயமானது. எனவே அவர்களுக்கு அவசியமான மாற்றீடு ஒன்று தேவைப்பட்டது. எனவே வெற்றிடக் குழாய்களுக்குப் பதிலாக Transister பயன்படுத்தப்பட்டது. அவற்றின் அளவு சிறியதாகவும் வேகம் மற்றும் செயற்றிறன் அதிகமாகவும் காணப்பட்டன. கணினிகள் மிகவும் குறைந்த மின்சாரத்தில் இயங்குவதற்கு வழிவகுத்தது. இவை இரண்டாம் தலைமுறைக் கணினிகளாக வரலாற்றில் (The Second Generation Computers) போற்றப்படுகிறது. Honey Well - 400 என்பது இரண்டாம் தலைமுறைக் கணினிக்கான உதாரணமாகும்.

இன்றைய உலகில் காணப்படும் அனைத்து இலத்திரனியல் சாதனங்களும் மிகப்பெரும் இடத்தைப் பெற்றிருக்கும் IC (Integrated Circuit) கணினியையும் விட்டு வைக்

இது என்னவாக இருக்கும்???



கவில்லை. Taxas Instrument என்ற நிறுவனம் 1959 ஆம் ஆண்டு இதனைத் தயாரித்து அறிமுகப்படுத்தியது. இவற்றின் அடிப்படையில் இயங்கும் கணினிகளையே மூன்றாம் தலை முறைக் கணினிகள் (The Third Generation Computers) என அழைக்கப்படுகின்றன. 1963ஆம் ஆண்டில் Digital Equipment Co-operation எனும் நிறுவனம் அறிமுகம் செய்த PDP - 8 என்ற கணினியே முதலாவது வெற்றிகரமான சிறு கணினியாகும் (Mini Computer).

1969இல் Intel நிறுவனம் 1Kilobyte நினைவாக Chip 1 அறிமுகப்படுத்தியது. இந்தச் சாதனையே Intel 1 Computer Chipஐ செய்ய தூண்டியது. இது மாபெரும் வெற்றியாக அமைந்தது. VLSIC (Very Large Scale Integrated Circuit) என்பதை அடிப்படையாகக் கொண்டு நான்காம் தலைமுறைக் கணினிகள் வடிவமைக்கப்பட்டன. (The Fourth Generation Computers) இவ்வாறு படிமுறை வளர்ச்சி முன்னேறிக்கொண்டிருக்கிறது. முன்கூட்டிய அறிவுறுத்தல்களைக் (Instructions) கொண்டு விரும்பிய கட்டளைப்படி இயக்கக்கூடிய ஒரு இயந்திரமே கணினி என வரையறுக்கப்பட்டிருக்கிறது. வேலைப் பழுவினைக் குறைத்தல், வேலை ஒன்றைத் திருத்தமாகச் செய்தல், வேகமாகவும் ஓய்வின்றியும் இயங்குதல் அதற்கு மேலாக மனித வளத்தினால் மட்டும் நிறைவேற்ற முடியாத தேவைகளுக்காக கணினி உருப்பெற்று ஒரே நேரத்தில் பல வேலைகளைச்செய்யும் திறமை (Multi Tasking) கணினிக்கே உரித்தான சிறப்பம்சமாகும். கணினி பொதுவாக இயல்புத் தன்மையுடன் உருவாக்கப்படுகின்றது.

கணினித் தொழில்நுட்பம் ஒவ்வொரு நிமிடமும் மாறிக்கொண்டிருக்கின்றது(Update). வேகத்தில், திறனில், வடிவில் மற்றும் செயன்முறைகளில் மாற்றம் பெற்று வருகின்றது.

கணினியின் பாகங்கள் முக்கிய பகுதிகளாக அவற்றின் செயற்பாட்டிற்கேற்ப வகைப்படத்தப்பட்டிருக்கின்றது. அவை யாவன உள்ளீட்டுக் கருவி (Input Device), மத்திய செயற்பாட்டுக்கருவி (Central processing unit), வெளியீட்டுக் கருவி (Output Device) என வகைப்படுத்தப்படுகின்றன. கணினியில் தரவுகளை (Data) உட்செலுத்துவதற்கு பயன்படும் அதன் கருவிகள் உள்ளீட்டுக் கருவிகள் என அழைக்கப்படுகின்றன. உதாரணமாக Keyboard(தட்டச்சுப்பலகை) ஒரு Input Device ஆகும்.

உட்செலுத்தப்பட்ட தரவுகள், அதனுடைய செயற்பாடு, வேலைப்பாடுகளுக்காக மத்திய செயற்பாட்டுப் பகுதியில் அனுப்பிவைத்து அதற்கான வேலைகள் செயற்படுத்தப்படுகின்றன. பின்பு அந்த செயற்பாட்டின் முடிவுகள் வெளியீட்டுக்கருவிகளுக்கு அனுப்பப்படுகிறது. Display Monitor ஒரு Output Device க்கான உதாரணமாகும்.

கணினியின் மூளை என CPU அழைக்கப்படுகிறது. ஒரு கணினியின் திறன், வேகம், வலு என்பவை இதன் அடிப்படையிலேயே தங்கியிருக்கிறது. கணினியின் வேகம் என்பது ஒரு செக்கனில் எத்தனையோ வலுவுடைய வேலைகளைச் செய்யக்கூடியது என்பதில் வகுக்கப்படுகின்றது. இது அதிர்வலகில் (Hertz) அளக்கப்படுகிறது. பொதுவாக இது KHz, MHz, GHz அளவுகளிலேயே கணிக்கப்படும்.

நினைவகம் (Memory) கணினியில் தகவல்களைச் சேமிப்புச் செய்ய பயன்படும் பாகமாகும். நீண்ட காலத்திற்கு முக்கியமான தரவுகளை சேமித்து வைப்பதற்கு வன்தட்டு (Hard Disk) பயன்படுத்தப்படுகிறது. கணினித் தொழில் பாட்டில் இது முக்கிய பங்கை வகிக்கின்றது. இதனுடைய கொள்ளளவு (Capacity) பின்வரும் அலகுகளில் நிர்ணயிக்கப்படுகின்றது. b(bit), b yte, kb (Kilo bytel, Mb (Mega byte), Gb (Giga byte), Tb (Tera byte) என்பவற்றில் அளக்கப்படுகின்றன.


கணினி தனக்குத் தேவையான தற்காலிகத் தகவல்களைச் சேகரிக்க RAM (Random Access Memory) எனும் பாகத்தைக் கொண்டுள்ளது. இதன் வலு அதிகரிக்கும் போது தரவுப் பரிமாற்றத்தின் (Data Transter) வேகம் அதிகரிக்கும். ROM - (Read only Memory) வாசிப்பதற்கு மட்டும் பதியப்பட்ட தரவுகளை மாற்றம் (Replace) செய்வதற்கோ, அழிப்பதற்கோ (Delete) இயலாத காரியமாகும்.

கணினியின் நினைவகம் கொள்ளளவு (Capacity) அதிகரிக்கச் செயல்முறைகள் வேகமாகவும், திறமையாகவும் தடையின்றிச் செயற்படும். ஒரு கணினியில் இருந்து இன்னொரு கணினிக்கு தரவுகளை மாற்றம் செய்யப் பல இலத்திரனியல் பாகங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. Floppy Diskette முதல் USB (universal serial Bus) Flash Drive வரை உதாரணமாக எடுத்துக்கொள்ளப்படலாம்.

கணினி அமைப்பின் மிக முக்கியமான பாகங்களில் ஒன்றாக விளங்குவது Mother Board ஆகும். கணினியில் பாகங்கள் அனைத்தையும் ஒரே சமயத்தில் ஒருங்கிணைத்து அவற்றிற்கிடையே தொடர்பை ஏற்படுத்தி வெற்றிகரமாகச் செயற்பட வைப்பதே இதன் தொழிற்பாடாகும். எனவேதான் இது கணினியின் தாய்ப்பாகம் எனப் போற்றப்படுகின்றது.

Mother Boardஆனது CPU, Memory போன்ற பாகங்களைத் தன்னகத்தே உள்ளடக்கியிருக்கின்றது. தகவல் தொடர்பை உறுதிப்படுத்தும் தகவல்களை காவிச்செல்லும் பாகத்தைத் தரவுப் பேருந்து (Data Bus) என அழைக்கலாம். கணினியில் முழுக்கட்டமைப்பின் (Fully Structure) வேகத்தை நிர்ணயிப்பது இதனுடைய தொழில்நுட்பச் சிறப்பாகும்.

ஒரு கணினியானது அதனுடைய கட்டமைப்பக்கு ஏற்ப வன்பொருள் (Hard ware), மென்பொருள் (Software) எனும்



யில் பௌதீக ரீதியாக வடிவமைக்கப்பட்ட பாகங்கள் (Physical Devices) அனைத்தும் வன்பொருள் என அழைக்கப்படுகின்றது. இவை தொட்டு உணரக்கூடியதாக உள்ளன. Key board,Mouse, Monitor, Printer,Hard Disk, Ram போன்றவை வன்பொருளுக்கான உதாரணங்களாகும். கணினியை நேரடி நெறிப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்குரிய நிகழ்ச்சிகள் (Program) அனைத்தும் மென்பொருள் (Software) என அழைக்கப்படும். இது கண்ணால் பார்த்து இயக்கக்கூடியதாக அமைந்துள்ளன.

விலை மதிப்பற்ற உணர்வுகளைக்கொண்ட மனிதனை விட கணினி சிறந்தது எனக் கூறமுடியாவிட்டாலும் மனிதனே கணினியின் கர்த்தாவாகவும், கணினி மனிதனுடைய அடிமையாகவும் செயற்படுகின்றது. கணினியை மனிதனுக்கு ஒப்பாக நேசிக்கும் கணினிப் பற்றாளர்கள் இவ்வுலகம் எங்கும் பரந்து காணப்படுகின்றனர். இலத்திரனியல் தகவல் பரிமாற்றத்தில் புரட்சியை ஏற்படுத்திய E - Mail (மின்னஞ்சல்) அனைத்துத் துறைகளிலும் பரந்து விரிந்து காணப்படுகிறது. கணினியானது Binary (0,1)ஐ மாத்திரமே அடிப்படையாக விளக்கிக் கொள்ளும். இதுவே இயந்திர மொழி (Machine Language) என அழைக்கப்படுகின்றது. பின்பு இவை பல்வேறு மொழிபெயர்ப்பு மென்பொருளின் ஊடாக (Inter Preters) மாற்றம் செய்யப் படுகின்றன.

ஒன்றுக்கு மேற்பட்ட கணினிகளை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தித் தகவல் பரிமாற்றத்தைப் பாதுகாப்பாகவும், விரைவாகவும் செய்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு Network எனும் பெயர் கொண்டழைக்கப்படுகிறது. இதனுடைய மிகப்பெரிய வடிவமே இணையம் (Internet) ஆகும்.

கணினியை இயக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் மென்பொருள் நிகழ்ச்சி (Softwarw Programe) Operating System என அழைக்கப்படுகின்றது. இதன் செயற்பாட்டை நிலைகுலைக்கவும், குழப்பத்திற்கு உள்ளாக்குவதற்கும் மென்பொருள் துறையில் தேர்ச்சி பெற்ற Programmers உருவாக்கும் Software Programs எல்லாம் Virus என்று அழைக்கப்படுகின்றது. கணினியின் ஊடாகக் குற்றம் இடம்பெறுவதற்கு (Electronic Crime) இவையே முழுமுதற் காரணமாகின்றன. Ms Dos, Windows, Linux, Mac ஆகியவை Operating Systemஇற்கான எடுத்துக் காட்டுகளாகும்.

கணினி என்பது ஒரு இலத்திரனியல் புரட்சியினால் உருவான கடல். அதைப்பற்றி அறிவதற்கும், தெரிவதற்கும் உரிய ஆர்வம் வந்தால் அது மனிதனையே தன் பக்கம் முழுமையாக ஈர்த்துவிடும். அதனால்தான் என்னவோ மனிதன் பூச்சியத்திற்கும் ஒன்றிற்கும் (0,1) உணர்வுகொடுக்க முயல்கிறான். முழுமையாக நோக்கினால் மனிதன் கணினிக்கு உயிரும், உணர்வும் கொடுக்கவேண்டும் என்று சிந்திக்கும் அளவிற்கு மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவேதான் "கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற வாசகம் மாறி "கணினி கற்றவனக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற யதார்த்த பூர்வமான நவீனவாசகமாக கூறினால் அது மிகையாகாது.


உங்கள் ஆக்கங்கள் **கம்ப்யூட்டர் ருடே** சஞ்சிகையில் வெளிவர வேண்டுமா?
எழுதி அனுப்புங்கள்

**info@computertoday.lk OR**

**கம்ப்யூட்டர் ருடே**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# Advertisement Rate Card

## In Pages

| Size | | Full Colour | Two Colour | One Colour |
|---|---|---|---|---|
| Full Page | (24cm x 17.5cm) | 15,000 | 10,000 | 7,000 |
| Half Page | (12cm z 17.5cm) | 10,000 | 6,000 | 4,500 |
| 1/4 Page | (12cm x 8.5cm) | 8,000 | 4,500 | 3,000 |
| Strip | (5cm x 17.5cm) | 8,000 | 4,500 | 3,000 |
| Box | (5cmx8.5cm) | 5,000 | 2,500 | 1,500 |

Cover Page
-
Full Colour

Back - Rs. 25,000
Front in - Rs. 22,500
Back in - Rs. 20,000

**கம்ப்யூட்டர் ருடே**
கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

# கைகோர்க்கும் NOKIA Connecting People



# Microsoft ஜாம்பவான்கள்

கணினி மென்பொருள் துறையில் ஜாம்பவானாகத் திகழும் மைக்ரோசொப்டும், கைத்தொலைபேசி, கம்பியில்லாத் தொழில் நுட்பத்துறையில் முன்னணி வகிக்கும் நொக்கியாவும் அண்மையில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. இதன்படி இனிவரும் காலங்களில் மைக்ரோசொப்டின் விண்டோஸ் மொபைல் இயங்குதளம் (MS Windows Mobile Operating System) நொக் கியா கையடக்கத் தொலைபேசிகளில் பயன்படுத்தப்பட இருக் கின்றது. அத்துடன் மைக்ரோசொப்டின் தேடுதளமான Bing Search Engineதான் இனி நொக்கியாவின் தேடுதளமாக காணப்படும். அதேநேரம் நொக்கியா நிறுவனத்தின் வரைபட சேவையை (Nokia Maps) மைக்ரோசாப்ட் நிறுவனம் பயன்படுத்தும்.

நொக்கியா நிறுவனம் இதுவரை தனது கைத்தொலைபேசி களில் ஜாவா, சிம்பியன் மற்றும் மீகோ இயங்குதளங்களையே பாவித்து வந்தது. இந்த ஒப்பந்தத்தின் பின்னர் விண்டோஸ் இயங்குதளம் தான் வரப்போகின்றது. இன்றைய உலகில் ஸ்மார்ட் போன்களின் பாவனை அதிகரித்து வருகின்ற அதே வேளையில் அதிகமான ஸ்மார்ட் போன்களை தயாரிக்கும் நிறுவனமாக நோக்கி யாவே காணப்படுகிறது. இதனால் இக்கூட்டணியானது தொழிநுட்ப உலகில் பல புதிய பரிமாணங்களை தருவிக்கும் என எதிர்பார்க்க லாம். அதன் பின்னர் ஸ்மார்ட் போன்களை இலகுவாக கையாளும் எளிய முறைகள் வந்து விடும். இதுவரை காலமும் விண்டோஸ் (Windows Mobile) கையடக்க தொலைபேசிகள் என்ற பதம் நடைமுறையில் காணப்பட்டாலும், அது வேறொரு ஒபரேட்டிங் சிஸ்டத்தினை அடிப்படையாகக் கொண்டே இயங்கி வந்தது. ஆனால் இனி, மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் எம்.எஸ் ஒபிஸ், ஈமெயில் பயன்பாடு, பல் அழைப்பு நிலை (conference), உடனடி செய்தி சேவை (Instant Message System), ஓடியோ - வீடியோ வசதிகள் (Audio & Music System) ஆகியன விண்டோஸ் (Windows Mobile) கையடக்க தொலைபேசிகளில் பயன்படுத்தப் பட்டதைப் போன்று நொக்கியாவிலும் பயன்படுத்தப்படும்.

பொதுவாக மைக்ரோசாப்ட் நிறுவனம் வழங்கும் தொழிநுட்ப வசதிகள் தரமானதும் பாவனையாளர்களுக்கு ஏற்றவகையில் எளியமுறையில் அமைந்திருப்பதும் நாம் அறிந்ததே. எனவே இந்த ஒப்பந்தத்தின் பின் தரமான கையடக்கத் தொலைபேசியும், மிகவும் பெறுமதி மிக்க மென்பொருள் உள்ளடக்கமுமாக நொக்கியா கையடக்க ஸ்மார்ட் தொலைபேசிகளின் பாவனையும், அதன் உற்பத்தியும் வெகுவாக அதிகரிக்க போகின்றன.

உலக அளவில் அப்பிள் நிறுவனத்தின் ஐபோன் மற்றும் கூகிள் நிறுவனத்தின் அன்ட்ரோய்ட் மொபைல் இயங்குதளங் களுக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருக்கும் அதே வேளை மைக்ரோசாப்ட் நிறு வனத்தின் மொபைல் விண் டோஸ் இயங்குதளங்களுக்கு இவை பெரும் போட்டியாக வும் இருந்து வருகின்றன. அத்தோடு நொக்கியா நிறுவ னத்தின் வரைபட சேவையை (Maps Service) மைக்ரோ சொப்ட் தனது தேடுதளத் தில் பயன்படுத்தப் போகின்றது. இதனால் மென்பொருள் மற்றும் கைத்தொலைபேசி தொழில்நுட்பத்துறை யில் ஏற்படப்போகும் பாரிய போட்டியின் விளைவாக வாடிக் கையாளர்களுக்கு தரமான உற்பத்திகள் தாராளமாகச் சந் தைக்கு வரப் போகின்றன.

NOKIA Office





# சிறுவயதிலேயே கணினிக் கல்வி எதிர்காலத்துக்கு அவசியம்



## ஜூனியர் கம்ப்யூட்டர் டுடே

வெளியுலகச் செயற்பாடுகள், நல்ல நண்பர்கள், சிறந்த குடும்பம். சரியான முறையிலான கல்வி போன்ற பல காரணிகள் ஒரு குழந்தையினுடைய ஆரோக்கியமான உளவளர்ச்சியினை தீர்மானிக்கின்றன.

ஆகவே, குழந்தையானது அளவாக கணினியைப் பாவிப்பதுடன் வெளியுலகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் முக்கியமானதாகும்.

குழந்தைகளுக்கு உகந்த வயதுகளில் சரியான விடயங்களைக் கற்றுக்தருவது பெற்றோாகளின் கடமை. கணினித் தொழிநுட்பத்தினை எப்போது எப்படிக் கற்றுக் கொடுப்பது என்று இன்றைய பெற்றோர்கள் குழப்ப மடைகிறார்கள்.

இன்றயை உலகில், கணினி தொழில்நுட்பமானது சகல துறைகளையும் பாரிய வளர்ச்சிக்கு உட்படுத்தியிருக்கின்றது. கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆரம்ப காலங்களில் மாணவர்களின் மேற்படிப்புக்களிலேயே கணினியானது பாவிக்கப்பட்டது.

ஆனால் தற்போது குறிப்பாக இணையத்தின் அறிமுகத்தின் பின் குழந்தைப் பருவங்களிலேயே கணினி பாவனை அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனால், சிறு வயதுகளில் கணினிகளைப் பாவிப்பதற்கு குழந்தைகளுக்கு பெற்றோர் உதவி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

எந்தெந்த வயதுகளில், எவ்வகையான பாவனை முறைகளை குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் அவை எவ்வகையான நன்மைகளைத் தங்கள் குழந்தைகளுக்குப் பெற்றுத்தரும் என்பன போன்ற விபரங்களைப் பெற்றோர்கள் அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

தங்களுக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்தல், அவற்றை ஆராய்ந்து முடிவுகளை, தீர்வுகளை மேற் கொள்ளுதல், எதிர்கால வேலைவாய்ப்புக்கான தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சரியான அடித்தளத்தை இடுதல் போன்றன பல நன்மைகளைக் கணினி தொழில்நுட்பம் குழந்தைகளுக்கு வழங்குகிறது.

கற்றலில் உதவி செய்கின்ற ஒரு ஊடகமாகவும் இது விளங்குகிறது. ஆயினும் இவ் விடயத்தில் ஒன்றைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமானது கணினி தொழில்நுட்பமானது கல்விக்கு உறுதுணையாக அமையுமே தவிர ஒரு சிறந்த மாணவனை, மாணவியை உருவாக்குவதற்கு இது மட்டுமே போதாது.

குழந்தைகளினுடைய ஆரோக்கியமான வளர்ச்சியில் முழுக்குடும்ப அங்கத்தவர்களுக்குமே பொறுப்பு இருப்பதை மறுக்க இயலாது. குழந்தைகளின் நடவடிக்கைகளில் பங்குகொண்டு சரியான முறையில் வழிநடத்தி, அவர்களை உற்சாகமூட்டும் போதுதான் அவர்கள் விரை வாகவும், நல்ல முறையிலும் வளர்த்துக் கொள்கிறார்கள்.

ஒரு குழந்தையினுடைய கல்விச் செயற்பாடுகளில் பங்குகொள்வதற்கு கணினித் தொழில்நுட்பம் வழிவகுக்கிறது. அவர்கள் கணினிச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது அவர்களுடன் பங்குகொள்வது சுவாரசியமானதாகும்.

தங்கள் குழந்தைகளுக்கு எந்த வயதுகளில் கணினி பாவனை முறையை அறிமுகப்படுத்துவது, எவ்வாறான கணினி செயற்பாடுகள் நல்லவை, இணையத்தை எவ்வாறு வயதுக்கேற்ப ஆரோக்கியமான முறையில் உபயோகிப்பது போன்ற பல கேள்விகள் பெற்றோர் மனங்களில் எழுவது இயல்பே.

இவை தொடர்பாக முறையான ஆய்வுகள் பெரிதாக மேற்கொள்ளப்படவில்லையாயினும் இத்துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் நல்ல ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் சிபார்சு செய்கின்றனர். ஆயினும் இந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த முன் இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

1. ஒவ்வொரு குழந்தைகளும் அவர்களது விருத்தியிலும் முதிர்ச்சியிலும் வித்தியாசப் படுகிறார்கள். ஆகவே பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுகடைய உணர்வுகளையும், ஆற்றலையும் சரியாகப் புரிந்துகொண்டு அவற்றிற்கேற்ப கணினி தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

2. கணினி கற்பதை ஒரு மைல் கல்லாக பெற்றோர்கள் எண்ணக்கூடாது. உதாரணமாக ஒரு குழந்தை 15 மாதத்தில்

நடக்க ஆரம்பிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பைபோல் கணினி கற்றுக்கொள்வதை நோக்குதல் கூடாது.

மேற்சொன்ன இரு விடயங்களையும் கருத்தில் கொள்வது மிக அவசியம்.

இனி எவ்வயதுகளில் எவ்வகையான கணினிப் பாவனை முறைகளை அறிமுகப்படுத்தலாம் எனப் பார்ப்போம்.

**2 வயது தொடக்கம் 3 வயது வரை**

இவ்வயதுகளில் கணினி பாவனை முறையை அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. ஆயினும் பெற்றொர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் கணினியை பாவிக்கும் போது அவர்களை அவதானிப்பது குழந்தைகளுக்குப் பொருத்தமானதாகும்.

**பெற்றோர்கள் செய்யக்கூடியவை.**

- நீங்கள் கணினியைப் பாவிக்கும் போது உங்கள் குழந்தையை மடியில் வைத்திருக்கலாம்.
- குழந்தையின் கைகளின் மீது உங்கள் கைகளை வைத்து மவுஸ் (mouse) இனை இயக்குவதன் மூலம் அது எவ்வாறு தொழிற்படுகிறது எனக் காட்டலாம்.
- குழந்தைகள் பொருட்களுடன் விளையாடுவதற்கு விருப்பமுடையவர்கள் எனவே கீ போர்ட் (Keyboard) இல் எவ்வாறு கட்டைகளை அழுத்துவது என சொல்லிக்கொடுக்கலாம்.
- குழந்தைகள் கணினியை பாவிப்பது போன்ற படங்கள் உள்ள புத்தகங்கள், வீடியோ புரோக்கிராம்கள் என்பனவற்றை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தலாம். இது அவர்களுக்கு கணினி பாவனை பற்றிய முக்கியத்துவத்தை உணர்த்துவதுடன் உற்சாகத்தையும் அளிக்கும்.

**4 வயது தொடக்கம் 7 வயது வரை**

இவ்வயதுகளில் கணினி பாவனையானது தீவிர முக்கியத்துவம் உடையதல்ல. எனினும் கல்வி சம்பந்தப்பட்ட மென்பொருட்கள் (software), மற்றும் கணினி விளையாட்டுக் (computer Game) களைப் பாவிக்கக் கற்றுக்கொடுக்கலாம்.

6 அல்லது 7 வயதுடையவர்கள் இணையத்தளத்தை பெற்றோர்களின் உதவியுடன் உபயோகிக்கத் தொடங்கலாம். இவர்கள் குழந்தைகளுக்கான இணையப் பக்கங்களைப் பயன்படுத்தலாம்.

இவ்வாறான பாவிப்புகளின் போது பெற்றோர்கள் இணைய பக்கங்களை வாசிக்க உதவி செய்யலாம். அத்துடன் இணையத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் கற்றுக் கொடுக்கலாம்.

**பெற்றோர்கள் செய்யக் கூடியவை.**

- உங்களுக்கு இயலுமானவரை குழந்தைகளின் கணினிப் பாவனை நேரங்களில் உடனிருங்கள்.




- உங்களுடைய அனுபவங்கள் வாயிலாக நல்ல பழக்க வழக்கங்களையும் ஒழுங்கு முறைகறைகளையும் சொல்லிக்கொடுங்கள்.
- குழந்தைகளுடைய சின்னச் சின்ன ஆர்வங்களைத் தட்டிக்கொடுங்கள். உதாரணமாக, அவர்கள் கணினியில் வரைந்த படமொன்றை பிறின்ட் செய்து அவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் அவர்களை மகிழ்வியுங்கள்.
- குழந்தைகள் மின்னஞ்சல் பாவிப்பவர்களாயின் அந்த மின்னஞ்சலை நீங்களும் பாவிப்பதன் மூலம் எவ்வாறு மின்னஞ்சல் எழுதுவது எவ்வாறு பதில் அனுப்புவது போன்ற விடயங்களை சொல்லிக் கொடுங்கள்.
- பெரும்பாலும் பாடசாலைகள் தங்களுக்கான றுநடி பக்கங்களை கொண்டிருக்கின்றன. ஆசிரியர்களுடன் மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளக்கூடிய சாத்தியங்களும் உண்டு. இவ்வாறான வசதிகளைக் கண்டறிவதன் மூலம் குழந்தைகளின் பாடசாலைச் செயற்பாட்டில் கூடுதலாகப் பங்கு கொள்ளலாம்.
- நூலகர்கள், ஆசிரியாகள் போன்றோருடன் கலந்துரையாடுவதன் மூலமும், இவை தொடர்பான சஞ்சிகைளை வாசிப்பதன் மூலமும் எவ்வாறு கணினியை குழந்தைகளின் தேவைகளுக்காக ஆரோக்கியமான முறையில் பன்படுத்தலாம் எனக் கண்டறியுங்கள்.

**8வயது தொடக்கம் 11 வயது வரை**

இந்த வயதுக்காலம் கணினியையும் இணையத்தையும் அதிக அளவில் உபயோகிக்க உகந்தவை. இணையத்தை பாடசாலைத் தேவைகளுக்காக, உதாரணமாக பாடங்களைப் பெறுவதற்கும், கலைக்களஞ்சியங்களைப் பார்ப்பதற்கும் பயன்படுத்தலாம். மற்றும் நண்பர்கள் உறவினர்களுடன் மின்னஞ்சல் தொடர்புகளையும் ஏற்படுத்த ஆரம்பிக்கலாம்.



**எந்தெந்த வயதுகளில், எவ்வகையான பாவனை முறைகளைக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவை எவ்வகையான நன்மைகளைத் தங்கள் குழந்தைகளுக்குப் பெற்றுத்தரும் என்பன போன்ற விவரங்களைப் பெற்றோர்கள் அறிந்து கொள்வது அவசியமாகின்றது.**

இந்த வயதுகளில் குழந்தைகள் சுதந்திரமாகச் சிந்திக்கவும், செயற்படவும் ஆரம்பிக்கிறார்கள். ஆகவே அவர்களை உன்னிப்பாக அவதானிப்பதுடன் சரியான ஒழுங்கு முறைகளையும் (Behaviour) கற்றுக்கொடுக்க வேண்டிய அவசியம் இவ்வயதுகளில் அதிகம் உண்டு.

**பெற்றோர்கள் செய்யக்கூடியவை**

• இணையம், கணினி பாவனை பற்றிய சரியான விதிமுறைகளை குழந்தைகளுக்கு அறிவுறுத்துங்கள். அவற்றை மீறினால் விளையக்கூடிய தீமைகள் பற்றியும் அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

• பெரும்பாலான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கணினி விளையாட்டுக்கள் உற்பத்தியாளர்கள், இவ்வயதுடைய குழந்தைகளையே தங்களுடைய நுகர்வோராகக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே ஏராளமான கவர்ச்சிகரமான விளம்பரங்களால் குழந்தைகள் ஈர்க்கப்படலாம். இணையம் மூலமாக இவ்வகையான பொருட்களை வாங்கவும் வசதிகள் உள்ளன உங்கள் அனுமதியின்றி இன்டர் நெட்டினூடாக பொருட்களை வாங்க அனுமதிக்க வேண்டாம். அத்துடன் உங்களது தொலைபேசி பில்லையும் கிரெடிட் கார்ட் பில்லையும் கவனமாகச் சரிபாருங்கள்.

• கணினிப் பாவனை நேரம் அதிகமாவதும், குழந்தைகளின் வெளியுலக செயற்பாடுகளைக் குறைக்கும் ஆகவே கணினியைப் பாவிப்பதற்குரிய நேரத்தை வரையறை செய்யுங்கள்.

**12 வயது தொடக்கம் 14 வயது வரை**

இவ்வயதுகளில் பிள்ளைகள் இணையத்தினுடைய முழுமையான பயன்களையும் பெறத் தொடங்கலாம் பல்வேறு சஞ்சிகைகள், பத்திரிகைகள் கட்டுரைகள் என்பனவற்றை வாசிக்கலாம். இவ்வயதுளில் பெரும்பாலான பிள்ளைகள் இணைய அரட்டை(chat) எனப்படுகின்ற இணையத்தினூடாக மற்றவர்களுடன் உரையாடிக்கொள்ளும் முறையைப் பாவிக்கின்றனர்.

இவர்களுக்குரிய நல்ல அரட்டை (chat) சேவைகளைப் பெற பல நிறுவனங்கள் வழங்கு கின்றன. இதன் மூலமாக தங்களுக்கு ஒத்த விருப்பு வெறுப்புகளைக் கொண்ட பலருடன் அவர்கள் தொடர்புகொள்ளக்கூடியதாகவும், கற்றல் பரிமாற்றங்களைச் செய்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கும். எனினும் ஏனையவற்றை விடவும் இணைய அரட்டை தொடர்பாக பெற்றோர்களது அவதானம் அதிகமாக இருக்க வேண்டும்.

**பெற்றோர்கள் செய்யக்கூடியவை.**

• இந்த வயதுப் பகுதியில் பிள்ளைகள் தாமாகவே விடயங்களை அறிய முற்படுவர். நல்ல ஆலோசனைகளையும் வரையறைகளையும் அவர்களுக்குத் தெளிவாக விளங்கப்படுத்துங்கள்.

• அவர்களுடைய இணையப் பாவிப்புகளின்போது கூடவே இருக்க முயற்சியுங்கள். இது மிகவும் கடினமான காரியம் எனினும் மிகவும் அத்தியாவசியமானது.

• இணைய உலகத்தில் சட்ட திட்டங்கள் உள்ளன. இவ்வாறான சட்டதிட்டங்களையும், அவற்றை மீறினால், வரும் விளைவுகளைப் பற்றியும் அவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.

• எந்தெந்த அரட்டைகள் (chat) பிள்ளைகளுக்குப் பொருத்தமானவை எனக் கண்டறிந்து அவர்களுக்குத் தெரிவியுங்கள். அத்துடன் அதிர் எவ்வளவு நேரத்தை செலவழிக்கலாம் எனவும் வரையறை செய்யுங்கள்.




• இணைய உபயோகங்களின் போது விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஏதேனும் நடக்குமானால் (உதாரணமாக மின்னஞ்சல் பயமுறுத்தல்கள்) அவை தொடர்பாக எவ்வகையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதைப் பற்றி பிள்ளைகளுக்கு அறிவுறுத்துங்கள்.

• இணையத்திலிருந்து நல்ல கணினி விளையாட்டுக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அநேகமானவை பிள்ளைகளுக்குப் பொருத்மானவையாக இருந்தாலும் சில அளவுக்கு மீறிய வன்முறை உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியவை. இவை தொடர்பாக பிள்ளைகளுக்குத் தெளிவான ஆலோசனையை வழங்குவதுடன் அவர்கள் விளையாடுகின்ற விளையாட்டுக்களையும் கண்காணித்துக் கொள்ளுங்கள்.

**15 வயது தொடக்கம் 18 வயது வரை**

இவ்வயதுப் பிள்ளைகளுக்கு இணையம் மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். கல்வி சம்பந்தப்பட்ட தேடல்கள். பொது அறிவு மற்றும் உலக நடப்புக்களைத் தெரிந்து கொள்வதற்கும். ஆராய்வதற்கும் இணையம் இவற்களுக்குப் பெரும் துணை புரிகின்றது. தங்களுடைய மேற்படிப்பைத் தொடர்வதற்கு எவ்வகையான துறையைத் தேர்ந்தெடுப்பது, எந்தப் பல்கலைக் கழகங்கள் அல்லது கல்லூரிகள் சிறந்தவை. போன்ற சிக்கலான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இணையத்தின் துணை இன்றியமையாததாகின்றது. இவ் வயதுகளில் பிள்ளைகள் அதிக நேரத்தை இணையத்தில் செலவழிக்க வேண்டியிருக்கும்.

**பெற்றோர்கள் செய்யக்கூடியவை**

• உங்கள் பிள்ளைகைளிடம் உங்கள் குடும்பத்திற்குத் தேவையான சில விடயங்களைக் கொடுத்து அவை பற்றி இணயைத்தில் ஆராயச் சொல்லுங்கள். உதாரணமாக, விடுமுறைச் சுற்றுலா ஒன்றுக்குச் செல்வதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தல், ஒரு பொருளைக் கொள்வனவு செய்வதற்கு முன்பு அது பற்றிய ஆய்வுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பின்பு அவர்களின் ஆராய்வின் முடிவுகளைப் பற்றி ஒன்றாக அமர்ந்து விவாதியுங்கள். இவ்வாறு குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றாக இருந்து விவாதிப்பது அவர்கள் சரியான வகையில் ஆராய்வுகளை மேற்கொள்ள உதவும்.

• உங்கள் பிள்ளைகள் கணினிப் பாவனையுடன் வெளியுலகச் செயற்பாடுகளையும் சரியான விகிதத்தில் மேற்கொள்கிறார்களா என அவதானியுங்கள்.

• உங்கள் பிள்ளைகள் கணினியை கற்பதில் அதிக ஆர்வம் காட்டுவார்களாயின் அவர்களை ஊக்குவியுங்கள்.

மேற்குறிப்பிட்ட ஆலோசனைகள் இன்றைய தொழிநுட்ப உலகில் உங்கள் குழந்தைகளை வழிநடத்த உதவக்

கூடியவை. இதுவரை குறிப்பிட்ட விடயங்கள் சகல குழந்தைகளுக்கும் பொதுவானவை இனி பெண் குழந்தைகளின் கணினி பாவனை பற்றிய சில தகவல்களைப் பார்ப்போம்.

**பெண்குழந்தைகளும் கணினிப் பாவனையும்**

குழந்தைகளின் கணினிப் பாவனை பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகள் பின்வரும் முடிவுகளைத் தருகின்றன.

- ஆரம்பப் பாடசாலைகளில் ஆண் பெண் குழந்தைகளின் கணினிப் பாவனையில் அதிக வேறுபாடு இல்லை.
- அதன் பின்னரான கலங்களில் கணினி உலகமானது பெரும்பாலும் ஆண்பிள்ளைகளைச் சார்ந்தே இருக்கின்றது. உதாரணமாக கணினி விளையாட்டுக்களைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக பெண் பிள்ளைகளின் கணினி ஆர்வம் மெது மெதுவாக குறைவடைகிறது.
- பாடசாலைத் தேவைகளுக்காக ஆண்பிள்ளைகளை விட பெண் பிள்ளைகளே அதிகமாக கணினியைப் பாவிக்கின்றனர். ஆயினும் ஏனைய செயற்பாடுகளில் (உதாரணமாக இணைப் பாவனை) பெண் பிள்ளைகளின் பாவனை மிகவும் குறைவானதாகும்.

உலகின் தற்போதைய எதிர்கால வேலைவாய்ப்புக்கள் பெரும்பாலும் கணினிச் சார்ந்தே நிர்ணயிக்கப்படுகின்றன. கணினி தொழி நுட்பத்தில் தேர்ச்சி பெற்றிப்பது ஆண், பெண்பால் வேறுபாடின்றி அவசியமாகின்றது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கணினிப் பாவனையின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துவதுடன் அவர்களை உற்சாகப் படுத்துதலும் அவசியமாகின்றது. குழந்தைகள் உரிய முறையில் கணினித் தொழிநுட்பத்தைக் கற்றுக் கொள்வதற்கும் பெற்றோர்களின் பங்கு அவசியமாகின்றது. தங்கள் குழந்தைகளின் ஆற்றல்களைச் சரியாக இனம் கண்டு அதற்கேற்ப அவர்களுக்குச் சரியான வயதுகளில் உரிய கணினிப் பாவனை முறையை அறிமுகப்படுத்தி அவர்களின் எதிர்காலத்தை அத்திவாரமிடுவது அவசியமான கடமையாகும்.




உங்கள் ஆக்கங்கள் **கம்ப்யூட்டர் ருடே** சஞ்சிகையில் வெளிவர வேண்டுமா?
எழுதி அனுப்புங்கள்

**info@computertoday.lk OR**

**கம்ப்யூட்டர் ருடே**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



கூடியவை. இதுவரை குறிப்பிட்ட விடயங்கள் சகல குழந்தைகளுக்கும் பொதுவானவை இனி பெண் குழந்தைகளின் கணினி பாவனை பற்றிய சில தகவல்களைப் பார்ப்போம்.

**பெண்குழந்தைகளும் கணினிப் பாவனையும்**

குழந்தைகளின் கணினிப் பாவனை பற்றிய பல்வாறு ஆராய்ச்சிகள் பின்வரும் முடிவுகளைத் தருகின்றன.

- ஆரம்பப் பாடசாலைகளில் ஆண் பெண் குழந்தைகளின் கணினிப் பாவனையில் அதிக வேறுபாடு இல்லை.
- அதன் பின்னரான கலங்களில் கணினி உலகமானது பெரும்பாலும் ஆண்பிள்ளைகளைச் சார்ந்தே இருக்கின்றது. உதாரணமாக கணினி விளையாட்டுக்களைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக பெண் பிள்ளைகளின் கணினி ஆர்வம் மெது மெதுவாக குறைவடைகிறது.
- பாடசாலைத் தேவைகளுக்காக ஆண்பிள்ளைகளை விட பெண் பிள்ளைகளே அதிகமாக கணினியைப் பாவிக்கின்றனர். ஆயினும் ஏனைய செயற்பாடுகளில் (உதாரணமாக இணைப் பாவனை) பெண் பிள்ளைகளின் பாவனை மிகவும் குறைவானதாகும்.

உலகின் தற்போதைய எதிர்கால வேலைவாய்ப்புக்கள் பெரும்பாலும் கணினிச் சார்ந்தே நிர்ணயிக்கப்படுகின்றன. கணினி தொழி நுட்பத்தில் தேர்ச்சி பெற்றிப்பது ஆண், பெண்பால் வேறுபாடின்றி அவசியமாகின்றது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கணினிப் பாவனையின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துவதுடன் அவர்களை உற்சாகப் படுத்துதலும் அவசியமாகின்றது. குழந்தைகள் உரிய முறையில் கணினித் தொழிநுட்பத்தைக் கற்றுக் கொள்வதற்கும் பெற்றோர்களின் பங்கு அவசியமாகின்றது. தங்கள் குழந்தைகளின் ஆற்றல்களைச் சரியாக இனம் கண்டு அதற்கேற்ப அவர்களுக்குச் சரியான வயதுகளில் உரிய கணினிப் பாவனை முறையை அறிமுகப்படுத்தி அவர்களின் எதிர்காலத்தை அத்திவாரமிடுவது அவசியமான கடமையாகும்.




உங்கள் ஆக்கங்கள் கம்ப்யூட்டர் ருடே சஞ்சிகையில் வெளிவர வேண்டுமா?
எழுதி அனுப்புங்கள்

**info@computertoday.lk OR**

**கம்ப்யூட்டர் ருடே**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

AutoCAD® 2010

TRAINING

COURSE Details

- UTIT/1 AutoCAD Toos & 2D Drawings
- UTIT/2 AutoCAD Ad 2D Drawings & 3D
- UTIT/3 3DMax Tools & 3D Model

STARTING PROFESSIONAL TRAINING FOR DRAFSMEN & STUDENTS TO BECOME MASTERING ARCHITECTURAL, MECHANICAL & ELECTRICAL DRAWINGS


UTHAYAN IT ISLAND
249, Kasthuriyar Road,
JAFFNA.
Phone - 021 567 6700

# Photoshop இனை முன்னிருப்பு (Default Settings) உள்ளமைக்குக் கொண்டுவருதல்

நாம் தொடர்சியாக பயன்படுத்தும் பயன்பாடுளின் உள்ளமைவுகளை (Settings) அவ்வப்போது மாற்றஞ்செய்து பாவிப்பது வழமை. திடிரேன ஒரு நாள் எமது photoshop ற்கான உள்ளமைவுகளை அதனது முன்னிருப்பு உள்ளமைப்புக்கு (Default Settings) கொண்டு வரவேண்டிய தேவையொன்று வந்துவிட்டால் , அதை எவ்வாறு கொண்டுவருவது எனப்பார்ப்போம். இதனை நாம் இரண்டு வழிகளில் செய்யலாம்

முறை 1 :

எமது கணித்திரையிலுள்ள Phtoshop பயன்பாட்டுக்கான icon ஐ இரட்டை சொடுக்கு கொடுத்த நொடிப்பொழுதில் Ctrl , Alt , Shift ஆகிய மூன்று விசைகளையும் ஒருசேர அழுத்தவேண்டும் , அப்பொழுது வருகிற முன் தோன்று சாளரம் ( popup window ), "உள்ளமைப்பு சேமிக்கப்பட்டுள்ள கோப்பை அழிக்கவா ?" ("Delete the Adode Photo shop Settings File?" ) எனக் கேட்டு நிற்கும்,




அதற்கு ஆம் ( Yes ) என கொடுப்போமானால், எம்மால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் நீக்கப்பட்டு , Photoshop பயன்பாடானது அதனது முன்னிருப்பு உள்ளமைவுகளுடன் செயற்பாட்டிற்கு வரும். இதில் கவனிக்கவேண்டிய விட்டயம் என்னவென்றால் இரட்டை சொடுக்கு கொடுப்பதற்கு முன்னராகவே Ctrl , Alt , Shift இனை அழுத்துவோமானால், பயன்பாடு தொழிற்படாது.


முறை 2 :

இதில் நாமே எமது photoshop உள்ளமைவு கோப்பை தேடிப்பிடித்து அழித்துவிடலாம், பொதுவாக இக் கோப்பானது,

Win xp கணினிகளில்

Documents and Settings / [Username] / Application Data/ Adobe / Adobe Photoshop CS3 / Adobe Photoshop CS3 Settings

என்ற பகுதியிலும்




Win vista /7 கணினிகளில்

Users / [Username] / AppData / Roaming / Adobe / Adobe Photoshop CS3 / Adobe Photoshop CS3 Settings

என்ற பகுதியிலும் காணக்கூடியதாகவிருக்கும் இதனை நீக்கிவிடுவதன் மூலமும் எமது தேவையை. நிறைவேற்றிக் கொள்ளலாம்.

# Marsha Systems (PVT) Ltd





வீட்டுக்கொரு கணினி என மாறிவரும் இந்த நிலையில்...........
சித்திரைப் புத்தாண்டில் புதிய கணினி வாங்க வேண்டுமா?
நீங்கள் செல்லவேண்டிய இடம்

## மார்சா

யாழ் மண்ணில் கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்களின்
விற்பனையில் முன்னணி நிறுவனம்!
தனிநபர் மற்றும் அரச, தனியார், பொது நிறுவனங்களுக்கு ஏற்ற தரமான நவீன கணினிகளை
வழங்குவதில் நிரந்தரமான பெயர் எடுத்த நிறுவனம்



### ஏன் மார்சாவை தெரிவுசெய்ய வேண்டும்?



நவீன தரமான பொருள்கள்!
உரிய காலத்துக்கான உத்தரவாதம்!
நியாயமான விலை!
விற்பனைக்கு பிந்திய சேவை!
பழுதுபார்த்தலில் சிறந்த அநுபவம்!

| Win Tech | Marsha Systems (PVT) Ltd. | Asus Corner |
|---|---|---|
| 187, Parameswara Junction,<br>Palaly Road,<br>Jaffna.<br>Tel: 021-5689418, 021-4921189 | 74, Kannathiddy Road,Jaffna.<br>Tel :021-2229418 hot line: 0777 66108<br>email: kmaran77@yahoo.com<br>web: www.marshasystems.com | 108,Luxan Plaza,<br>Navalar Road,<br>Jaffna.<br>Tel 021-2221048, 021-4921183 |

அனைவருக்கும் எமது இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்

உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற
மங்களகரமான நிகழ்வுகளுக்கு ...

## திருமண அழைப்பிதழ் காட்சியறை

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 600ற்கு மேற்பட்ட பலவர்ண புத்தம்
புதிய டிசைன்களுடன் மலிந்த விலையில் பிறிண்டிங் வசதியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

# MATHI COLOURS PRINTERS


## Wedding Card Show Room





15/2, முருகேசர் லேன், நல்லூர்.
T.P :021 2229285, 077 7 222524

web.www.mathicolours.com




கணினி வரைகலைத்துறையில் இன்றியமையாத இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ள ஒரு மென்பொருள் Adobe Photoshop. இந்த மென்பொருளின் அடிப்படைக் கட்டமைப்பு 1987இல் Thomas Knoll, John என்ற இரு சகோதர மென்பொருள் வல்லுநர்களால் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் பத்துக்கும் அதிகமான பதிப்பு மாற்றங்களைக் கண்டு இன்று Adobe Photoshop CS4யாக அதிநவீன வடிவத்தை இது எடுத்துள்ளது. Adobe Photoshop CS4 மென்பொருளைக் கொண்டு நம்மால் செய்யக்கூடிய வடிவமைப்பு நுட்பங்களை இந்தத்தொடரில் பார்க்கலாம்.

## எழுத்துக்கள் மறையும் மாயம்!

புகைப்படம் ஒன்றில் எழுத்துக்களைப் பதிப்பதற்கு மிக இலகுவானது Adobe Photoshop மென்பொருள் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. இதற்கு Adobe Photoshop இல் உள்ள Type Tool உங்களுக்குப் பயன்படும்.

புகைப்படத்தில் எழுத்துக்களைப் பதிக்கும்போது எமக்குத் தேவைப்படும் விதத்தில் அந்த எழுத்துக்களை ஒழுங்குபடுத்திக்கொள்வதற்கும் Adobe Photoshop மிக மிகப் பொருத்தமான மென்பொருளாக விளங்குகிறது.

அவ்வாறு புகைப்படமொன்றில் எழுத்துக்களைப் பதியும்போது அந்தப் புகைப்படத்தில் இருக்கும் பொருள் அல்லது உருவத்துடன் ஒத்திசைவாக முன்னாலோ பின்னாலோ எழுத்துக்களைப் பதிவதற்கு Adobe Photoshop எவ்வாறு துணை செய்கிறது?

அதனை இங்கே ஓர் உதாரணத்துடன் விளக்கமாக நாம் பார்ப்போம்.




இங்குள்ள புகைப்படத்தில் ஒரு சிறிய கிண்ணம் காணப்படுகிறது. அதற்கு மேலாக நாம் எழுத்துக்களைப் பதிந்தால் கிண்ணம் மறைக்கப்பட்டுவிடும். பதியும் எழுத்துக்கள் கிண்ணம் இருக்கும் இடத்தில் கிண்ணத்துக்குப் பின்புறம் இருப்பது போலவும், ஏனைய எழுத்துக்கள் இரு பக்கங்களிலும் தெரிவதுபோலவும் எழுத்துக்களைப் பதிந்தால் அழகான தோற்றமொன்று பெறப்படுமல்லவா? அதனை எவ்வாறு கொண்டுவருவது?



இதற்கு Adobe Photoshop இன் Layer Mask உங்களுக்கு உதவிசெய்யும். அதனை எவ்வாறு உருவாக்குவது என்று பார்ப்போம்.


முதலில் கிண்ணம் இருக்கும் புகைப்படத்தை Adobe Photoshop இல் Open செய்துகொள்வோம்.

Type Toolஐத் தெரிவுசெய்து எமக்குத் தேவையான எழுத்





துக்களையோ சொற்களையோ Type செய்துகொள்வோம்.

அவை ஒரு தனி Layer இல் புகைப்படத்துக்கு மேலாக இருக்குமாறு வைத்துக்கொள்வோம்.




அடுத்து, நாம் Type செய்துவைத்திருக்கும் எழுத்துக் களை மாறும் எழுத்து வடிவிலிருந்து மாறாத நிலை வடிவமாக - அதாவது ஒரு தனிப்படம்போல மாற்றிக்கொள்ளவேண்டும்.

இதற்கு நீங்கள் குறித்த எழுத்துக்கள் இருக்கும் Layer ஐத் தெரிவுசெய்துகொண்டு, Layer மெனுவினுள் நுழைந்து Rasterize இனுள் Type ஐத் தெரிவுசெய்யவேண்டும். அல்லது, Layer இன் மீது Right Click செய்து Rasterize Type என்பதைத் தெரிவுசெய்தும் அதனை ஒரு மாறாத தனி வடிவமாக மாற்றிக்கொள்ளலாம்.




இனி அந்த Layerஇற்கு நாங்கள் Mask கட்டளையைக் கொடுக்கவேண்டும். இதற்கு எழுத்துக்கள் இருக்கும் Layerஐத் தெரிவுசெய்துகொண்டு, Layer மெனுவினுள் நுழைந்து, Layer Mask இனுள் Reveal All என்பதைத் தெரிவுசெய்யவேண்டும்.





இப்போது அந்த Layer இல் அருகில் இன்னுமொரு வடிவம் உருவாகியிருப்பதை நாம் அவதானிக்கலாம். இது அந்த Layerஇல் Mask கட்டளை செயற்படுத்தப்பட்டுள்ளதைக் காட்டுகிறது.

அடுத்து எங்களுக்குத் தேவைப்படுவது ஒரு Brush. இதனை Tools இலிருந்து தெரிவுசெய்துகொள்வோம். அது எமக்குத் தேவையான அளவில் இருப்பது அவசியம்.

அடுத்ததாக நாம் செய்யவேண்டியது கிண்ணத்துக்குப் பின்புறமாக எழுத்துக்களைக் கொண்டுசெல்வதுதான். இதனை எந்த அளவுக்கு நாம் நுணுக்கமாகவும் பொறுமையாகவும் செய்துமுடிக்கிறோமோ அந்த அளவுக்கு எமக்குக் கிடைக்கும் வெளியீடும் துல்லியமாகவும் திருத்தமாகவும் அமையும்.

Brush Tool இனைத் தெரிவுசெய்துகொண்டு எழுத்துக்கள் இருக்கும் Layerஇல் புதிதாக உருவாகியிருக்கும் பகுதியை க்ளிக் செய்துகொள்ளவேண்டும். அவ்வாறு அதனைத் தெரிவு செய்யும்போது அந்த Layer Mask Thumbnailஐச் சுற்றி ஒரு சதுரவடிவக் கட்டம் தோன்றுவதை நீங்கள் அவதானிக் கலாம்.





அடுத்ததாக Layer Mask Thumbnailஐத் தெரிவுசெய்த நிலையில் Brush Tool இனைக்கொண்டு எழுத்துவடிவத்தின் மீது தீட்ட ஆரம்பிக்கலாம்.



தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
**கம்ப்யூட்டர் ருடே**
359, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


இந்த நிலையில் Tool Pannel இல் உள்ள வர்ணத்தெரிவானது மேல் வர்ணம் கறுப்பாக இருக்குமாறு பார்த்துக்கொள்வது முக்கியம்.




இவ்வாறு Masking செய்துகொண்டிருக்கும்போது தற்செயலாக எமது கை நழுவி எழுத்துவடிவம் எமது தேவைக்கு மேலதிகமாக அழிந்துவிட்டால் என்ன செய்வது?



கவலையே தேவையில்லை. Tool Pannel இல் உள்ள வர்ணத்தெரிவில் கறுப்பு வர்ணம் கீழே இருக்குமாறு மாற்றி



வைத்துக்கொண்டு மறுபடி அழிந்துபோன எழுத்துவடிவத்தின் மீது பூசிப்பாருங்கள்.

அழிந்துபோன பகுதி மீண்டும் தோன்றும்.




Brush Toolஇனைக்கொண்டு எமக்குத் தேவையான விதத்தில் கிண்ணம் இருக்கும் பகுதியிலுள்ள எழுத்துவடிவத்தை நுணுக்கமாக அழித்துமுடித்துவிட்டுப் பார்த்தால், எழுத்துக்களின் ஒரு பகுதி அந்தக் கிண்ணத்தின் பின்புறத்தில் மறைந்திருப்பதுபோன்ற தோற்றம் வந்துவிடும்.



இது பார்ப்பவர்களின் கண்களை ஏமாற்றி நாம் உருவாக்கிய வடிவத்தை நம்பவைக்கும் உத்திகளுக்கு ஒரு சிறிய உதாரணம். இதற்கு எமக்கு Adobe Photoshop இன் Layer Mask உதவிசெய்கிறது. Layer Mask நுட்பத்திற்குரிய எளிமையான செயல்விளக்கமாக இதனைக் கொள்ளலாம்.

இந்தப் பயிற்சிக்குறிப்பைப் பலதடவைகள் செய்துபார்ப்பதோடு இன்னும் உங்களுக்குத் தோன்றும் உத்திகளையும் பயன்படுத்தி பல மாயவிளையாட்டுக்களை Adobe Photoshop இல் செயல்படுத்திப்பாருங்கள்.

நீங்கள் Adobe Photoshop கொண்டு வடிவமைக்கும், உருவாக்கும் வெளியீடுகளை உங்களது இணையப் பக்கங்களிலோ, வலைப்பூக்களிலோ, Facebook போன்ற சமூக ஒருங்கு தளங்களிலோ வெளியிட்டு அவற்றுக்குக் கிடைக்கும் பின்னூட்டங்கள், விமர்சனங்களின் மூலமாக உங்கள் திறமைகளைப் பட்டைதீட்டிக்கொள்ளமுடியும்.

உங்களுக்கு Adobe Photoshop மென்பொருளில் பணியாற்றும்போது எழும் சந்தேகங்களை எங்களுக்கு அனுப்பி வைத்தால் அவை தொடர்பான விளக்கங்களை உரிய உதாரணங்களோடு விளக்குவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். இன்னும் பல Adobe Photoshop நுட்பங்களோடு அடுத்து வரும் இதழ்களிலும் சந்திப்போம்.

Microsoft® Office Excel 2007

தொடர் -

க.சியந்தன்
போதனாசிரியர்
கணினி தொழில்நுட்பம்
யாழ் பல்கலைக்கழகம்



### Cell Formatting

Cell Formatting இல் Format Cell Dialog Box பற்றிப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். தொடர்ந்து Format Cell Dialog Box இல் உள்ள Tabs களான Alignment, Font, Border, மற்றும் Fill பற்றி தொடர்ந்து பார்ப்போம்.

### Alignment Tab

Alignment என்பது கட்டத்தினுள் Text எந்த இடத்தில் இருக்கவேண்டும் என்பதை தீர்மானிக்க உதவுகிறது. இங்கு இரண்டு வகையான பார்வையில் அமைக்கலாம். ஒன்று Horizontal - மற்றயது Vertical. இங்கு Vertical ஆகப் பார்க்கின்றபோது மேலிருந்து கீழாக அதன் அமை விடத்தைச் சொல்ல முடியும். அதாவது Top, Bottom or Center போன்றவாறு அமைக்கலம். அதேபோல Horizontal ஆகப் பார்க்கின்றபோது அதன் அமைவிடத்தை இடது பக்கத்திலிருந்து வலப் பக்கமாக அதன் அமைவிடத்தைச் சொல்ல முடியும். அதாவது Right, Left , Center or Justify போன்றவாறு அமைக்கலாம்.


அத்துடன் Indent என்பது Cell இனுள் எவ்வளவு தூரத்தில் Text இருக்க வேண்டும் என்பதை சொல்லப் பயன்படுகிறது.

Orientation என்பது Cell இனுள் Text அமைந்திருக்க வேண்டிய Direction ஐ சொல்ல உதவுகிறது. அதாவது மேலிருந்து கீழாகவா அல்லது கீழிருந்து மேலாகவா அல்லது குறித்த கோணத்தில் சாய்வாகவா இருக்கவேண்டும் என்பதை அமைத்துக்கொள்ளலாம்.

### Text Control

Cell இல் உள்ள Text ஆனது Cell இன் அகலத்தை விட பெரிதாக இருப்பின் Cell இற்குள் அடங்காது போகலாம். அதனால் Text இன் ஒருபகுதி இன்னொரு Cell இற்குள் மறைக்கப்படலாம். இந்த நிலையில் அதனை Text Control ஐப் பயன்படுத்தி சீர் செய்யலாம்.

இந்த Text Control இல் மூன்று தெரிவுகள் உள்ளன. ஆவை




படம் 2.1

- Wrap Text
- Shrink to fit
- Merge Cells


இங்கு Wrap Text என்பது Cell இல் உள்ள Text ஆனது Cell இன் அகலத்தைவிட பெரிதாக இருக்கும் போது அந்த Text ஐ முறித்து அடுத்த வரிக்கு கொண்டுவர Wrap Text ஐ தெரிவு செய்ய வேண்டும்.

Shrink to fit என்பது Cell இல் உள்ள Text ஆனது Cell இன் அகலத்தைவிட பெரிதாக இருக்கும் போது அந்த Text ஐ Cell இன் அகலத்துக்குள் அடங்கக் கூடியதாக அதன் பருமனைக் அகலத்திற் கேற்ப குறைக்கலாம். அதற்கு Shrink to fit ஐ தெரிவு செய்ய வேண்டும்.

Merge Cells மற்றைய Cell க்குள் சேர்ந்திருக்கக்கூடிய வழமையான நிலை ஆகும்.




படம் 2.2



படம் 2.5

## Font Tab

Cell களில் உள்ளடக்கப்பட்டுள்ள Text இன் Font, size , style மற்றும் Color என்பனவற்றை மாற்றி அமைக்கலாம்.. அத்துடன் Effect என்ற பகுதியை பயன்படுத்தி கணித கோவைகளில் பயன்படுத்துகின்ற அடுக்கு(superscript) அடி(subscript) என்பவற்றையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.




படம்2.3

## Border Tab

Excel sheet இல் நாம் பயன்படுத்துகின்ற பகுதி Cell களின் Border களின் Line களை மாற்றி அமைக்கலாம். அத்துடன் வேண்டுமெனில் Line க்கு Color ஐயும் பயன்படுத்தலாம்.


## Fill Tab

Fill Tab ஐப் பயன்படுத்தி Cell இன் பின்புலத்திற்கான நிறம் மற்றும் pattern களைக் கொடுக்க முடியும். இதனால் நாம் வெவ்வேறு Cell களுக்கு வெவ்வேறு நிறத்தையும் pattern களையும் அமைத்துக்கொள்ள முடியும்.




## Merge Cells

Excel sheetஇல் உள்ள பல Cell களை சேர்த்து ஒரு Cellஆக்க முடியும். அதற்கு நாம் Merge & Center என்ற கட்டளையைப் பயன்படுத்தலாம். அதற்கு நாம் முதலில் எந்த Cellகளை சேர்க்கப் போகின்றோம் என்பதை தெரிவு செய்ய வேண்டும். பின்னர் Merge & Center என்ற கட்டளையை Click செய்ய வேண்டும்.



படம் 2.6

தொடரும்...

**IDM** *வழங்கும் 10,000 ரூபாய், 5,000 ரூபாய் பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்.*

# பரிசுப் போட்டி 02



## கேள்விகள்

1. கணினியின் மூளை எனப்படுவது யாது?
2. இன்ரெல் நிறுவனத்தின் பிரதான உற்பத்திப் பொருள் யாது?
3. JavaScript இனை உருவாக்கிய நிறுவனத்தின் பெயர் என்ன?
4. Windows XP இல் காணப்பட்ட My Network Place இற்குப் பதிலாக Windows 7இல் எது அறிமுகப்படுத்தப்பட்டது?
5. Microsoft Word கோப்புக்களின் கோப்பு வகை (File extension) என்ன?
6. விக்கிலீக்ஸ் நிறுவனத்திற்கு தகவல்களை வழங்கிய இராணுவ வீரர் எந்த நாட்டினை சேர்ந்தவர்?
7. அண்மையில் சமூக வலைத்தளங்களின் ஊடான பிரச்சாரத்தினால் மக்கள் புரட்சி ஏற்பட்டு ஆட்சி கவிழ்க்கப்பட்ட நாடு எது?
8. Microsoft நிறுவனத்தின் தேடு பொறியின் பெயர் என்ன?
9. இலங்கைக்கான தமிழ் ஆள்களப் பெயர் என்ன?
10. Computer என்ற சொல் எத்தனையாம் ஆண்டு முதன் முதலாக பதிவு செய்யப்பட்டது?

**பரிசுப்போட்டி 1 இல் வெற்றிபெற்றவர்களின் விபரம் அடுத்த இதழில்....**

போட்டிக்கான பதில்களை நூற்றுக்கும் அதிகமானவர்கள் அனுப்பியிருந்தார்கள். அவர்களுக்கு நன்றிகள்.

1. போட்டிக்குரிய விடைகள் இந்த இதழில் உள்ள கூப்பனிலேயே நிரப்பி அனுப்பப்பட வேண்டும். கையெழுத்து, போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

2. போட்டி முடிவுத்திகதி 05.05.2011 ஆகும்.

3. நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும்

4. ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் எல்லா வினாக்களுக்கு சரியான விடைகளை அனுப்பி இருந்தால், ஒவ்வொரு பரிசுக்குமுரிய அதிஸ்டசாலிகள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

5. பரிசு: அ). முதலாம் பரிசு : **IDM** நிறுவனம் வழங்கும் ரூபா பத்தாயிரம் பெறுமதியான பரிசுக்கூப்பன்

ஆ). இரண்டாம் பரிசு : **IDM** நிறுவனம் வழங்கும் ரூபா ஐயாயிரம் பெறுமதியான பரிசுக்கூப்பன்

6. கம்ப்யூட்டர் ரூடே, உதயன் ஐ.ரீ ஐலண்ட் நிறுவனங்களின் ஊழியர்களோ, அவர்களது குடும்பத்தினரோ இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

## விடைக் கூப்பன்

**கம்ப்யூட்டர் ரூடே**

விடைகள்

| | |
|---|---|
| 1. ........................................ | 2. ........................................ |
| 3. ........................................ | 4. ........................................ |
| 5. ........................................ | 6. ........................................ |
| 7. ........................................ | 8. ........................................ |
| 9. ........................................ | 10. ........................................ |

# கணினி அடிக்கடி ரீஸ்டார்ட் (Restart) ஆகிறதா?

கணினியை தொடர்ந்து உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதால் அதிகமான அளவு சூடு அடைகிறது. அந்த சூட்டின் நிலை 60 பாகை செல்சியஸைத் தொடும்போது தானாகவே மீளியக்கம் (ரீஸ்டார்ட் -Restart) ஆகும் வகையில்தான் அமைக்கப்பட்டிருக்கும்.


கணினியில் உள்ள டிஜிட்டல் சாதனங்கள் இயங்கும் போது நிச்சயம் வெப்ப ஆவி உருவாகி வெளியே வருகிறது. அதனால் தான் புரோசசர் சிப் மேலாக ஒன்றும் கேசிங் உள்ளாக ஒன்றும் என மின்விசிறிகள் அமைக்கப்பட்டு அவை அந்த வெப்பத்தை வெளியேற்றுகின்றன.


இப்போதெல்லாம் இயக்கப்படும் புரோகிராம்கள் பெரிய அளவில் புரோசசரின் சக்தியை உறிஞ்சும் வகையில் உள்ளதால் சூடு அதிகம் உருவாகும் நிலை ஏற்படுகிறது. அதே போல் பல புரோகிராம்களை ஒரே நேரத்தில் பயன்படுத்தினாலும் இந்த பிரச்சினை வரும்.

கணினி அடிக்கடி மீளியக்கம் ஆகிறது என்றால் அடுத்த படியாக உங்கள் கணினியின் மெமரியைச் சோதனை செய்திட வேண்டும். உங்கள் புரோசசர் ஆனது மெமரியின் (RAM) சேதமடைந்த இடத்தில் உள்ள தகவலைப் பெற முயன்று தோற்றால் கணினி உடனே மீளியக்கம் ஆகத் தொடங்கும்.

இதனைக் கண்டறிய உங்கள் மெமரிகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தால் எதில் பிரச்சினை உள்ளது என்று தெரியவரும். அதனை மட்டும் மாற்றலாம். இதுவும் சரியாக உள்ளது என்று தெரிய வந்தால் கணினியில் உள்ள Setting ஒன்றை மாற்றினால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்.

விண்டோஸ் ஓப்பரேட்டிங் சிஸ்டத்தில் உள்ள ஒரு பகுதியில் பிழை ஏதேனும் ஏற்பட்டால் உடனே மீளியக்கம் செய்யும்படி அமைக்கப்பட்டிருக்கும். அந்த தெரிவை இல்லாமல்




செய்துவிட்டால் இந்த பிரச்சினை தீரும். அதேவேளை ஏதாவது பிரச்சனை ஏற்பட்டு கட்டாயம் மீளியக்கம் தான் ஆகியாகவெண்டுமென்ற நிலை வந்தால் நீலத்திரை தோன்றும் இங்கு எப்பகுதியில் பிரச்சனை இருக்கிறது என்பது ஓரளவுக்கு தெரியப்படுத்தப்படும். இதனை மேற்கொள்ள

1. Start - Control Panel என்று சென்று Performance and Maintenance என உள்ளதில் கிளிக் செய்திடவும்.

2. இதில் உள்ள System லிங்கில் கிளிக் செய்து பின் Advanced இனைத் தேர்ந்தெடுக்கவும்.

3. இதில் உள்ள Startup and Recovery யில் Settings பட்டனில் கிளிக் செய்திடவும்.

4. இதில் Automatically Restart என்று தரப்பட்டு அதன் அருகே தரப்பட்டுள்ள சிறிய கட்டத்தில் உள்ள தெரிவு அடையாளத்தின் மீது கிளிக் செய்து அதனை எடுத்துவிடவும்.

இது System Failure பிரிவில் இருக்கும். பின் ஓகே கிளிக் செய்து அனைத்து விண்டோக்களை மூடவும்.

**இதை விண்டோஸ் விஸ்டாவில் அல்லது விண்டோஸ் 7 இல் செயல்படுத்த:**

1. Start - Control Panel சென்று System என்பதில் கிளிக் செய்திடவும்.

2. இந்த விண்டோவில் Advanced System Settings என்பதில் கிளிக் செய்திடவும். இப்போது கிடைக்கும் விண்டோவில் Startup and Recovery என்பதன் கீழ் பார்க்கவும்.

3. இங்கு Settings பட்டனில் கிளிக் செய்திடவும். இதில் Automatically Restart என்பதன் கீழாக என்பதில் உள்ள தெரிவு அடையாளத்தை எடுத்துவிடவும். பின் OK கிளிக் செய்து வெளியே வரவும்.

இனி உங்கள் கணினி தேவையில்லாமல் மீளியக்கம் ஆகாது.


தொடர் 02

# ஒரு துறவியின் கதை






மு. மயூரன்
இலங்கை லினக்ஸ்
பயனர் குழுமம்



போன இதழில் மென்பொருட்கள் - கட்டற்ற மென் பொருட்கள் தொடர்பான சில சொற்களையும் அவற்றுக் கிடையே இருக்கும் நுணுக்கமான, பாரதூரமான வேறுபாடு களையும் பார்த்தோம்.

கட்டற்ற மற்றும் திறந்த ஆணைமூல (FOSS) மென் பொருட்களின் அடியோடும் அறத்தையும் கோட்பாடுகளையும் எளிதாக விளக்க இம்முறை ஒரு சிறிய உண்மைக் கதை யைப் பகிர்ந்துகொள்கிறேன்.

கொழும்பில் வசிக்கும் துறவி ஒருவரின் கதை இது. இந்தக் கதையில் கற்பனைகள் எதுவுமில்லை.

---

ஒரு நாள் சாவகாசமாக அவருடன் பேசிக்கொண்டிருந்த போது, தான் ஏன் லினக்சை தேர்ந்தெடுத்தார் என்ற சுவையான கதையைச் சொன்னார். ( நாங்கள் தான் வற்புறுத்தி கேட்டோம்)

ஆரம்பத்தில் அவர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடு பட்டிருந்தபோதும், இளமைக்காலத்திலும் கணினித் தொழிநுட்பத்தோடு பரிச்சயமானவராகத்தான் இருந் திருக்கிறார்.

லினக்ஸ் இயங்குதளத்தின் சிறப்பாற்றல்களால் கவரப்பட்டு, அக்காலத்தில் அதனை பயன்படுத்தியும் இருக்கிறார்.

துறவியான பிற்பாடு அவர் வின்டோசை பயன் படுத்தவில்லை.

"துறவிகள் திருடக்கூடாது"

அவர் சொன்ன முதற் காரணம் இதுதான்.

உண்மையில் இலங்கையில் சட்டபூர்வமான வின்டோஸ் இறுவட்டு ஒன்றினை எங்கே பெறுவது என்று யாருக்கும் தெரியாது.

அந்த நிலையில் அவருக்கு பயன்படுத்த நேர்மையான வின்டோஸ் மென் பொருள் ஒன்றின் பிரதி கிடைத்திருக்க வாய்ப்பில்லை தானே?

சரி, அவ்வளவு கடுமையாக துறவறத்தை பின்பற்ற விரும்பினால் எப்பாடு பட்டாவது ஒரு இறுவட்டினை எங்கிருந்தாவது பெற்றுக்கொண்டிருக்கலாம் தானே இன்று கேட்கிறீர்களா?

அதற்கும் அவரே பதில் சொல்கிறார்.

" துறவிகள் சொத்துக்களை வைத்திருக்க முடியாது"

வின்டோஸ் இயங்குதளம் ஒன்றை வாங்கினால், அது ஒரு பயனாளருக்குரியது.

அதற்கான பயனாளர் உரிமையை விலை கொடுத்து வாங்கவேண்டும்.

மற்றவருக்குக் கொடுக்க முடியாது.

பொதுப்பயன்பாட்டுக்கு விட முடியாது.

ஒரு துறவி, தனக்கெனச் சொந்தமாக ஒரு உரிமையை வாங்கி வைத்துக்கொண்டு, அதை மற்றவர்களுக்கும் கொடுக்காமல் காப்பாற்றுவது ஓர் ஆசிரமத்தில் எவ்வாறு சாத்தியம்?

வின்டோசை வாங்காமல் , திருட்டு வட்டுக்களை பயன்படுத்தினாலும், வாங்கி, உரிமை ஒப்பந்தத்தை பின்பற்றினாலும் அவர் துறவறத்தைக் கொச்சைப்படுத்துவதாக போய்விடும்.

வின்டோசுக்கு மட்டுமா, அதில் பயன்படுத்தவேண்டிய மென்பொருளுக்கு வேறுவேறாய் துறவறத்தை விட்டுக்கொடுக்க வேண்டும்.


அத்தோடு இன்னுமொரு காரணமும் அவர் சொன்னார்.

மைக்ரோசொப்ட், அதன் இயங்குதளத்திற்கு மென்பொருள் செய்யும் நிறுவனங்கள் எல்லாமே பன்னாட்டு நிறுவனங்கள்.

அவற்றின் உற்பத்தியை வாங்கிப்பயன்படுத்துவதால் எம் நாட்டு பணம், வெளியில் போகிறது.

நம் நாடு மேலும் மேலும் ஏழையாகிறது.

**லினக்ஸ்,**
**திறந்தமூலம்**
**என்பதெல்லாம்**
**வெறும்**
**மென்பொருட்கள்**
**அல்ல,**
***அது ஒரு***
***வாழ்க்கை முறை.***



ஆனால், லினக்சை நீங்கள் பெற்றுக்கொள்வதானால், அதற்கு இங்கேயுள்ள ஒரு விநியோகக் குழுவையே அணுகவேண்டியிருக்கும்.

பின்னர் உங்களுக்கான அனுசரணையையும் இங்குள்ள ஒருவரோ அல்லது குழுமமோ தான் செய்யும்.

பாடசாலைகள் தமது செலவை பெருமளவில் குறைத்துக்கொள்ளலாம்.

நிறுவனங்கள் வீணான செலவை ஆக்கபூர்வமான வழிகளில் செலவிடலாம்.

இங்குள்ள இளைஞர்கள், தம்முடையதாய் உணரும் இயங்குதளம் ஒன்றை விற்றும், நிறுவனங்களுக்கு அனுசரணை வழங்கியும் பணம் பார்க்கலாம்.

சுய தொழில் பண்ணலாம்.

இது நாட்டுக்கு மிக நல்லது.

ஒரு சாதாரண கணினிப் பாவனையாளருக்கு, லினக்ஸ் போதிய வசதிகளை எந்த குறைவுமின்றி வழங்குகிறது.

இரண்டு பொருட்களும் சமமாய் இருக்க, சிலவேளை இலவசமானது தரமானதாயிருக்க,

விலையுயர்ந்ததை ஏன் வாங்க வேண்டும்?

–

"லினக்ஸ்", "திறந்தமூலம் (Open Source)" என்றவுடன் அவற்றின் தொழிநுட்பச்சிறப்பு, இலவசம் போன்ற விடயங்கள்தான் மனதில் எழுகின்றன.

ஆனால் அவற்றுக்குப்பின்னால் அடியோடும் தத்துவம், கோட்பாடு, அரசியல் உண்டு.

இவை வெறுமனே தொழிநுட்ப விடயங்கள் அல்ல.

லினக்சையோ கட்டற்ற, திறந்த மூல மென்பொருட்களையோ பயன்படுத்த ஆயத்தமாகும்போது இந்தத் தத்துவ அடிப்படைகளை நாம் அறிந்திருப்பதும் உள்வாங்கிக்கொள்வதும் மிகவும் அவசியம்.

லினக்ஸ், திறந்தமூலம் என்பதெல்லாம் வெறும் மென்பொருட்கள் அல்ல, அது ஒரு வாழ்க்கை முறை.

**மென்பொருளில் என்ன அரசியல் உண்டு?**

**தொழிநுட்பத்தில் என்ன தத்துவம் உண்டு?**

இந்த விடயங்களைப்பற்றி சற்று ஆழமாக அடுத்த இதழில் பார்க்கலாம்.


NComputing™

வடமாகண NComputing ஏக விநியோகஸ்தர் மற்றும் அதிகாரம் பெற்ற பங்காளர்கள் ஆகிய BNS நிறுவனம் வழங்கும் சிறப்பு சேவைகள்,

நீங்கள் உபயோகிக்கும் NComputing Original தான என்பதனை உங்கள் இடத்திற்கு வந்து இலவசமாக உறுதி செய்கின்றோம்

System Builders ற்கான இலவச NComputing தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குகின்றோம்


உங்கள் நிறுவனங்களில் பயன்படுத்தி பார்ப்பதற்கு NComputing Units மற்றும் Upgrading க்கு தேவையான வடிவமைப்பு மற்றும் ஆலோசனைகளை இலவசமாக வழங்குகின்றோம்.




பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கான மிகச் சிறந்த தீர்வு

CeBIT Server-Based Computing Award
MARKET SHARE LEADER
e-INDIA
Deloitte Technology Fast 50
Gartner CLIENT COMPUTING Cool Vendor Award

BNS
BUSINESS NETWORK SYSTEM
180/1 Point Pedro Road, Jaffna.
Tel:- 0212220222, 0215671819

# OOP இன் அரசன் Java

பகுதி 2




ஆக்கம் : இ. குமரன்
ஆசிரியர்
யாழ். இந்துக்கல்லூரி


இனி Java இல் எப்படி செய்நிரல்களினை எழுதுவது என்பது பற்றிப் பார்ப்போம்.பின்வரும் செய்நிரலைக் கருதுக.

```
Class pro1
{
public static void main ( String args [] )
      {
      System . out . println ("Welcome to oop");

      }
 }
```


இச் செய்நிரலின் விளக்கம் பின்வருமாறு:

❖ இதனை Text pad இல் எழுதவும்.

❖ கோப்பிளைச் சேமிக்கும் போது pro1 Java எனச் சேமிக்கவும் Java கோப்பானது Class கோப்பாகவே சேமிக்கும்.

(Class என்பது என்ன? என்பதைப் பற்றிப் பின்னர் பார்ப்போம்.)

❖ சேமித்தபின்னர் Tools Menu இல் சென்று Run செய்க : இதன் போது பின்வரும் Command Prompt திரையில் வருவிளைவு காண்பிக்கப்படும். (Welcome to oop என்றவாறு காண்பிக்கப்படும்.)




```
      Class Prol
      {
      }
```

என்பதில் pro1 என்பது Class இன் பெயராகும். இதற்குப் பதிலாக யாதாயினும் ஒரு பெயரினைப் பயன்படுத்தலாம். (ஆனால் Java இற் கானப்படும் Keywords இனைப் பயன்படுத்துதல் கூடாது. அதைப் பற்றிய விபரம் பின்னர் தரப்படும்.

❖ Java என்பது ஓர் Case Sensitive கொண்ட கணினி மொழியாகும். (அதாவது Upper Case Letter பயன்படுத்த வேண்டிய இடத்தில் அதனையும், Lower Case Letter பயன்படுத்த வேண்டிய இடத்தில் அதனையும் பயன் படுத்துதல் வேண்டும்.)

உதாரணமாக:- System out printin என்பதில் S என்பது Capital Lettar ஆக இருத்தல் வேண்டும்.

String args [] என்பதில் S என்பது Capital letter ஆக இருத்தல் வேண்டும்.

❧ அடுத்ததாக

❖ System . out . printin (" Wel Come To Oop");

என்பதில் கடைசியாக Semi Colon பயன்படுத்தப்படல் வேண்டும். ஏனெனில் Java செய் நிரலின் ஒவ்வொரு Statement உம் Semi Colon இல் முடிவடைதல் வேண்டும்.

❖ இச் செய்நிரலில் { or} பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவை Braces or curly Brackets என அழைக்கப்படும். இவை சரியான ஒழுங்கில் தொடங்கி முடிக்கப்படுதல் வேண்டும். உதாரணமாக இரண்டு {தொடங்கினால் இரண்டு} முடிவடைதல் வேண்டும்.

❖ இச் செய்நிரலில்.

public static void main (String Args [])

என்பதில் பயன்படுத்தப்பட்ட public, static, void, main, string Args [ ] என்பவற்றுள் Main என்பதில் ஓர் Function / Method என அழைக்கப்படும். Java Program ஆனது முதலில் Main Function இல் இருந்தே ஆரம்பிக்கும் என்பதை நினைவில் கொள்க. (ஏனையவற்றில் பிறிதொரு சந்தர்ப்பத்திலேயே விளக்கம் தரப்படும்.)

❖ System.out.println ( ); என்பது வருவிளைவினைப் பெறுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இதற்குப் பதிலாக System.Out.Print ( ) : என்பதையும் பயன்படுத்திப்பார்க்க. இதுவும் ஒரு வருவிளைவினைப் பெறுவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. எனினும் இவை இரண்டிற்குமிடையில் சிறு வித்தியாசம் காணப்படுகிறது.

உதாரணம்

```
System.out..println ('' Wel Come '' );
System.out.println ('' To '' );
System.out.println ('' Java '' );
```

என்பதன் வருவிளைவு

| |
|---|
| Wel come<br>To<br>Java |

ஆகும்.

ஆனால்

```
System.out.print ('' Wel Come '' );
System.out.print ('' To '' );
System.out.print ('' Java '' );
```

என்பதன் வருவிளை Wel Come To Java என அமைந்திருக்கும்.

println பயன்படுத்தும் போது, அதனைத் தொடர்ந்து வரும் விளைவுகள் அதற்கு அடுத்த Line இலும் print பயன்படுத்தும் போது, அதே Line இலும் வருவிளைவுகள் பெறப்படுகின்றன.

பின்வரும் செய் நிரல்களினைத் தனித்தனியே எழுதி அவற்றை இயக்குவதன் மூலம் கிடைக்கின்ற வருவிளைவுகளினூடாக println, print போன்றவற்றினை நன்கு விளங்கிக்கொள்க.

Program-1

```
class pro2
{
public static void main(String args[])
{
System.out.println("Welcome");
System.out.println("To");
System.out.println("OOP");
}
}
```

Program - 2

```
class pro3
{
public static void main(String args[])
{
System.out.println("Welcome");
System.out.println("To");
System.out.print("OOP");
}
}
```

Program - 3

```
class pro4
{
public static void main(String args[])
{
System.out.println("Welcome");
System.out.println("To");
System.out.print("OOP");
}
}
```

Program -4

```
class pro5
{
public static void main(String args[])
{
System.out.println("Welcome");
System.out.println();
System.out.println("To");
System.out.println();
System.out.println("OOP");
System.out.println();
}
}
```

அடுத்த இதழில் Java செய்நிரல் ஒன்றினை ஏன் Compile செய்தல் வேண்டும் மற்றும் Run செய்தல் வேண்டும், அச் செய்நிரல் எவ்வாறு இயங்குகின்றது என்பவை போன்ற விளக்கங்களினைப் பார்ப்போம்.

தொடரும்...








# பெரிய கோப்புகளை வெட்டவும் ஒட்டவும்

பொன்மலர்
கரூர், இந்தியா.

## Gsplit 3

**மென்பொருள் அறிமுகம்**

கணிணியில் பெரிய அளவிலான கோப்புகள் நிறைய வைத்திருப்போம். மின்னஞ்சலில் அனுப்பவேண்டி வந்தால் அவற்றினை அனுப்பமுடியாது. அதைவிட பெரிய கோப்புகள் என்றால் பென் ட்ரைவில் ஏற்றி வேறு எங்கேயாவது கொண்டு




செல்ல வேண்டும் என்று நினைத்தால் இடம் பத்தாது. இல்லையென்றால் டிவிடியில் எழுதி எடுத்துப் போகலாம் என்று நினைத்தாலும் இடமிருக்காது. இப்படித்தான் எனது நண்பர் ஒருவர் 5 GB அளவுள்ள படமொன்றைக் கொப்பி செய்து பென் ட்ரைவில் எழுதித் தரச்சொன்னார். பென் ட்ரைவின் அளவோ 4 GB தான். வீடியோ கோப்பும் பல கோப்புகளாக இல்லாமல் ஒரே கோப்பாக 5 GB யில் இருந்தது. அப்போது தான் கோப்புகளை வெட்டி இரண்டு தடவையாக கொப்பி செய்து பின்னர் இணைத்துக் கொண்டால் போயிற்று என்ற எண்ணம் வந்தது.

GSpliter என்ற இந்த மென்பொருள் பெரிய கோப்புகளை வெட்டவும் இணைக்கவும் பயன்படும் இலவச மென்பொருளாகும். இதன் மூலம் எந்த வகை கோப்பாக இருந்தாலும் அதனை வெட்டி பல துண்டுகளாகப் பிரிக்க முடியும். இதில் வெட்டப்படும் பகுதிகள் பீஸ் (Pieces) என்று அழைக்கப் படுகிறது. இதன் மூலம் Zip/rar கோப்புகள், படங்கள், இசை, பக்கப் கோப்புகள், சிடியின் ஐஎஸ்ஓ வகை கோப்புகள், ஒபிஸ் கோப்புகள் என எல்லாவற்றையும் வெட்டமுடியும்.

வெட்டப்பட்ட துண்டுகளை இந்த மென்பொருளில் Unite என்ற வசதி மூலம் முதல் கோப்பை மட்டும் தேர்வு செய்து எளிதாக இணைக்கலாம். இதில் உள்ள Split Express என்ற வசதி மூலம் பெரிய கோப்புகளை விரைவில் பல துண்டுகளாகப் பிரிக்கலாம். இதன் புதிய பதிப்பு Gsplit 3 பயன்படுத்த எளிமையாக உள்ளது.

மேலும் வெட்டப்படும் கோப்புகளின் பெயர்கள் எப்படி வரவேண்டும் எனக் கொடுக்கலாம். வெட்ட வேண்டிய பகுதி களுக்கு அளவையும் (File Size) அமைக்கலாம். உதாரணமாக 500 Mb கோப்பிற்கு 100 Mb என்று அளவு கொடுத்தால் 5 கோப்புகளாக வெட்டப்படும்.

**நன்மைகள் :**

1. பெரிய கோப்புகளைப் பிரிப்பதன் மூலம் சிடி/டிவிடிகளில் எளிதாக கொப்பி செய்யலாம்.

2. மின்னஞ்சல் அனுப்பும் போது வெட்டிய பகுதிகளை எளிதாக அனுப்பலாம்.


3. பென் ட்ரைவ் போன்ற கருவிகளில் எளிதாக ஏற்றலாம்.

4. பல இணையதளங்களில் விரைவாக அப்லோட் செய்து நண்பர்களுக்குப் பகிரலாம்.

5.குறிப்பிட்ட இணையதளங்களில் கோப்புகளை அப்லோட் செய்ய அளவொன்றை நிர்ணயம் செய்திருப்பார்கள். அந்த மாதிரி நேரங்களில் பிரித்து கொஞ்சம் கொஞ்சமாக தரவேற்றலாம்.

தரவிறக்கச்சுட்டி : Download Gsplit 3

http://www.gdgsoft.com/download/gsplit.aspx






# சட்டைப் பையில் அன்ரி வைரஸ்
# Portable ClamWin 0.97

## மென்பொருள் அறிமுகம்


தலைப்பை படித்ததுமே சொல்லப்போவதை புரிந்திருப்பீர்கள். கணினியில் நாம் அடிக்கடி சந்திக்கும் வைரஸ் பிரச்சினை பற்றியே. எவ்வளவு கவனமாக Flash Driveஐ வைத்திருந்தாலும் நாம் மாட்டிக்கொள்வது உறுதி. நமது கணினியில் பலமான அன்ரிவைரஸ் தொகுப்பை நிறுவினாலும் பெருமூச்சு விடவே முடியாது. ஏனெனில் எமது நண்பர்களின் கணினியிலோ அல்லது இணையத்தள Browsing Centerகளிலோ Flashஐ செருகும்போது Virus, Malwares Trojans, Spyware என ஏகப்பட்ட குப்பைகள் சத்தம் சந்தடி யின்றி Flash Drive இனுள் குடிபுகுந்து விடும். அப்புறம் அவைக்கு கொண்டாட்டம் - உங்களுக்கோ திண்டாட்டம்தான். அதுவும் கண்கட்டி வித்தை காட்டி காசு பறிக்கும் கணினி நிபுணர்கள்(?) நிறைந்துள்ள உலகில் உங்கள் நிலை சொல்லவே தேவையில்லை. அவர்களிடம் எவ்வளவு அலைந் தாலும் உங்கள் பிரச்சினை மட்டும் தீரவே மாட்டுது. அவ்வாறு அலையாமல் இருக்க இந்தக் கட்டுரையை முழுமையாக படியுங்கள்!.

**Portable ClamWin 0.97** இது முற்றிலும் இலவசமாக நீங்களே தரவிறக்கி உங்கள் Flash Drive இல் எடுத்து சென்று விரும்பிய இடத்தில் பயன்படுத்தலாம்.


Windows இன் எல்லா இயங்கு தளங்களிலும் செயற்படக்சகூடியது.7.7MB அளவுகொண்ட இம்மென்பொருளை தரவிறக்க செல்லவேண்டிய முகவரி: http://www.softpedia.com/get/PORTABLE-SOFTWARE/Antivirus---Antispyware/Portable-ClamWin.shtml

அடுத்து இம்மென்பொருளில் உள்ள வசதிகளை ஒவ்வொன்றாக பார்ப்போம்.

1. கீழே படத்தில் காட்டப்பட்டவாறு Scan செய்ய தேவையான folder அல்லது file ஐ தெரிவுசெய்யவும். ஒன்றுக்கு மேற்பட்ட folder அல்லது file எனில் Shift key அழுத்தியபடி தெரிவு செய்யவும்.





படம் 1




படம் 2


2. மேலே உள்ள படத்திலுள்ளவாறு General tab ஐ கிளிக் செய்து Scanning Option களை விரும்பியபடி மாற்றியமைக்கலாம். உதாரணமாக Infected file களை அடையாளம் காட்டினால் போதுமா? அல்லது அவற்றை அழிக்கவேண்டுமா என தெரிவுசெய்யலாம்.




படம் 3


3. படம் 3இல் Advanced Tab இல் சென்று Scan பண்ணவேண்டியவற்றை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து விடலாம். உதாரணமாக mailbox ல் இவ்வாறு செய்யலாம்.

4. Limits Tab ல் சென்று Scan பண்ணவேண்டிய file களின் ஆகக்கூடிய அளவை தெரிவு செய்யலாம்.



படம் 4

5. Filters Tab ல் சென்று Scan பண்ணவேண்டிய கடைந Format ஐ தெரிவு செய்யலாம்.



படம் 5

இன்னும் பல வசதிகளையும் தருகிறது இம்மென்பொருள். குறிப்பாக ஈமெயில் Alerts ஐ கூறலாம்.




ஆக்கம்: சு.குணசாந்தன்
BIT மாணவன்
கொழும்பு
பல்கலைக்கழகம்





உங்கள் வீடுஅலுவலக வாசலிலேயே கம்ப்யூட்டர் ருடே ஐ பெற்றுக் கொள்ள இன்றே சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள்

# உடனே இணையுங்கள்

## மாதிரிப்படிவம்

## 'கம்ப்யூட்டர் ருடே'

சஞ்சிகையை நான் மாதாமாதம் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான கட்டணமாக

தபால் செலவு உட்பட

| | | |
|---|---|---|
| 6 மாதம் | - ரூ 390 | ☐ |
| ஒரு வருடம் | - ரூ 750 | ☐ |
| இரண்டு வருடம் | - ரூ 1400 | ☐ |
| மூன்று வருடம் | - ரூ 2000 | ☐ |

ரூபாவை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

..........................................................

தொலைபேசி இல : ..................................

மின்னஞ்சல் : ..........................................

.......................... இலக்க காசோலையை அல்லது காசுக் கட்டளையை Uthayan IT Island என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.

............................ ................

கையொப்பம் திகதி

பணத்தைக் காசோலையாகவோ காசுக் கட்டளை யாகவோ Uthayan IT Island என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும். நேரடியாகவும் எமது நிறுவனத்தில் சந்தாப் பணத்தைச் செலுத்தலாம்.

காசுக் கட்டளைகளை யாழ்ப்பாணம், தபாலகத்தில் மாற்றத் தக்கதாக அனுப்பி வைக்கவும்.

MAIL COUPON TO:

**'Computer Today'**

359,Kasthuriyar Road,

Jaffna. Phone: 021 2677600

email : info@Computertoday.lk

# மிஸ்டர் மெமறி பதில்



கேள்வி:

1. எனது UPS ஆனது Mercury வகையினை சேர்ந்தது. கடந்த சில மாதத்துக்கு முன்னர்தான் பற்றரி மாற்றப்பட்டது.ஆனால் மின்சாரம் தடைப்பட்டதும் எனது கணினி சிலசமயங்களில் Restart ஆகிறது (UPS வேலை செய்கிறது) நான் ஒழுங்காக UPS இனை Charge செய்கின்றேன். அதற்கான காரணம் யாது.?

2. DDR 1 RAM ஒன்று பழுதாகிவிட்டதா என்று எவ்வாறு அறிவது? ஆதனை Mother Board இல் போட்டால் Mother Board இற்கு ஏதாவது பாதிப்பு உண்டா?

A.மயூரகீர்த்தன், நீராவியடி யாழ்ப்பாணம்

பதில்:


உங்கள் முதலாவது வினாவில் நீங்கள் குறிப்பிட்ட தகவல்களின்படி மின்சாரம் தடைப்படும்போது சிலவேளை களில் கணினி மீளியங்கத்தொடங்குவதற்கு காரணம் UPSஇல் இருந்தான கணினிக்கான மின்சாரம் தடைப்படுவதேயாகும் UPS என்பது தடையற்ற மின்சாரத்தினை வழங்கும் சாதனம் (Uninterruptable Power Supply) ஆகும். ஆயினும் பற்றரி பழுது அல்லது UPS உட்கட்டமைப்பில் உள்ள பழுது காரணமாக UPS தனது பணியினை செய்ய மறுத்துவிடுகிறது. நீங்கள் பற்றரியை மாற்றிய பின்னும் இது தொடர்கிறதாயின் UPS உட்கட்டமைப்பில் தான் பழுது உள்ளது.


UPS இல் கணினி இயங்குபொழுது மின்சாரம் கிடைக்குமாயின் UPS சமனிலையில் இயங்கிக்கொண்டிருக் கும். ஒருபுறம் தான் சார்ஜ் ஆகும் அதேகணம் மற்றொருபுறம் கணினிக்கு மின் வழங்கிய வண்ணமும் இருக்கும். அந் நிலையில் மின்சாரம் தடைப்படும்போது UPS தனது சமனிலையினை இழந்து மின்சாரத்தை பற்றரியில் இருந்து வழங்குவதற்கு முயற்சிக்கும்.


அவ்வேளை சடுதியான மின்வலு இழக்கவேண்டியிருக்கும் இவ்வாறான சந்தர்ப்பத்தில் (சமனிலையில் இருந்து பற்றரி மட்டும் என்ற நிலைக்கு மாறும் போது) சிலவேளைகளில் UPS இன் இந்த நிலைமாற்றத்திற்கான பகுதியின் பலவீனம் காரணமாக கணினிக்கான மின் வழங்கல் சடுதியாக நின்று பின் கிடைப்பதனால் கணினி மீள் இயங்கத்தொடங்கிவிடும். நிலைமாற்றம் செய்யும் சாதனம் றிலே(Relay) என்று அழைக் கப்படும். அதனை பழுதுபார்த்தல் அல்லது மாற்றுதல் மூலம் உங்கள் பிரச்சனைக்கு தீர்வு காணலாம்

இரண்டாவது வினாவில் நீங்கள் DDR 1 என குறிப் பிட்டிருக்கிறீர்கள். எனது பதில் எல்லா RAM வகைகளுக்கும் பொருந்தும். RAM தான் கணினிக்கு அத்தியாவசியமான பாகம். அது செயலிழந்தால் கணினி இயங்காது. அல்லது அடிக்கடி கணினி Restart ஆகும் திடீரென கணினியில் எதுவும் செய்யமுடியாத நிலை (Struck) ஏற்படும். ஒன்றுக்கு மேற்பட்ட RAM கொண்டியங்குமாயின் ஒவ்வொன்றாக கழற்றிய பின் கணினியை இயக்கிப்பார்ப்பதன் மூலம் எந்த RAM பழுதடைந்தது என அறியலாம். ஒன்றுதான் ஆயின் கணினி நிலையத்திற்கு எடுத்துசென்று வேறு RAM போட்டுப்பார்ப்பதன் மூலமோ அன்றி உங்களுடையதை வேறு கணினியில் போடுவதன் மூலமோ அறிந்து கொள்ளலாம். அங்கு முக்கிய விடயம் DDR1 ,DDR2 ,DDR3 ஆகியன வேறு வேறானவை என்பதாகும். பழுதான RAM இனை மதர்போர்ட்டினில் பொருத்திப்பார்ப்பதால் எந்தவித பிரச்சனை யும் ஏற்படாது. ஆனால் RAM இனை பொருத்தும்போது அரைகுறையாக பொருத்துதல் மற்றும் வில்லங்கமாக பொருத்துதல் மூலம் பொருத்துமிடம் பாதிக்கப்படலாம் அல்லது மதர்போட்டும் பழுதாகலாம்

RAM பகுதியாக பழுதடையும் வாய்ப்பும் உண்டு அதனை கண்டறிய Memory Diagnosis Tool களை பயன்படுத்தலாம்




# மிஸ்டர் மெமறி பதில்






கேள்வி:

Intel Core 2 Duo Processer இற்கும் Dual Core Processor இற்கும் Core i3 இற்கும் உள்ள வேறுபாட்டினை தெளிவாக விளக்கமுடியுமா?

ஜெ.பவீதன், மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்

பதில்:

உங்கள் கேள்விக்கு போகுமுன்னர் டுயல் கோர் புரோசசர் தொழிநுட்பம் பற்றி சிறிது அறிந்திருக்கவேண்டும். உண்மையில் டுயல் கோர் புரோசசர் ஆனது இரண்டு சாதாரண புரோசசர்களின் செயற்பாட்டுக்கு ஒத்தது அல்ல. ஆனால் வேகம் கூடியது. இங்கு இரண்டு புரோசசர்கள் ஒரே இணைப்பில் (Socket) சமாந்தாரமாக உட்கட்டமைப்பில் தொடுக்கப்பட்டுள்ளன. இவை தமெக்கென தனித்தனி Cache நினைவகங்களை கொண்டிருக்கின்றன.


இங்கே Cache நினைவகம் என்றால் என்ன என்ற தெளிவு நமக்கு வேண்டும். CPU இன் வேகமானது RAM இனது வேகத்தினை விட மிக மிக உயர்வானது. எனவே RAM இனது வேகம் ஆனது கணினியின் தொழிற்படு வேகத்தை குறைக்கப்போகிறது. இதற்காக இவர்களுக்கிடையில் புரோசசரில் உள்ள Cache நினைவகம் தொழிற்படும். இதற்கு RAMஇல் இருந்து தரவுகள் மாற்றப்பட்டு பின் CPU இன் வேகத்துக்கு ஈடுகொடுத்து Cache இல் இருந்து CPUஇற்கு வழங்கப்படும் எனவே Cache நினைவகம் கூடிய புரோசசர்கள் கணினியின் வேகத்துக்கு வழி கோலும். இருந்த போதிலும் ஒன்றுக்கு மேற்பட் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்போது இந்த Cache கூட ஒரு கணம் திணறத்தான் செய்யும்.

இவ்வேளை நாம் பல விடயங்களுக்கு வரிசையில் நிற்பது போல தரவுகளும் Cache நினைவகத்தில் வரிசையில் நிற்கவேண்டிய நிலை ஏற்படும் இதனால் நேரம் தாமதமாகும் இந்த நிலை டுயல் கோர் புரோசசரில் தவிர்க்கப்படும். இதற்காக புரோசசரின் வேகம் இருமடங்கானது என்ற முடிவுக்கு வரமுடியாது. தனி புரோசரினை விட டுயல் கோர் வேகம் அதிகம் என்று கூறலாம். மேலும் இன்னுமொரு விடயம் கவனிக்கவேண்டியுள்ளது. டுயல்கோர் புரேசசரின் முழுமையான பயனை பெறவேண்டுமாயின் ஒப்பரேட்டிங் சிஸ்டம் உள்ளிட்ட கணினியில் உள்ள மென்பொருட்கள் சமாந்தர பல்முனை ஊடுபுகல் தொழில்நுட்பத்திற்கு (Simultaneous Multithreading Technology (SMT)) ஒத்திசைவானதாக இருக்கவேண்டும். Adobe Photoshop இதற்கு ஒத்திசைவான ஒரு மென்பொருளாகும்.

இனி உங்கள் கேள்விக்கான பதிலுக்கு நேரடியாக வருகிறேன் Pentium Dual Core என்பதும் Core 2 Duo என்பதும் Dual Core தொழில்நுட்ப புரோசசர்களே ஆயினும் தற்போது இன்ரெல் நிறுவனம் தனது Core தொழில்நுட்ப புரோசசர்களுக்கென அவ்வப்போது சிறப்புப்பெயரினை இட்டு வருகின்றது

Core i3 யும் Core 2 Duo போன்று ஒன்றுக்குமேற்பட்ட Core தொழிற்பாடு கொண்டது இருப்பினும் Hyper – Threading தொழில்நுட்பத்தில் இது வேறுபடுகிறது. இத் தொழில்நுட்பம் மெய்நிகர் (Virtual) ஆக ஒன்றுக்கு மேற்பட்ட Coreகளை உருவாக்குகின்றது. தற்போது Core i3 இல் இவ்வாறான Coreகள் தனித்தனியான Core களுக்கு சமனான வலுவுடன் இயங்குகின்றது. மேலும் இந்த Core i3 ஆனது இன்ரெல் நிறுவனத்தின் 'Nehalem' CPU கட்டமைப்பினை உள்வாங்கி வடிவமைக்கபட்டிருக்கிறது. பழைய Core 2 Duo கட்டமைப்பில் இருந்ததான Clock Speed இலும் இது 10 வீதம் அதிகமானது. இருப்பினும் இரண்டினதும் CPU வேகம் சமனானதே. மேலும் Core i3 ஆனது 32nm புரோசசர் தொழில்நுட்பத்திலும் Core 2 Duo ஆனது 45nm புரோசசர் தொழில்நுட்பத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளன.


எது எப்படியிருப்பினும் மேற்சொன்ன Virtual Core இனை பயன்படுத்தும் மென்பொருள்களிலன்றி வித்தியாசத்தினை உணரமுடியாது. அத்துடன் உண்மையான இரண்டு Core களினை கொண்ட கணிணியின் CPU வேகத்திலும் இந்த Virtual Core களினை கொண்ட CPU களின் வேகம் குறைந்ததே ஆகும்.



# PCST PC SOLUTIONS
TECHNOLOGIES (PVT) LTD

305, Kasthuriyar Road, Jaffna.
Tel :- 021 222 1101

M.M.V Road,Nelliyadi
Tel :- 021 2264999






உங்கள் கணனியில் ஏதேனும் பிரச்சினையா??


தரம்மிக்க தொழில்நுட்ப வல்லுனர்களைக்
கொண்டுள்ளது
எமது தொழில்நுட்ப நிலையம்




## Unbelievable Prices

Router (wired/wireless)
TV Card
Headphone
Scanner
Printers
Computer Table
Pen drive
Toners
Webcam





USB Devices
Card Reader
Woofers
HSDPA Dongle
Speaker
All Network Items





Processor
Motherboard
Memory
Hard disk
DVD Writer
Monitors
UPS
Keyboard
Mouse




Intel Dual Core 3.2Ghz
Intel Mother Board
320GB Harddisk
Kington 1GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

**3 Year's Warranty**




Intel Dual Core 3.2Ghz
Intel DDR3 Mother Board
320GB Harddisk
Kington DDR3 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

**3 Year's Warranty**





Intel Core i3
Intel Mother Board
500GB Harddisk
Kington DDR3 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

**3 Year's Warranty**







# வெல்லுங்கள் பரிசு ரூ.10,000

## போட்டி இல 1

## BIT, Computer Engineering, Multimedia,CIMA

*IP V6 இல் காணப்படும் bit எத்தனை?

a. 32, b.64, c.128, d. 256

உங்கள் விடைகளை CT1 a/b/c/d _<your name>,<address> என்பவற்றை type செய்து **0772395895** என்ற இலக்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

---

**A/L ? Pass / Fail**

- CIMA-UK
- BIT University of Colombo




- Master Degree @ USA, UK
- Government Scholarship.
- Multimedia - Adobe Media / Web / Visual Communication
- Web Designing → Web Development → FREE : CIW / ZEND, SQL
- Computer Engineer-USA → Free (Course fees) : CISCO-CCNA, BCS, IELTS / TOEFL, A+, N+

---

# TOEFL Test of English as a Foreign Language

**Authorised Toefl Testing Centre**



**Who Takes the TOEFL Test?**

* Students planning to study a higher education.
* Scholarship and Certification Candidates.
* Students and workers applying for visas.

**Who Accepts TOEFL Test Scores?**

* Immigration departments use them to issue residential, work visas & student visas.



**Our Awards :** Best Performance Award for BIT by University of Colombo
Silver Partner Award by Microsoft- USA

# MCS

Authorized Training Partners & Testing Centers of CIMA, Microsoft, GRE, GMAT, Oracle Campus, COMTIA, CISCO HP, Linux, Toefl, ICDL, Adobe & BCS

**Supported By UNDP/JRRP**

324, Palaly Road,Jaffna
www.mcsitcampus.org

SMS Your name & Course to 0772 395 895 & get Scholorship

# இலகுவாக இணையத் தளங்களை வடிவமைப்போம் Joomla!

தொடர் 2




ஆக்கம்: கெ.சர்வேஸ்வரன்
கணினிப் பொறியியலாளர்,
இலங்கை ஆளகளப் பதிவகம்
இயக்குநர், ICTM.

ஜூம்லா ஒரு இலவச, திறந்த மூல, கட்டற்ற மென்பொருள் (FOSS) எனவும் அதனைப் பயன்படுத்தி இலகுவாக இணையத்தளங்களை அமைக்கலாம் எனவும் கடந்த இதழில் பார்த்தோம். இந்த இதழில் ஜூம்லா இன் சிறப்பியல்புகள், அதனை நிறுவுவதற்கு அவசியமான முன்தேவைகள் எவை போன்ற அம்சங்களை பார்ப்போம்.

நாம் நாளாந்தம் பல மென்பொருள்களை பயன்படுத்தி வருகிறோம். உதாரணமாக Word, Excel, Calc, Powerpoint, Media player, Photoshop, Premire என ஏராளமான மென்பொருள்கள் இருக்கின்றன. இம்மென்பொருள்களை அவற்றின் பயன்கருதி வகைப்படுத்தலாம். உதாரணமாக Word Processing, Graphics Designing, Video Editing மென்பொருள்கள் என வகைப்படுத்தலாம். அவ்வாறே இந்த ஜூம்லா மென்பொருளானது உள்ளடக்க நிர்வாகத் தொகுதி (Content Management System - CMS) என்ற வகையைச் சார்ந்தது.

உள்ளடக்க நிர்வாகத் தொகுதிகள் ஒரு இணையத் தளத்தின் உள்ளடக்கத்தினை மிக எளிதாக நிர்வகிப்பதற்கு உதவுகின்றன. இணையத்தில் நாம் இன்று காணும் காணொளிகள், உரைகள், படங்கள், ஒலிக் கோப்புகள் என எல்லாவற்றையும் நாம் இந்த நிர்வாகத் தொகுதிகளைப் பயன்படுத்தி இலகுவாக நிர்வகிக்கலாம், முக்கியமாக எமக்கு தொழில்நுட்ப அறிவு பெரிதாக இல்லாவிட்டாலும் நிர்வகிக்கலாம். இவ்வாறான CMS ஏராளம் கிடைக்கின்றன.




உதாரணமாக Drupal, Mambo, Nucleus, mi-cms, Webra, SimpleDL, XOOPS, MyCMS, Hippo என ஏராளமான மென்பொருள்கள் இருக்கின்றன. இன்று பெரிதும் பேசப்படும் MediaWIKI, WordPress போன்ற மென்பொருள்கள் கூட உள்ளடக்க நிர்வாகத் தொகுதி வகையில் இன்று சேர்க்கப்படுகின்றன.

இவ்வாறு ஏராளமான உள்ளடக்க நிர்வாகத் தொகுதிகள் இருந்தாலும் ஜூம்லாவினைப் பொறுத்தவரையில் சில சிறப்பியல்புகள் இருக்கின்றன. அவை வருமாறு,

**ஒரு இலவச திறந்த மூல கட்டற்ற மென்பொருளாகும்** - இதனால் நாம் இம்மென்பொருளை இலவசமாக பதிவிறக்கி பயன்படுத்திக் கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல் எமக்கு மென்பொருள் மூலக் கோப்புகளும் கிடைப்பதால் எம்மால் எமக்கு வேண்டிய விதத்தில் மாற்றிக் கொள்ளவும் முடியும்.

**இலகுவாக நிறுவ முடியும** - ஜூம்லா மென்பொருளை நாம் இலகுவாக நிறுவிக்கொள்ள முடியும். அதுமட்டுமல்லாமல் இதனை நிறுவுவதற்கு எமக்குத் தேவையான அனைத்து மென்பொருள்களும் இலவசமாகக் கிடைக்கின்றன. இந் நிறுவல் முறை பற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

**எல்லா இயங்குதளங்களிலும் இயங்கக் கூடியது** - ஜூம்லா இணையத்தளங்களை நாம் விண்டோஸ், லினக்ஸ், Mac என எல்லாவிதமான இயங்குதளங்களிலும் நிறுவிக் கொள்ளலாம். சில மென்பொருள்களை, உதாரணமாக mi-cmsஇனை Linuxஇல் இயங்குதளங்களில் நிறுவமுடியாது.

**ஏராளமான நீட்சிகளைக் கொண்டது** - கடந்த பெப்ரவரி மாதம் வரையில் 6000 இற்கும் மேற்பட்ட நீட்சிகள் (Extensions) உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி எமது இணையத்தளங்களை மேலும் மெருகேற்றிக் கொள்ளலாம். உதாரணமாக, எமது தளத்தில் ஒரு கருத்துக்களம் (Forum) ஒன்றினைச் சேர்க்கவேண்டுமா, ஒரு சினிமா பாடலினை இணையத்தளத்தில் ஒலிக்கச் செய்யவேண்டுமா: எதை வேண்டுமானாலும் இந்த நீட்சிகளின் உதவியுடன் மிகக் குறுகிய காலத்தில் சேர்த்துவிடலாம். ஏற்கனவே இருக்கும் ஒரு கருத்துக்களத்தினைக் கூட எமது இணையத் தளத்துடன் இணைத்துக்கொள்ள இந்த நீட்சிகள் உதவுகின்றன. இந்த நீட்சிகள் பற்றி மேலும் விரிவாகவரும் பாகங்களில் பார்ப்போம்.

**பரந்த பயனாளர்களைக் கொண்டது** - ஜூம்லா ஆனது 64 மொழிகளில் கிடைக்கிறது. அதாவது நாம் ஒரு ஜூம்லா இணையத்தளத்தினை 64 மொழிகளில் மாற்றி மாற்றிப் பார்க்கக் கூடியதாக உள்ளது. அதுமட்டுமல்லாமல் இதுவரை ஜூம்லா 21 மில்லியனுக்கும் அதிகமான தடவைகள் பதிவிறக் கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

எனவே இந்த மென்பொருளில் ஒரு வழு இருக்கும் பட்சத்தில் அது இலகுவாகத் திருத்தப்பட்டுவிடும். அத்தோடு பல்வேறு ஜூம்லா குழுக்கள் உலகம் பூராவும் இருக்கின்றன. அக்குழுக்கள் அடிக்கடி கூடி ஜூம்லா நாள் என்று கொண்டாடுகின்றன.

**உதவிகள்** - ஜூம்லா ஆனது பரந்ததொரு சமூகத்தினைக் கொண்டுள்ளதால் எமக்கு இலகுவாக உதவிகளைப் பெறக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக நாம் ஜூம்லாவின் உத்தியோகபூர்வ தளமான www.joomla.org என்ற தளத்திற்கு சென்றால் அங்கு உங்களது சொந்த மொழியிலேயே (தமிழில்) கேள்விகளைக் கேட்கலாம், அதற்கு பதிலளிப்பதற்கு ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அத்தோடு உங்கள் பிரச்சினைக்கு ஏற்றவாறு அதன் தன்மைக் கேற்ப பல்வேறு கருத்துக் களங்கள் இருக்கின்றன. அவற்றினூடாக உங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம்.

**பல்மொழி இணையத்தளங்கள்** - ஜூம்லா பல்மொழி இணையத்தளங்களை அமைப்பதற்கு ஏற்ற வகையில் பல்வேறு சிறந்த வசதிகளைக் கொண்டுள்ளது. அந்த அடிப்படையில் இன்று இலங்கையில் தயாரிக்கப்படும் ஏராளமான அரச மற்றும் தனியார் சார் இணையத்தளங்கள் இந்த ஜூம்லாவினைப் பயன்படுத்தி அமைக்கப்படுகின்றன.

**இணையத்தளங்களுக்கு மட்டுமல்ல** - ஜூம்லா இணையத்தளங்களை அமைப்பதற்கு பெரிதும் பயன்படுத்தப்பட்டாலும் எமக்கு அன்றாடம் தேவைப்படும் பொது பிரச்சினைகளைத் தீர்க்கும் மென்பொருள்களைக் கூட இந்த ஜூம்லாவினைப் பயன்படுத்திக் கட்டமைத்துக்கொள்ளலாம்.


உதாரணமாக - இருப்புக் கட்டுப்பாட்டு தொகுதிகள் (Inventory control systems), தரவு அறிக்கை கருவிகள் (Data reporting tools), தனிப்பயன் உற்பத்தித் திரட்டுக்கள் (Custom product catalogues), முன் பதிதலுக்கும், ஒதுக்கி வைத்தலிற்குமான தொகுதி (Reservation and booking systems), தொடர்பாடல் கருவிகள் (Communication tools) என ஏராளமான பொதுத்தேவை மென்பொருள்களை நாம் இந்த ஜூம்லாவினைப் பயன்படுத்தி அமைத்துக்கொள்ளலாம்.

*வரலாற்றுச் சுருக்கம்*

Mambo என்ற பெயரில் இருந்து வந்த ஒரு திறந்த மூல மென்பொருள் செயற்திட்டத்திலிருந்து அந்த செயற்திட்டக்குழுவின் போக்கு காரணமாக பிரிந்து ஒரு தனி செயற்திட்டம் ஒன்று OpenSourceMatters.org என்ற இணையத்தளத்தினூடாக Andrew Eddie என்பவரால் அறிவிக்கப்பட்டது. முற்றுமுழுதாக திறந்த மூல கட்டற்ற போக்குக் காரணமாக, குறித்த அறிவிப்பு வந்த முதல் நாளே ஆயிரக்கணக்கானவர்கள் குறித்த தளத்தில் இணைந்து தமது ஆதரவினைத் தெரிவித்தனர். அதன் பின்னர் செப்டம்பர் 2005 இல் தற்போதைய பெயரான Joomla! அறிவிக்கப்பட்டது. Swahili மொழியில் வழங்கப்பட்டுவரும் 'jumla' என்பதனை அடிப்படையாகக் கொண்டே Joomla! என்ற பெயர் பரிந்துரைக்கப்பட்டது. Swahili மொழியிலே இந்த சொல்லின் பொருள் 'எல்லோரும் ஒன்றாக' என்பதாகும். அதன்பின்னர் செப்டம்பர் 2005 இல் Joomla!1.0 ஆனது Mambo 4.5.2.3 ஐ அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து ஜூம்லா பல வழிகளிலும் அபிவிருத்தி செய்யப்பட்டு ஜனவரி 2008 இல் Joomla! 1.5 என்ற வெற்றிகரமான பதிப்பு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல்வேறு பதிப்புகளைக் கண்ட ஜூம்லாவின் 1.6.0 பதிப்பு ஜனவரி 10, 2011 இல் கிடைத்தது. பல்வேறு புதிய அம்சங்களை உள்ளடக்கிய இப்பதிப்பு மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

நாம் குறித்த சேவையகங்களின் சேவைகளை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு உங்கள் கணினியில் Start->Programs->XAMPP for Windows->XAMPP control panel என்பதனை சொடுக்கினால் கீழ் உள்ளவாறான சாளரம் கிடைக்கும் அதில் Apache மற்றும் MySQL போன்றவற்றுக்கு முன் உள்ள Start என்ற பொத்தானைச் சொடுக்குவதன் மூலம் ஆரம்பிக்கவேண்டும். அவை சரியாக ஆரம்பிக்கும் பட்சத்தில் கீழ் உள்ள படத்தில் தரப்பட்டுள்ளவாறு பச்சை நிறத்தில் Running என்ற அடையாளத்தினைக் காணலாம்.




இப்போது உங்கள் இணைய உலாவிகளில் ஒன்றினைத் திறந்துகொள்க. அதில் http://localhost என்று தட்டச்சுச் செய்க. நீங்கள் சரியாக XAMPP இனை நிறுவி, மேற்சொன்னவாறு சேவைகளை ஆரம்பித்திருப்பின் http://localhost என்று நீங்கள் தட்டச்சும்போது கீழ் கண்டவாறான திரையைப் பெறுவீர்கள்

வரும் இதழில் ஜூம்லாவினை எப்படி நிறுவலாம் என்று பார்ப்போம்.

தொடரும்...

# மின்வணிகம் [e-commerce]

ரூபன்
பகுதி 3




மின்வணிகத்தின் அடிப்படை விடயங்கள் வகைகள் என்பன பற்றி விரிவாக பார்த்திருக்கின்றோம். இனி மின் வணிகத்தின் பிரயோகங்கள் பற்றியும் அதன் செயல் அமைப்பு பற்றியும் கவனம் செலுத்துவோம்.

இதற்கு முன்பாக மின்வணிகம் சம்மந்தப்பட்ட தொடரறா சேவைகள் (Online Service) பற்றி சிறிது பார்ப்போம்.

- **Cyber Banking எனப்படுகின்ற இலத்தரனியல் வங்கி நடவடிக்கைகள்.**


சாதாரண நிலையான வங்கிச் சேவைக்கு அப்பால் நடை பெறுகின்ற இணையவழி இலத்திரனியல் வங்கி நடவடிக்கை கள் தொடரறா சேவைகளில் முதன்மையானதாக கூறலாம். எமது நாட்டினைப் பொறுத்தவரை பெரும்பாலான வங்கிகள் இணையவழி மூலமான இலத்திரனியல் வங்கி நடவடிக்கை களினை செய்துவருகின்றன.

வாடிக்கையாளர்கள் வங்கியின் Internet Bankingஇற்கான விண்ணப்பத்தினை சமர்ப்பித்தால் வாடிக்கையாளருக்கான உள்நுழைவுக்கான பயனர்பெயர்(Username) கடவுச்சொல் (Password) ஆகியன வழங்கப்படும். அவற்றினைப் பயன் படுத்தி எந்த இடத்தில் இருந்தும் - எந்த நேரத்திலும் வங்கிச் சேவையினை பெறும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

ATM (Automatic teller machine) ஊடான தானியங்கி வங்கி சேவை கூட இணைய வலைப்பின்னல் ஊடாகத்தான் இடம்பெறுகிறது. இணையவசதி இல்லாத இடத்தில் அதுகூட சாத்தியமில்லை. இவை தனிப்பட்ட வலைப்பின்னல் அமைப் பில் (Private Network) இணைக்கப்பட்டிருக்கின்றன.

உ-ம் : https://www.commercialbk.com/comworks/

- தொடரறா பங்கு வர்த்தகம் **(Online securities Trading/Share Marker Business)** ஆனது கணினி மற்றும் இணையத்தினைப் பயன்படுத்தி முன்னேறிக்கொண்டிருக்கும் ஒரு வர்த்தக நடவடிக்கை எனலாம். இன்று நாம் இலங்கையில் பொதுவாக் கேள்விப்படுகின்ற கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நிலையத்தின் பங்குவர்த்தக நடவடிக்கைகளினை பெரும் பாலான வர்த்தகர்கள் முதலீட்டாளர்கள் இணையத்தின் வழிதான் மேற்கொள்கின்றனர். உ-ம் : www.cdax.lk




- தொடரறா வேலைவாய்ப்புச் சந்தை – **Online Job market** மூலம் இன்று உலகளாவிய ரீதியில் உடனுக் குடன் வேலைவாய்ப்புத் தீர்வுகள் வழங்கப்படுகின்றன. இன்று படித்து முடித்து வேலைதேடும் இளையவர்கள் தங்களுக் குரிய வேலை மிகக்கூடிய சம்பளத்துடன் யாரும் தரமாட்டார் களா என பல்வேறு வேலைவாய்ப்புத் தளங்களில் பதிவு செய்து நாளாந்தம் மின்னஞ்சல்களை பரிசேதித்தவண்ணமிருக் கின்றனர். அரசாங்க தொழில் வங்கிகூட தனது சேவையினை இணையவழி வழங்கிவருகின்றது. உ-ம் : www.jobsnet.lk

- போக்குவரத்துச்சேவைகளில் மின்வணிகம் கொடி கட்டி பறக்கின்றதெனலாம். வீட்டிலிருந்தே எந்த நாட்டுக்குமான பயணத்தினை இணையமூடாக ஒழுங்குசெய்யும் வசதி இதன் மூலம் கனிந்திருக்கிறது. ஏன் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு செல்வதற்கு கூட இணையத்தின் வழி இருக் ககை ஒதுக்கீடு செய்யக்கூடியதாக உள்ளது. வெறுமனே ஒதுக்கீடு செய்வதோடு அல்லாமல் விமானத்திலோ பேருந் திலோ இருக்கையினை தெரிவு செய்தல்கூட சாத்தியமாகி விட்டது. உ-ம் : www.ebooking.lk


- வீடு, நிலம் சம்மந்தப்பட்ட Real Estate துறையும் மின்வணிகம் மூலம் நன்மைபெற்ற ஒருதுறை எனலாம். நீங்கள் நினைத்தால் லண்டனில் ஒரு வீட்டினை இணையத்தின் வழி வாங்கவோ அல்லது விற்கவோ முடியும். யாழ்ப்பாணத் தில் இருந்தவாறே வெளிநாட்டில் உள்ள நண்பருக்கு உங்கள் நிலத்தினை விற்க முடியும்.

- பணப்பரிமாற்றம்

வெளிநாட்டில் உள்ளவர்கள் எமக்கு வங்கிகளல்லாத முறையில் பணம் அனுப்பும்போது, உதாரணமாக Western Union ஊடாக அனுப்புவதாயின் அவர்கள் இணையத்தின் ஊடாகவே Westernunion.com எனும் இணையத்தளத்தில் சென்று அனுப்பலாம் அவர்கள் குறித்த நிலையத்திற்கு செல்லவேண்டிய அவசியமில்லை.

- E – Channeling (மருத்துவ துறையில்), கூரியர் சேவைகள் போன்றனவும் ஏலம் விடல் போன்ற நடவடிக்கை களும் விடுதி அறை ஒதுக்கீடு, துரித உணவு பெறுதல் அன்பளிப்புக்களை அனுப்புதல் ஏன் வாழ்க்கைத் துணை யினை அடைவது கூட மின்வணிகத்தில் சாத்தியமாகி விட்டமை குறிப்பிடத்தக்க விடயங்கள் எனலாம்.

உ-ம் : www.echanneling.lk , www.dhl.com , ww



- சந்தைப்படுத்தல்/ விளம்பரம் செய்தல் போன்றன கூட மின்வணிகத்தில் சாத்தியமாகிவிட்டன.

www.onlineuthayan.com

இவையெல்லாம் மின்வணிகம் சாத்தியப்படுத்திய ஒருசில விடயங்களே. மேற்சொன்ன விடயங்களினை நாங்கள் ஒவ்வொன்றாகவும் விரிவாகவும் அவற்றில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன யார் எங்கு எப்படி பயன்படுத்துவது போன்ற விடயங்களையும் வரும் பத்திகளில் நோக்கலாம் அதற்குமுன்பாக இவையெல்லாவற்றிலும் மிக முக்கியமான விடயம் என்னவெனில்

**இந்த நடவடிக்கைகளில் பணம் எவ்வாறு கையாளப் படுகின்றது?** என்பதுதான் இது பற்றி இதுவரை நான் விரிவாக எதுவும் சொல்லவில்லை. கிரடிட் காட் (கடன் அட்டை) மூலம் பணம் செலுத்தலாம் என்றும் பெறலாம் என்றும் சொல்லியிருக்கின்றேன். எனினும் இந்த விடயத்தில் மிகவும் விபரமான விடயங்கள் தரப்பட வேண்டியிருக்கின்றது. எனவே அது பற்றி கதைத்த பின்பு மின் வணிகத்தின் பிரயோகங்கள் பற்றி விரிவாக பார்க்கலாம்.


மின்வணிகத்தில் பயன்படுத்தப்படும் கொடுக்கல் வாங்கல் முறைகள்.

1. Cash (பணம்)
2. e-Cheque (காசோலை)
3. Credit card (கடனட்டை)
4. Stored Value (சேமித்து பின் செலவு செய்தல்) Debit / Smart /Prepaid card, Gift certificate
5. Accumulating Balance (சேகரிப்பு முறை) (Utility Bill payment from Account)

**1) Cash : பணம்**

- இது சட்டப்படியாக குறித்த நாட்டில் / பிராந்தியத் தில் வரையறுக்கப்பட்டது.
- மிகப்பிரபலமானதும் பொதுவானதுமான பணப்பரி மாற்ற முறை அதிகமானதும் கூட
- எந்த விதமான இடையூறுகளுமின்றி அடுத்த வடிவத்திற்கு உடனடியாக மாற்றப்படக்கூடியது.
- கொண்டு செல்லக்கூடியது. எந்த ஒரு சிபாரிசுகளோ/ அதிகாரப்படுத்தல்களோ தேவையற்றது. உடனடி கொள்வனவு சக்தி கொண்டது.






- பணம் கொடுத்து வாங்குவதற்கு எந்த விதமான மேலதிக கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்க முடியாது.

இவை யாவும் பணத்தினை நேரடியாக வணிகத்தில் பயன்படுத்துவதற்குரிய ஆதரவு கருத்துக்கள்.

எந்த ஒரு விடயத்திற்கும் சிக்கல் இருக்காமல் இல்லை. அந்த வகையில் பணத்திற்கும் தடைகள் உள்ளன. அசௌ கரியங்கள் உள்ளன. அவை

1) இலகுவில் களவாடப்படலாம். / தொலைந்து போகலாம்.

2) சிறிய வகை கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டிருக்கும்.

3) பெரிய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது கடினம்.


பெட்டியில் வைத்து கொடுக்கலாம் என ஒருவரும், ஏன் கொன்ரைனரில் வைத்து கொடுக்கலாம் என ஒருவரும் கூறலாம். அது எவ்வளவு ஆபத்தானது என்பது உங்களுக்கு தெரிந்திருக்கும். அன்றாடம் பத்திரிகைகளில் துப்பாக்கி முனையில் துணிகர கொள்ளை என செய்திகள் வருகின்றமை நீங்கள் அறிந்ததே இலங்கைக்கு அமெரிக்கா இத்தனை கோடி பண உதவி செய்வதாக பத்திரிகைகளில் பார்த்திருக் கின்றோமே. அப்படியானால் என்ன கப்பலில் கட்டி அனுப் புகிறார்களா? அது தான் இல்லை. இதன் போது இந்த அச்சடித்த பணம் பயன்படாது. இலத்திரனியல் வங்கி நடவடிக்கை தான் சாத்தியம்.

ஆயினும் மின்வணிகத்தில் திரவப்பணம் பயன்படுத்தலாம். இதற்கான வசதியை குறித்த நிறுவனம் வழங்குமாயின் இணையவழியில் பொருட்கள் சேவைகளிற்கான விருப்பை பதிவுசெய்தபின் பணத்தை நேரடியாக விற்பனைப் பிரதிநிதியிடமோ நிலையத்திலோ செலுத்துவதன் மூலம் நடவடிக்கையினை நிறைவுசெய்யலாம். மின்வணிகத்தில் அவ்வாறான திரவவழி பணக்கொடுக்கல் வாங்கல் இணையும்போது அது பகுதியான மின்வணிகமாக கருதப் படலாம்.

(வளரும்)

# கணினிக் கற்கை நெறிகளும் வேலைவாய்ப்புகளும்


சி.சிவாஸ்க்கரன்
கணினிப் பொறியியலாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

கணினித்துறை சம்பந்தமான தொழில் ஒன்றைப் பெற்றிட வேண்டும் என்பதே இன்றைய இளைஞனின் அவா.

கணினினித்துறையில் காணப்படும் தொழில் வாய்ப்புக்களையும், அதற்கு தேவையான தகமைகளையும் சரியான முறையில் இனம் கண்டு அத்துறையில் ஆர்வத்தையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்வதே இதற்கு சரியான வழியாகும்.

தொழில் வாய்ப்பை அறிந்து கொள்வதற்கான பல்வேறு இணையத்தளங்கள் காணப்படுகின்றன. www.careerbuilder.com, www.jobmonsters.com, LinkedIn.com

இவற்றின் மூலம் தற்போது உலகின் தொழிற்சந்தையில் கிராக்கி மிக்க (Demand jobs) தொழில்களை இனம் கண்டு கொள்ளலாம்.

தற்போதைய நிலவரப்படி தொழிற்சந்தையில் கணினித்துறை சார்ந்த பின்வரும் தொழல்புரிவோருக்கான கேள்வி மிக அதிகமாக காணப்படுகின்றது.

1. கணினிப்பொறியலாளர் ( Computer Engineer- network security)

இவ்வேலைவாய்ப்புக்கு பல்கலைக்கழக பட்டதாரிகள் மட்டுமல்லாது புலமைசார் அங்கத்துவ தகைமையை கொண்டோர்களையே அனேக நிறுவனங்கள் விரும்புகின்றன.

மைக்ரோசொப்ற் நிறுவனம் (MCSE) மைக்ரோசொப்ற் கணினிப் பொறியியாளர் கற்கை நெறி அவ்வாறனான வகைகளில் ஒன்றாகும். இதனுடன் சிஸ்கோ கற்கை நெறிகளையும் பூர்த்தி செய்திருப்பது உங்கள் தகைமையை மேலும் வலுவடையச் செய்யும். இதனுடன் நற்பண்புள்ள ஊடுருவல் (Ethical Hacking) தெரிந்திருப்பது சிறப்பானது. உலக தொழிற்சந்தையில் உயரிய வேதனத்துடன் மேற்படி வேலைகளுக்கு ஆட்களை கோரி வருகின்றனர்.

எமது இளைஞர்களும் இவ்வாறான தகைமையைக் கொண்டிருப்பார்களாயின் உயரிய வேதனத்துடன் தொழில்களை பெறமுடியும்.

இலங்கை அரசும் திறமையுள்ள இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மேற்படி கற்கை நெறியை பயிலும் மாணவர்களின் பரிட்சைக்கட்டணங்களை வழங்கி வருகின்றது.

2. பல்லூடகத் தொழில்நுட்பவியலளாளர். (Multimedia Technician)

மிகவும் சுவாரஸ்யம் (Entertainment) நிறைந்த இவ்வேலைவாய்ப்பானது இப்போது மிகுந்த வரவேற்பை உடையதும், இளைஞர், யுவதிகளால் பெரிதும் விரும்பத்தக்கதுமாகும். இதற்கான தொழில் தகைமையை பல்லூடகத்துறையில் பல்வேறுபட்ட மென்பொருட்களை வெளியிடும் அடோப் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதே மிகச்சிறந்ததாகும். Photoshop, Flash, Dream Weaver, Premiere ஆகியவற்றை உள்ளடக்கிது. Adobe certified Technician, Adobe certified expert என இதன் தரங்கள் அமைகின்றன.

**3.இணையத்தள வடிவமைப்பாளர்.**

நிறுவனங்களில் மட்டுமல்லாது சுயமாகவும், பகுதி நேரமாகவும் இணையத்தள வடிவமைப்பாளராக தொழில் வாய்ப்பை உடையது. வெளிநாடுகளிலிருந்தும் சிறிய சிறிய அளவினாலா வேலை ஒப்பந்தங்களை இணையம் மூலம் பூர்த்தி செய்தும் வருமானத்தை ஈட்டலாம் (Out Sourcing). Certified in Web master Association அங்கத்துவம் மற்றும் Zend நிறுவனத்தின் php.Zend Engineering தகைமை அதிக வருவாயுடைய வேலைவாய்ப்புக்களை உறுதி செய்யும்.

உள்நாடாயினும் வெளிநாடாயினும் வேலையின்மைப் பிரச்சினை ஒரு புறமும், பல வேலைகளுக்கு தகுதியான திறமை வாய்ந்தவர்கள் இல்லாமையும் தொடர்ந்து காணப்பட்டே வருகின்றது.


தகவல் தொழில்நுட்பத்துறையில் காணப்படும் மேலும் புதிய தொழில் வாய்ப்புக்கள் அடுத்து வரும் இதழ்களில்.



√ **aat** கற்கை நெறிகள்

√ Banking (வங்கியியல் கற்கை நெறிகள்)

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சிறப்பு வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.



## GLOBAL STUDIES.

தமிழ் சங்கக் கட்டிடம்.
இல. 7, உருத்திரா மாவத்தை.
கொழும்பு – 6.

தொடர்புக்கு : 0113150268
R.Robin : 0773024313,
M.Sasiruban : 0773570511

## மலிவாக இணையத்தளம் அமைக்க வேண்டுமா?

......com.org.net.info.biz.lk.in.uk.us....

எதுவானாலும் பதிவு செய்யலாம்!

ஒரேநாளில் அனைத்தும்!



உங்கள் அருகில் நாங்கள்!

500 MB..

தொடக்கம் விரும்பிய மட்டும்

எமது சேவர்கள்

USA,UK நாடுகளில்!

Windows/Linux Servers



உங்களுக்காக
உங்கள் தேசத்தில்
அன்றில் இருந்து.....

இணையத்தள சேவையில் 8 வருட முன்னோடிகள்!

உலகளாவிய ரீதியில்

300க்கும் அதிக தளங்களை நிறுவிய சாதனை!



Hotline:+94 777 563213 Skype:speeditnet

**இணையத்தளவடிவமைப்பு தள வடிவமைப்பு ரூ 10,000 தொடக்கம்**

கவர்ச்சிகரமான வடிவமைப்பு பாதுகாப்பான தொழில்நுட்பம் தேடுபொறியினுள் அகப்படும் வகையிலானது வேகமானது என எமது வடிவமைப்பின் சிறப்பு ஆனது எம்மால் வடிவமைக்கப்பட்ட இணையத்தளங்களின் ஊடாக கண்டறியப்படலாம் நீங்கள் குறைந்த செலவில் சிறந்த தளத்தை வடிவமைக்க விரும்பின் இன்றே எம்மை நாடுங்கள்

செல்வச்சந்நிதி ஆலயம் -> www.sannathy.com
சைவசித்தாந்த ஆய்வு நிலையம் -> www.saivasiddhantham.com
வடக்கு கிழக்கு அ.உ சங்கம் -> www.nepgou.org
CENTRE FOR PEACE & RECONCILIATION -> www.peacecentrejaffna.org
வலம்புரி நாளிதழ் -> www.valampurii.com
யாழ் இந்துக்கல்லூரி -> www.jhc.lk



**எமது மற்றைய சேவைகள்**

- மென்பொருள்கள் வடிவமைப்பு
- இணையத்தள விளம்பரங்கள்
- நெற்வேக்கிங் சேவைகள்
- இணையத்தள கற்கைநெறிகள்

என எமது பட்டியல் நீண்டது .எமது நிறுவன இணையத்தளத்தில் பட்டியலைப்பார்வையிடலாம்

# SPEED IT NET

"The Quick way to Online" www.speeditnet.com

72/28 Panikkar Lane Palaly Road,Thirunelvely Jaffna. Telephone: 0214 591871 / 021 222 8358 / 0777 563213

# தகவல் தொழில்நுட்ப கலைச்சொல் அகர முதலி

## ஆங்கிலம் - தமிழ் பகுதி 02

| | |
|---|---|
| Acknowledge character | - ACK – என்பதன் குறுக்கம் ஏல் அறிவிப்பு / பொறுப்பு / பெற்றொப்பவரி வடிவம் |
| Acoustic coupler | - கேட்பொலி இணைப்பி |
| Acoustical sound enclosure | - கேட்பொலி அடைப்பு |
| Acronym | - முதலெழுத்து பெயர் |
| Action | - செயல் |
| Action diagram | - செயல் வரிப்படம் |
| Action entry | - செயல் பதிவு |
| Action message | - செயல் தகவல் |
| Action oriented management report | - செயல் முகநோக்கு செயற்பாட்டு முகாமை (இ.வ) / மேலாண்மை (த.வ) அறிக்கை |
| Action statement | - செயல் கூற்று |
| Action stub | - செயல் இடம் |
| Active area | - செயற்படு பரப்பு |
| Active cell | - இயக்குகலன் (பெட்டி போன்ற அமைப்பு) |
| Active class | - செயற்படு வகுப்பு |
| Active configuration | - செயற்படு அமைவடிவு |
| Active database | - செயற்படு தரவுத்தளம் |
| Active decomposition diagram | - செயற்படு சிதைவு வரைபடம் |
| Active element | - செயற்படு மூலகம் (இ.வ) / முதன்மம் (த.வ) |
| Active file | - செயற்படு கோப்பு |
| Active index | - செயற்படு சுட்டி |
| Active matrix display | - செயற்படு அமைவுரு (இ.வ) / அணி(த.வ) காட்டி |
| Active window | - செயற்படு சாளரம் |
| Activity | - செயற்பாடு |
| Activity rate | - செயற்பாட்டு வீதம் |
| Activity ratio | - செயற்பாட்டு விகிதம் |
| Actual decimal point | - உண்மைத் தசம (இ.வ) / பதின்மப் (த.வ) புள்ளி |
| Actuator | - தூண்டி |
| ACU- | - **Automatic Calling Unit** என்பதன் குறுக்கம் : தன்னியக்க அழைப்பு அலகு |
| A-D | - **Analog – to- digital** என்பதன் குறுக்கம்: இலக்க ஒப்புமை மாற்றி/ஒப்புமையிலிருந்து இலக்கமுறைக்கு கொண்டு வருதல் |
| Ada | - ஏடா: ஒரு கணினி மொழி |

*இ.வ - இலங்கை வழக்கு*
*த.வ - தமிழக வழக்கு*

# கணினியைத் தூசு தட்டும் முறை

கணினியைத் தூசு தட்டும் முறை




வீட்டில் நாம் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறையாவது தூசு தட்டுவதுண்டு. அது போல கணினியையும் தூசு தட்டத்தானே வேண்டும். அதற்காகத் தும்புத்தடியினை எடுத்து கணினிக்குள் கூட்ட முடியாதே. அல்லது ஓலை கட்டி ஒற்றடை அடிக்க முடியாதே. அதற்கும் சில வழிகள் இருக்கின்றன.


வெளியில் மட்டும் துடைத்து வருவதால் மட்டுமோ கம்பளிப் போர்வையால் மூடிவைப்பதால் மட்டுமோ கணினியில் தூசு துகள்களை தவிர்த்து விட முடியாது.

தூசுகள், துகள்கள் கணினியில் பொருத்தப்பட்டிருக்கும் விசிறிகளின் காரணமாகவும் சூழல் நிலையாலும் கணினிக்குள்ளும் விசிறிகளுக்கிடையிலும் சேருகின்றன. இவற்றின் காரணமாகக் குளிர்மையாக்கும் விசிறிகள் இயங்க மறுப்பதாலோ / மெதுவாகச் சுற்றுவதாலோ குறுஞ்சுற்றுக்கள் ஏற்படுவதாலோ கணினியின் பாகங்கள் செயலிழக்கும் அபாயம் உண்டு. எனவே தூசு தட்டுவது முக்கிய பணி. அதற்கு என்ன செய்வது?


கணினியை எப்போதும் கணினி மேசையில் வைக்கும் போது ஒரு இறப்பர் விரிப்பு வைத்து அதன் மீது வைப்பது மின்சாரத்தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கலாம். மேலும் கணினியினைத் தொடுவதற்கு முன் நீங்கள் பாதணி அணிந்திருப்பது அவசியம். இப்போது கணினியின் உலோக மேற்பரப்பில் கணினியினை அழுத்தியவாறு கணினியின் மின் வழங்கும் கேபிள்களை அகற்றவும். இதன் மூலம் கணினியில் உள்ள நிலை மின்னை நீக்குவதற்கு வழிவகுக்கும்.




கணினியின் உள்ளே தூசுகள், துகள்கள் அதிகம் காணப்படக்கூடிய இடங்கள்.




ஏனைய அனைத்து கேபிள்களையும் அகற்றிய பின்னர் பக்கவாட்டில் உலோக மூடியினை அகற்றவும். இனி மதர்போட்டிலுள்ள மின் வழங்கும் அனைத்துக் கேபிள் களையும் அகற்றவும்.




இப்போது விற்பனை நிலையத்தில் வாங்கிய காற்று விசிறும் தூசு அகற்றியினை பயன்படுத்தி காற்று விசிறவும். (இது பல அளவுகளில் காணப்படுகின்றது.) பொருத்து மிடங்களினை மென்மையான பஞ்சுத்தூரிகை கொண்டு துடைக்கலாம். இனி முறையான வகையில் உள் கேபிள்களினைப் பொருத்துங்கள். பின் உலோக மூடியினை மூடியபின் வெளித்தொடுப்புக்களைப் பொருத்தவும். இவ்வாறு ஒரு வருடத்திற்கு ஒரு முறையாவது தூசு நீக்குவது அவசியமானது.

# KEY WORDS 4 KIDZ




1. The **computer** is a machine that can take old data or information and make new data or information for you to use.


2. The **keyboard** let us communicate or talk with the computer. You use your mouth to talk to your friends and sometimes you may even use your hands to talk with your friends. The keyboard is the main way we talk to the computer.




3. The **monitor** is like a t.v. It shows you pictures and words.




4. The **mouse** also lets us talk to the computer by pointng and clicking on what we want on the monitor. It has two buttons. Most of the time we use only the first button.



5. The **printer** let you have a printed copy of the words and pictures on the monitor. We call this the hard copy.




6. The **speakers** work like the speakers on a radio. They let you hear different sounds.



7. Did you know that you can listen to your favorite songs and watch your favorite movies on a compact **disk** using your computer?

Well did you know that **disks** allow you to save words and pictures on them. It is like putting words and pictures in your own bank.



# Microsoft® Office® Word 2007

க.சியந்தன்
போதனாசிரியர்
கணினி தொழில்நுட்பம்
யாழ் பல்கலைக்கழகம்



தொடர் - 03

## உரைகளை தட்டச்சு செய்தலும் Select, Edit மற்றும் Format செய்தலும்

கடந்த மாதம் ஆவணத்தை உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே உருவாக்கிய ஆவணத்தை open செய்தல் பற்றிப் பார்த்திருந்தோம்.


தொடர்ந்து தகவல்களை உள்ளிடல் மற்றும் அவற்றை தேவையானவாறு format செய்தல் என்பது பற்றி பார்ப்போம். MS Wordஇல் தட்டச்சு செய்யக் கூடிய பகுதியானது எப் போதும் கிடையாக Left marginக்கும் Right marginக்கும் இடையிலும், நிலைக்குத்தாக Top marginக்கும் Bottom marginக்கும் இடைப்பட்ட பகுதியாக இருக்கும்.


எனவே அந்தப் பகுதியினுள் Mouse cursorஐ வைத்து Click செய்கின்றபோது Insertion Pointer ஆனது விட்டு விட்டு ஒளிர்ந்த வண்ணம் இருக்கும். நாம் தட்டச்சு செய் கின்றபோது எழுத்துக்கள் உள்ளிடப்படும். இவ்வாறு தொடர்ந்து தட்டச்சு செய்யும்போது Right margin வரை சென்று பின்னர் அடுத்த Lineக்கு செல்லும். இவ்வாறு நாம சொற்களையும் வசனங்களையும் தட்டச்சு செய்வோம். இவ்வாறு பல வசனங்களை நாம் பந்தி(Paragraph) என அழைக்கின்றோம். ஒரு பந்தியை முடித்தி அடுத்த பந்திக்கு செல்ல வேண்டும் எனி[illegible] புதிய Lineக்கு Insertion Pointer வந்து நிற்கும். தொடர்ந்து நாம் அடுத்த பந்தியை தட்டச்சு செய்யலாம்.

தட்டச்சு செய்த விடையங்கள மாற்றி அமைத்தல் அல்லது நீக்குதல் மற்றும் சேர்த்தல் ஆகியவற்றையே Edit என குறிப்பிடுகின்றோம்.

இத்தகைய Edit மற்றும் Format செயல்முறைகளை செய்வதற்கு எந்த விடையத்தை மாற்றப்போகின்றோம் அல்லது நீக்கப்போகின்றொம் என்பதனை சொல்வதற்கு நாம் அந்த விடயத்தை தெரிவு (Select) செய்து காட்ட வேண்டும். இந்த தெரிவிணை பலவாறு செய்யலாம்:

- குறித்த சொல் முன் mouse cursorஐ வைத்து Click செய்து mouseஐ நகர்த்தும் போது குறித்த பகுதி தெரிவு செய்யப்படும்
- குறித்த சொல்லின் மேல் mouse cursorஐ வைத்து Double Click செய்கின்றபோது அந்த குறித்த சொல் தெரிவு செய்யப்படும்.
- குறித்த பந்தி மேல் mouse cursor ஐ வைத்து மூன்று தடவை Click செய்கின்றபோது அந்த குறித்த பந்தி தெரிவு செய்யப்படும்.






○ அதேபோல் குறித்த ஒரு வரி (Line)ஐ தெரிவு செய்ய வேண்டுமாயின் mouse cursorஐ அந்த வரி (Line) க்கு நேரே Left margin பகுதியில் Click செய்ய வேண்டும். அதேபோல் ஒரு பந்தி தெரிவு செய்யப்பட வேண்டுமாயின் அந்த பந்திக்கு நெரே mouse cursorஐ வைத்து இரு தடவை Click செய்ய வேண்டும். அதே போல மூன்று தடவை தொடர்ச்சியாக Click செய்யும் போது எல்லா பந்திகளும் தெரிவு செய்யப்படும்.

○ இதேபோல் Keyboard Keyகளையும் தெரிவு செய்யப்பயன்படுத்தலாம். அதாவது Insertion Pointer இருக்கும் இடத்திலிருந்து shift key உடன் Arrow Key (Right, Left, Up and Down)களைப் பயன்படுத்துவதன் மூலமும் நாம உரைகளை(Text) தெரிவு செய்யலாம்.

மேற்கூறிய தெரிவு செய்யும் முறைகளில் உங்கள் தேவைக்கேற்ப அல்லது வசதிக்கேற்ப பயன்படுத்தி Editing அல்லது Formatting செய்யவேண்டிய விடையத்தை கணினிக்கு அறிவிக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் எந்தப் பகுதியை மாற்றி அமைக்கப்போகிறீர்கள் அல்லது Format செய்யப் போகிறீர்கள் என்பது கணினிக்கு தெரியப்படுத்தப்படும்.

**Editing செய்தல்**

Editing செய்தல் என்பது நாம் தட்டச்சு செய்த உரைகளை நீக்குதல் (Cut/ Delete) நகலெடுத்தல்(Copy) மற்றும் நகலெடுத்த(Paste) உரையை ஒட்டுதல் என்பன வற்றைக் குறிக்கும்.

**நீக்குதல்(Cut/ Delete)** என்பது நாம் தட்டச்சு செய்த உரையை நீக்க வேண்டும் எனின் அந்த உரையை தெரிவு செய்து Delete Keyஐ அழுத்துவதன் மூலம் நீக்கி விடலாம். அதேபோல தட்டச்சு செய்யப்பட்ட விடயத்தை ஒரிடத்திலிருந்து நீக்கி இன்னொரு இடத்தில் ஒட்ட வேண்டு மெனின் Cut என்ற கட்டளையைப் பயன்படுத்த வேண்டும். அதாவது தெரிவுசெய்யப்பட்ட உரைப்பகுதியின் மேல் mouse cursorஐ வைத்து வலது Click செய்து Cut என்ற கட்டளையைத் தெரிவு செய்ய வேண்டும்.

**நகலெடுத்தல்(Copy)** என்பது நாம் தட்டச்சுசெய்த அதே உரையை இன்னொரு இடத்திலும் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படின் புதிதாக தட்டச்சு செய்வதை தவிர்த்து ஏறகனவே தட்டச்சு செய்ததை நகல் எடுத்தல் ஆகும். தெரிவு செய்யப்பட்ட உரைப்பகுதியின் மேல் mouse cursor ஐ வைத்து வலது Click செய்து Copy என்ற கட்டளையைத் தெரிவு செய்ய வேண்டும்.

**ஒட்டுதல்(Paste)** என்பது நகல் எடுத்த அல்லது Cut செய்யப்பட்ட உரையை தேவையான இடத்தில் ஒட்டுவதற் குப் பயன்படுத்தப்படும் கட்டளை ஆகும்.

இந்த கட்டளைகளுக்காக Keyboard Shortcut keys களையும் பயன்படுத்தலாம்.

Cut - Ctrl Key யும் x யும் சம நேரத்தில் அழுத்துதல்
Copy - Ctrl Key யும் c யும் சமநேரத்தில் அழுத்துதல்
Paste – Ctrl Key யும் v யும் சமநேரத்தில் அழுத்துதல்


**Format செய்தல்**

தட்டச்சு செய்த விடையங்கள ஒழுங்கு முறைப் படுத்தலையே Format என குறிப்பிடுகின்றோம். இந்த செய்தலை இரு வகையாக பார்ப்போம்.


➢ Text (Font) Formatting
➢ Paragraph Formatting

Text (Font) Formatting என்பது உரையின் வடிவம், நிறம் அல்லது எழுத்தின் அளவு போன்றவற்றினை அமைத்தல் ஆகும்.

Paragraph Formatting என்பது பல வாக்கியங்களைக் கொண்ட பந்தி அமைத்தலைக் குறிக்கின்றது.




(தொடரும்)



# படித்தோர் கருத்து

தற்போதைய இந்த தொழிநுட்ப காலத்தில் கணினி அறிவு ஒவ்வொருவருக்கும் அவசியமாக இருக்கிறது. எதிர்காலத்தில் கணினி இல்லாமல் எதுவும் இல்லை என்ற நிலை வரப் போகின்றது. நான் பல நாட்களாக தமிழ் கம்ப்யூட்டர் பத்திரிகை வரும் என எதிர்பார்த்திருந்தேன். அதன் பயனாக '**கம்ப்யூட்டர் ருடே**' என்ற பெயரில் தற்போது வெளிவந்து இருக்கிறது. இந்த பத்திரிகையில் தற்காலத்தில் தேவையான Office, Hardware துணுக்குகள், இணையம் பற்றிய தகவல்கள், வெளியாகின்றன. இவை யாவற்றையும் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். கம்யூட்டர் ருடே பத்திரிகை மேலும் வளர வாழ்த்துகிறேன்.

MIM Rifkhan, Kathankudy -06

---

**கம்ப்யூட்டர் ருடே** சஞ்சிகை, சகல தரப்பினருக்கும் பயனுள்ள சஞ்சிகை. என்னை முக்கியமாக கவர்ந்தவை மின்வணிகம், இணையத்தளவடிவமைப்பு முதலியன. மற்றும் வெளிநாடுகளில் வரும் புதிய தொழில்நுட்பம் பற்றி (சகலதும்) அறியத்தரும்படி வேண்டுகிறேன். இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்கள்.

செ.நந்தகுமார், திருநெல்வேலி கிழக்கு

---

நான் யா/இளவாலை கன்னியர் மடமகாவித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறேன். உங்கள் உதயன் IT Island மூலம் வெளியிடுகின்ற '**கம்ப்யூட்டர் ருடே**' என்ற புத்தகத்தை எனது பாடசாலை நூலகத்தில் இருந்து தெரிவுசெய்து கொண்டேன். அந்த வேளையில் நான் அதனை வாசித்த பொழுது எனக்கு மிகவும் பயனுள்ளதாகவே அமைந்துள்ளது.

ஜெ.ஜெயந்தி.

---

கணினி உலகில் மகத்தான சேவையாற்றும் **கம்ப்யூட்டர் ருடே** எனும் நூலானது எமது பாடசாலை மாணவர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. ஆனால் இதில் ஒரு குறைபாடுள்ளது. அது யாதெனில் இவ்விதழ் எந்தக் கடைகளில் விற்கப்படுகின்றது என்பது மாணவர்களிற்கு தெரியாமையாகும். அதற்காக நான் கூறும் ஆலோசனை என்னவெனில் "**கம்ப்யூட்டர் ருடே** இங்கே கிடைக்கும்" அல்லது "**கம்ப்யூட்டர் ருடே** இங்கே பெற்றுக்கொள்ளலாம்" என்ற வாசகங்கள் அடங்கிய ஸ்ரிக்கர் இனையோ பனர் இனையோ முகவர் நிலையங்களில் வைப்பதன் மூலம் இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்யலாம் என்பதாகும்.

ஆ.மயூரகீர்த்தன்.


Social Media for Business

யாழ் நகரில்

One Day Workshop
on 7th of May 2011

- உங்கள் இணைய வியாபாரத்தை பெருக்க
- உங்கள் இணையத்தளங்களை பிரபல்யப்படுத்த

ஓர் அரிய வாய்ப்பு !!

Contact 0777 722 018

Organized by
Gather Page
Internet Presence Solutions Provider
www.ictip.lk

Media Sponsor
கம்ப்யூட்டர் ருடே

# கட்டற்ற இணையப்பாவனைக்கு அகலப்பட்டை இணைப்பு (புரோட்பாண்ட் Broadband)

*(சென்ற இதழ் தொடர்ச்சி...)*

-தவா-

சென்ற இதழ்களில் கட்டற்ற இணையத் தொழில் நுட்பங்களின் வகைகள் பற்றியும் முதல் இரு வகைகள் பற்றியும் நோக்கினோம். மூன்றாவது வகையான மொபைல் புரோட்பாண்ட் பற்றி இங்கு விரிவாகப் பார்ப்போம்.

இது Wireless வகைக்குள் வருகிறது. இருந்த போதிலும் நகரும் போதும் கட்டற்ற இணைய வசதியினை தரவல்லதாக உள்ளது. இன்றைய நவீன உலகத்தில் இணையப்பாவனையின்றி எதுவும் இல்லை என்ற நிலையில் இத் தொழில்நுட்பம் மிக அவசியமாகின்றது.

மொபைல் போன் எனப்படுகின்ற கைத்தொலைபேசி இல்லாத வீடு, ஏன் நபர் எவரும் நம்மிடையே இல்லை என்கின்ற நிலை உருவாகி வருகிறது. பணக்காரர் முதல் அடிமட்ட பிச்சைக்காரர் வரை கைத்தொலைபேசியுடன் அலைகின்றனர். எங்கிருந்தாலும் தொடர்பு என்ற கருத்தி யல்பை நிறைவு செய்வது இந்த கைத்தொலைபேசி. அது போலவே எங்கிருந்தாலும் இணையம் என்று இந்த மொபைல் புரோட்பாண்ட் சொல்கின்றது. அதிகரித்த கைத்தொலைபேசி பாவனையும் அதற்காக ஏற்படுத்தப்பட்ட கோபுரங்களும் செய்மதிகளும் இதனை சாத்தியமாக்கி விட்டது.

இன்று இலங்கையில் எந்த மூலையிலும் ஏதாவது ஒரு கைத்தொலைபேசி சேவை வேலை செய்யாமல் இல்லை. அவ்வாறு வேலை செய்கின்ற இடங்களில் ஆகக் குறைந்தது GPRS (2G) தொழில்நுட்பத்திலாவது இணையவசதி பெற முடிகிறது. நான் கூற வருவது மொபைல் புரோட்பாண்ட் வெறுமனே GPRS இனை மட்டும் சேராது. அதையும் தாண்டி பேசும். அது 3G தொழில்நுட்ப வலையமைப்பான WCDMA, HSDPA வலையமைப்பினைக் குறிக்கும். இத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கட்டற்ற இணையப் பாவனைக்கு வழி சமைப்பதே மொபைல் புரோட்பாண்ட்.


உயர்ந்த வகை கைத்தொலைபேசி எனில் எமது கைத் தொலைபேசியிலேயே அதிவேக மொபைல் புரோட்பாண்ட் இணைப்பின் இணையத்தளங்களைப் பார்வையிடலாம். தொடர்பாடல்களை மேற்கொள்ளலாம்.

எமது கைத்தொலைபேசி 3G வசதி கொண்டதாயின் HSDPA மொடமாக அதனைப் பாவித்து நமது மடிக் கணினியுடனோ மேசை கணினியுடனோ இணைத்து கணினி யில் கட்டற்ற இணையப்பாவனைக்கு வழிவகுக்கலாம்.

இது எப்படி சாத்தியமாகிறது? சாதாரணமாக நாம் SIM என்று சொன்னால் தெரியாது என எவரும் சொல்ல மாட்டோம். எந்தவொரு கைத்தொலைபேசியிலும் இருக்கின்ற ஆட்டு விக்கும் ஆதி மூலம் இதுதானே. இதனூடாக தான் சகல தொடர்பாடல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. குறித்த கைத்தொலைபேசியின் முகவரியாக இது தானே தொழிற்படுகிறது. இந்த SIM இல் Data பரிமாற்றத்திற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்குமாயின் இணையத்தில் இணையலாம்.

கணினியில் மொபைல் புரோட்பாண்ட் வசதியை ஏற்படுத்த எமக்கு அவசியமானது HSDPA மொடம். இது உயர்ந்த வகை மொபைல் போன்களில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறான கைத்தொலைபேசிகள் நேரடியாகவே இதற்குப்பாவிக்கலாம். அதைவிட சிறப்பாக Dongle என்று அழைக்கப்படும் சாதனம் பயன்படுத்தப்படும். இது சாதாரணமாக நாம் பயன்படுத்தும் பென் டிரைவ் (Pen Drive) போன்று காணப்படும். இதற்குள் எமது கைத் தொலைபேசி SIM இனையோ அல்லது பிரத்தியேகமாகப் பெறப்பட்ட SIMஇனையோ இட்டு கணினியில் செருகி அங்கு நிறுவப்பட்டிருக்கும் மென்பொருளின் ஊடாக இணைப் பினைப் பெறலாம்.


ஒவ்வொரு நிறுவனத்தின் Dongle இற்கும் ஒவ்வொரு வகையான மென்பொருட்கள் பாவிக்கப்படும் சில வேளைகளில் ஒரே நிறுவன மென்பொருட்கள் பல வகை யான Dongle இற்கும் ஒத்திசைகின்றன. Dongle இனைப் பொறுத்த வரை Prolink, ZTE, T-Mobile, o2, HUAWEI போன்றன பிரபல்யமானவை. சில தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மேற்படி நிறுவனங்களின் Dongle இனை வாங்கி தமது நிறுவன பெயர் பொறித்து வாடிக்கையாளர் களுக்கு வழங்குகின்றன. இதற்காக இவை குறித்த நிறுவ னங்களுடன் ஒப்பந்தங்கள் செய்திருக்கின்றன. Dongle களில் எல்லா நிறுவனங்களின் SIM களினையும் போட்டு பாவிக்கலாம் ஆயினும் நமது நாட்டில் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தமது SIM மட்டுமே வேலை செய்யக் கூடியவாறு Program செய்திருக்கிறார்கள். ஆயினும் அவை இன்று இலத்திரனியல் வல்லுனர்களால் Unlock செய்யப்பட்டு அனைத்து SIM களும் பாவிக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படுவதை நாம் கற்போம்.




இந்த வகை எமது நாட்டில் Dialog , Mobitel , Airtel ஆகிய நிறுவனங்கள் மொபைல் புரோட்பாண்ட் சேவை வழங்குவதில் முன்னனி வகிக்கின்றன. தற்போது Dialog, Mobitel நிறுவனங்கள் மட்டும் வடக்கு கிழக்கில் 3G வலையமைப்பில் முன்னணி வகிக்கின்றன. Airtel இல் Mobile Broadband எமது பகுதிக்கு இன்னும் முழுமையாக விஸ்தரிக்கப்படவில்லை. 2G இணைப்பாக இவை வழங்கப் படுகின்றன.இதில் GPRS மட்டும் சாத்தியம்

3Gஇனை பொறுத்தவரை Dialog , Mobitel நிறுவனங் கள் கூட தாம் கால்பதித்த மாவட்டங்களில் அடிமட்ட கிராமங்கள் வரை முழுமையாக சரியான முறையில் தமது சேவையினை வழங்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நகரங்களை யும் அவற்றை அண்டிய பிரதேசங்களிலும் மட்டும்தான் எவ் வித தடங்கலுமின்றி இவர்களது Mobile புரோட்பாண்ட் சேவை வேலை செய்கிறது. இருந்தபோதிலும் ஆங்காங்கே முணு முணுப்புக்கள் இருக்கத்தான் செய்கிறது. இது வாடிக்கை யாளர்களினதும் நிறுவனங்களினதும் தனிப்பட்ட பிரச்சினை.

நாம் தற்போது உள்ள புரோட்பாண்ட் இணைப்பு வகைகள் பற்றியும் அவற்றினை எவ்வாறு இணைப்பது என்பது பற்றியும் தற்போது நோக்குவோம். இதில் Prepaid , Post Paid வகைகள் உள்ளன. Postpaid வகைகளில் unlimited Package வழங்கப்படும். Prepaid என்னும்போது அவ்வப்போது SMS ஊடாக குறித்த காலத்திற்குரிய இணைப்பு வசதியை பெற்றுக் கொள்வதைக் குறிக்கும்.




Postpaid எனும்போது மாதாந்த கட்டண அடிப்படையி லான இணைய இணைப்பினை பெறுவதாகும். இதில் மாதாந்த கட்டணத்திற்கேற்ப பாவனை எல்லை வரையறுக் கப்படும். unlimited எனும்போது மாதாந்த பாவனைக் கட்டணம் கூடுதலாக இருக்கும். எது எப்படியோ unlimited என்பதற்கும் ஒரு எல்லையுள்ளது. அது இலங்கை தொலைத் தொடர்பாடல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அளவினை கொண்டிருக்கும்


Dongleஇனை கணினியில் செருகியதும் நிறுவப்பட் டிருக்கும் மென்பொருள் தானாக திறந்துகொள்ளும் (முதலில் நிறுவப்பட்டிருந்தால்) நிறுவப்பட்டிருக்காத பட்சத்தில் அதனை நிறுவிக்கொள்ள வேண்டும். தோன்றிய மென்பொருள் தன்னுடைய தொடர்பில் உள்ள Dongle இன் SIM உடன் தொடர்புகொண்டு தற்போது வலையமைப்பில் இலக்கத்தினை இணைத்து அனைத்து வகை தகவலையும் தன்னுள் வாங் கிக்கொண்டு இணைய இணைப்பிற்கு தயாராகிவிடும். பிரதேசத்தில் குறித்த நிறுவனத்தின் வலையமைப்பில் GPRS,WCDMA,HSPDA சமிக்ஞைகள் இருக்கும் பட் சத்தில் தனக்கு Setting இல் வழங்கப்பட்டிருக்கம் இணைப் புக்களுக்கேற்ப பொருத்தமான வலையமைப்பினை தேர்வு செய்யும் நாம் connect இனை அழுத்தியவுடன் இணைப்பு ஆரம்பமாகிவிடும். இங்கே Dialog Dongle ஊடாக Mobile Partener மென்பொருள் உதவியுடன் இணைய இணைப் பினை ஒரு postpaid பொதியில் பெறுவதற்கான படிமுறை கள் படங்களில் காட்டப்பட்டிருக்கின்றன.

குறித்த profile பகுதியில் Network Type ல் WCDMA only என தெரிவு செய்வதன்மூலம் 3G வலையமைப்பினை மட்டும் உபயோகிக்கலாம். APN மட்டுமே மாற்றமடையக் கூடியதாக (உ-ம் Dilog Prepaid: **ppwap** , Dialog Post Paid : **dialogbb**) இருக்கும். அத்துடன் username, password பெரும்பாலான நிறுவனங்களின் பொதியில் வெறுமையாகவே இருக்கும். மோபைல் புரோட்பாண்ட் பொதிகளையும் கட்ட ணங்களையும் கீழ்வரும் நிறுவனங்களின் இணையத் தளங் களில் பார்வையிடலாம்.

http://www.dialog.lk/personal/broadband/hspa/packages/

http://www.mobitellanka.com/broadband/broadband.html

http://www.airtel.lk/AirtelSL/broadband/packages.html




(கட்டுரை நிறைவுபெற்றது)

## Your Right Choice For Degree Education!

# உங்கள்... O/L பெறுபேறுகள் ...
# பட்டதாரியாகும் கனவின் முதல் படி...

**O/L**
தகமையுடன் இணைந்து கொள்ளும் மாணவர்கள் **Foundation Cousre** ஒன்றின் மூலமாக **Diploma** கற்கைநெறிக்கு உள்வாங்கப்பட்டு **Advanced Diploma** கற்கைநெறியைப் பயின்று பட்டப்படிப்பினைத் தொடர முடியும்.




**Degree**
தகமையுடன் **Post Graduate Diploma in Computing** கற்கைநெறியைப் பயின்று பட்டப்பின்படிப்பினைத் பூர்த்திசெய்ய முடியும். பின்பு எமது நிறுவனத்திலேயே **M.Sc.** கற்பதற்கான ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

மேற்படிக் கற்கைநெறிகள் முடிவில் பெற்றுத்தரப்படும்
Cambridge Association of Managers(CAM-UK)
Isles International University
என்பவற்றின் சான்றிதழ்கள் இலங்கையில் உள்ள
British High Commission, High Commission of Malaysia மற்றும்
Democratic Socialist Republic of Sri Lanka, Ministry of External Affairs
என்பவற்றினால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்
இவற்றின் உறுதிப்படுத்தல்களடங்கிய சான்றிதழ்களை எமது அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

## NORTH LANKA IIT (Pvt.) Ltd.
Approved Centre of Cambridge Association of Managers(CAM-UK)
Partner Instituiton of ISLES Internationl University EU/Commonwealth
#113, Laxan Plaza, Navalar Road, Jaffna.
Phone: 0215677774
Web: www.northlankaiit.com |www.iiuedu.org


Book your tickets
and choose your
seat @ online
www.ebooking.lk
eBooking.lk
Bus Ticket Booking
உங்கள் பஸ் பயணத்தை இலகுவாக்குங்கள்.
உங்களுக்கான இருக்கையை நீங்களே தெரிவுசெய்து
சொகுசு பயணத்தை அனுபவியுங்கள்.
For more Details
E-mail: info@ebooking.lk
T.p: 0775314666
MANNINGS
HOME
PRINT TICKET
CANCELLATION
CHECKFARE
CONTACT US
eBooking.lk
Bus Ticket Booking


குறிப்பிட்ட
காலப்பகுதியில்
விரைவாக
சாரதி அனுமதிப்
பத்திரம் பெறுவதற்கு
ஆண், பெண்
இருபாலருக்கும்
அனுபவம் வாய்ந்த
ஆசிரியர்களால்
மும்மொழிகளிலும்
பயிற்சிகள்
வழங்கப்படுகின்றன...
கிருபா லேணர்ஸ்
Reg No: D9/589 அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பாடசாலை
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4353, 0777225292, 0715364822
கிளை : ஐயனார் வீதி, கச்சேரி
அருகில், கிளிநொச்சி.
தொ.பே.: 021 2285505,
0777238600
கிளை : மகாத்மா வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 3006560,
0718799190

**Hi-Tech Computer Training & Consulting Center**

# WinSYS NETWORKS®

*The network security training provider of the nation*

Tel: 011-2589567/8,011-4340666,0777 259927

No: 14, Schofield Place, Kollupitiya,
Colombo-03, Sri Lanka.
www.winsysnetworks.net
info@winsysnetworks.net

## தமிழ்/சிங்கள புத்தாண்டு சலுகை 2011

| Course | Fees |
|---|---|
| **CCNA** 640-802 | Course fees only Rs 12,000/- |
| **CCNA** Security 640-553 | Course fees only Rs 15,000/- |
| **CCNP** ROUTE - 642-902, SWITCH - 642-813, TSHOOT - 642-832 | Per Module Course fees only Rs 15,000/- |
| **CCIP/CCVP** | |
| **MCP** | Course fees only Rs 12,000/- |
| **MCTS** Server Administrator | Per Module Course fees only Rs 12,000/- |
| **MCITP** Enterprise Administrator, Server Administrator | Per Module Course fees only Rs 10,000/- |

**Language (English/සිංහල/தமிழ்)**

**Diploma In Hardware & Networking. 4000/=**

**Special Diploma In Network Administration. 7000/=**

* Lowest Fee In Sri Lanka
* 100% Practical With Real Cisco Products
* Individual Routers For All Students
* The Only Institute To Have Four Cisco Labs In Colombo
* Can Do Practical At Three Locations (Colombo /puttalam/kandy)
* Unlimited Practical Hours
* Cisco Qualified Lecturers With Intensive Industrial Experience
* Course Completion Certificate * In House Lecturers
* Individual Attention To Everyone In The Class
* Modern Labs With A/C Environment
* Success In Exam * Printed Tutorials & Cd's
* More Than 160 Cisco Routers & Switches For Your Practical
* Be Certified Internationally

**REFER 5 STUDENTS FOR ANY TRAINING GET YOUR TRAINING TOTALLY FREE**

**Branches**

E-win NETWORKS - Kandy. 081-2203785/6 - 0777-047708
Twin-WIN ICT Professional - Puttalam. 032-2267477

*Tertiary and Vocational Education Commission - Sri Lanka :- Reg.No:- P01-/0402*

Microsoft CISCO php MySQL Sun ORACLE EC-Council Java Linux